
காஞ்சனா ஜெயதிலகர்

# 1



அது 1985-ம் ஆண்டு.

சூடான கடலையைக் கைகளால் தேய்த்து ஊதினாள், வேதா. இளஞ்சிவப்புத் தோல் பிரிந்து, பறந்து, உதிர்ந்தது, பூவிதழ் போல.

மொட்டு மொட்டாய் உரித்த வேர்க்கடலையைச் சிறு வெள்ளிக் கிண்ணத்தில் இட்டு, துண்டு வெல்லத்துடன் வழக்கமான முக்காலியில் வைத்தாள்.

"ம்... நோயாளிகளைப் பார்க்கும் நேரம் எப்போ முடியும்னு காத்திருக்கது இதற்காகத்தான் வேதா."

பரபரவென்று கைகளைத் தேய்த்துக்கொண்டு உற்சாகமாய் அமர்ந்தார், டாக்டர் விஜயரங்கம்.

அவரது உதவியாளரான வேதா புன்னகைத்தாள்.
"டாக்டரை போலில்லை... ஒரு குழந்தை போலிருக்குது உங்க பேச்சு."
"படிப்புக்கும் மனசுக்கும் சம்பந்தமென்ன?"
"மனம் பண்படத்தானே படிப்பு!"
"என்னைவிட 17 வயசு இளையவ நீ. கிழவியாட்டம் பேசற?"
"இனி பேசப்போறது நீங்கதான்" –மருத்துவக் கருவிகள், மருந்துகளை அதன் இடத்தில் ஒதுக்கி முடித்தவள், வந்து அமர்ந்தாள்.
"கடலை எடுத்துக்கோ."
"இருக்கட்டும் டாக்டர். வீட்டில் என் தங்கைக் காத்திட்டிருப்பா."
"பதினைஞ்சே நிமிடந்தானே என்கூட கதைப் பேசறே! பிறகு நானே உன்னை காரில் கொண்டுபோய் இறக்கிடுவேன் இல்லையா?"
"ம்... உங்க கதைகளும் சுவாரசியந்தான்!"
சம்பளம் தருபவரிடம் நயந்துதானே போக பேசவேண்டி இருக்கிறது!
விஜயரங்கம் கப்பற்படையில் மருத்துவராய் பணியாற்றியவர். யுத்த நேரத்தில் பல பரபரப்புகளை கண்டு சமாளித்தவர்.
1971-ல் நடந்த யுத்தத்தைப் பற்றி பல கதைகள் சொல்வார்– அலுக்காது.
"இந்தியப் படையிலே பெரிய கப்பல் அதுதான். அதை வீழ்த்த எதிரி படை வாறதாய் தகவல் கிடைச்சது, வேதா. பற்ற வச்ச திரி பரபரவென்று குறைஞ்சிட்டே போகும். அப்போ எங்க பதற்றமோ நொடிக்கு நொடி அதிகமாச்சு! கப்பற்படை அதிகாரிகளின் திட்டப்படி ஒரு போலிக் கப்பல் தயாராயிடுச்சு. பலிகடாவாய் அதை அனுப்பிட்டோம். எங்களுடைய தப்பான தகவல்களை ஒற்றுக்கேட்ட எதிரியின் நீர்மூழ்கிக் கப்பல், அதை நம்பியும்விட்டது. பிறகு, தப்பான கப்பலைத் தொடர்ந்தது, அதை அழிப்பதற்காக!"
பேச்சு சுவையாக இருந்தாலும் வேதாவின் மனம் பாதிதான் அங்கு. மீதி தங்கையிடமாய் தவிக்கும். அவளைவிட பத்து வயது இளையவள், தேவி. அப்பா சமையற்காரர்– அதுவும் உள்ளூர் உணவகத்தில் இல்லை. வடஇந்தியாவின் பக்தி தலங்களுக்கு விஜயம் செய்யும் கோஷ்டிகளுடன் பயணப்படுபவர்.



போகும் குழுக்களுக்கு எளிய, தேவைப்பட்டால் பத்திய சாப்பாடு என்று சமைக்கும் தொழில். வீடு தங்க முடியாது. அம்மா முகம் மறந்தேபோனது. தங்கை பிறந்த ஒரு ஆண்டுக்குள் 'டைபாய்டு' காய்ச்சல் என்று படுத்த அம்மா.
தனக்குத்தானே பத்தியமாய் சமைக்க அறியாது, குழந்தைகளுக்குச் செய்ததையே தானும் இரண்டு வாய் அள்ளிப்போட்டு காய்ச்சல் அனலாகிப் பின் ஒரேயடியாக குளிர்ந்துபோன அம்மா.
பழைய பிளாஸ்டிக் மாலை ஆடும் தாயின் படத்தைப் பார்த்துதான் தேவி 'ம்மா... அம்மா' சொல்லப் பழகியது. அக்கம் பக்கத்தார் ஆதரவில் வளர்ந்த குழந்தை.
பள்ளிப் படிப்பு முடித்ததுமே வேதா வேலை தேடலானாள்.
"படியேன்" என்றார், அப்பா.
"போதும்ப்பா. இனி தேவியைப் படிக்க வைக்கலாம்."
வேதா நடுத்தர உயரம், நடுத்தர உடம்புவாகு. நிறமும் கருப்பு வெள்ளைக்கு நடுவே! ஆனால், அழகு முதல்தரம்!
பழைய சினிமா தாரகை வாணிஸ்ரீயின் ஜாடை. ஆனால், கண்கள் நல்ல நீள விசாலத்துடன் மின்னும்.
அவளை தன் நண்பரின் அலுவலகத்தில் பார்த்த டாக்டர் விஜயரங்கம்–
'வேலைதானேம்மா? நான் தர்றேன்' என்று அழைத்துக் கொண்டார். புது நோயாளிகளுக்கு சீட்டு எழுதி, பின்னாளில் அவர்கள் வரும்போது அதைத் தேடி எடுக்க வேண்டும். ஊசி அல்லது கட்டு போடும் வேளைகளில் தேவைப்படும் உபகரணங்களை நீட்டுவது. இரத்த அழுத்தம் பரிசோதிப்பது, நாடித்துடிப்பு அறிவது என்று பயிற்சியின் எளிதானவைதான். தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகள் அங்கு இல்லாததால் அதிகம் கற்கத் தேவை இருக்கவில்லை.
மாலை நான்கிலிருந்து ஏழு மணி வரை மூன்றே மணி நேரம்தான் நோயாளிகளைப் பார்ப்பார், விஜயரங்கம். தடுப்பூசி, வறட்டு இருமல், காயம், கட்டி என்று நல்ல கூட்டம்தான். பிறகு, ஏழரை வரை கடலையை மென்றபடி கதைகளைப் பேசுபவர், அடுத்த ஐந்தாம் நிமிடம் அவளை அவளது வீட்டில் இறக்கிவிடுவார்.
"ஒன்பது வரை கிளினிக் திறந்திருக்கலாம், டாக்டர். கூட்டம் வரும்?"
"நீ இருக்கியா, சொல்லு. பத்து மணிவரைகூட இருக்கேன்."



சிறு புன்னகையுடன் நழுவிவிடுவாள்.
நல்ல சம்பளம் தருபவர். இந்த வேலையில் சேர்ந்து ஓராண்டு ஆகிறது. தொல்லையில்லை, தங்கையுடன் மாலை நேரம் ஒன்றாக இருக்க முடிவதில்லை என்பதைத் தவிர.
"எதிரிக் கப்பல் மிக நெருங்கியதும், தயாராயிருந்த நம் கப்பல் அதன் மீது குண்டுகளை வீசியது. நீர்மூழ்கிக் கப்பல் சிதறி விசாகப்பட்டினம் அருகே பல மைல்களுக்கு கடலில் எண்ணெயும் உலோகத் துண்டுகளுமாய் மிதந்திருந்தது. அமெரிக்காவில் இருந்து நம் எதிரிகளால் வாடகைக்கு எடுக்கப்பட்டது, அது."
"நம் பெரிய கப்பலுக்குச் சேதம்?"
"அது பத்திரமாய் அந்தமான் தீவு ஒன்றில், நின்றது. பல தடவை அதில் போயிருக்கேன். 1400 பேர் இருந்தாத்தான் கப்பலை எடுக்க முடியும். அத்தனை பேருக்குத் தேவையான உணவு பொருட்கள், மருந்து அனைத்தும் சுமந்தபடி கப்பல் போகும்."
"எல்லாம் பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள்தானே?"
"மீன் மட்டும் புத்தம் புதிதாய் கிடைக்கும், துள்ளத் துடிக்க! இயந்திரப் படகுகளில் நடுக்கடல் வரை இறால் மீன் பிடிக்க வருவார்கள்– அப்பவே அந்த வகை மீனுக்கு அதிக விலை, கிராக்கி. ஆனா, அது எங்களுக்குப் பத்து லிட்டர் டீசலுக்கு கிடைக்கும்."
"அதாவது பண்டமாற்று போல?"
"அதுவேதான். டீசல் கிடைத்தால் அவன் இன்னும் கடலில் ரெண்டு சுற்று சுற்றி வலை போடலாம். கப்பலின் உயர்மட்ட அதிகாரிகளுக்கு மட்டும் அந்த இறால் வறுவல் கிடைக்கும்! அது தனி உலகம், வேதா."
"ரொம்ப ரசிச்சிருப்பீங்க. ஆனால், உங்களைப் பெற்றவங்க?"
"அவங்களுக்குப் பிடிக்கலை. நமக்கு வேண்டிய பணமிருக்கு. படிப்பிருக்கு. அம்சமான பெண்ணாய் பார்த்து கல்யாணம் பண்ணிட்டு இங்கே ஒரு மருத்துவமனை நடத்துன்னாங்க. என் அண்ணன் இருந்தாரே அதுக்கெல்லாம், பிறகென்ன? என் படிப்பு, உழைப்பு தேசத்திற்காகப் பயன்படணும்னு நினைச்சேன்."
"ஆனா, நீங்க கப்பற்படையில் பணிபுரிஞ்சது சில ஆண்டுகள்தான், இல்லையா டாக்டர்?"
"ம்... எல்லாம் முடிஞ்சப்புறம் இருக்க அவசியமில்லை" என்றார், ஒருவித சோகத்துடன்.



"யுத்தம் நல்லபடி முடிஞ்சது. பெரும் நிம்மதிதானே!"
காலித் தட்டை நகர்த்திவிட்டு அவளை ஆழப் பார்த்தார்.
"என் வாழ்க்கையே முடிஞ்சதுன்னு வை. துடிப்பான இளைஞனாய் போன நான் கூடாய்தான் திரும்பி வந்தேன்."
அவளுக்குப் புரிந்தது போலவும், புதிராகவும் இருந்தது.
அதனால்தான் டாக்டர் திருமணம் செய்துகொள்ளவில்லையோ!
ஆனால், அத்தகு சிந்தனைகள் சில விநாடிகள்தான். பின் மனம் வீட்டுக்கே ஓடிப்போகும், தங்கை தேவியைத் தேடி.

## 2

சினிமா பாடலை முணுமுணுத்தபடி துணி தைத்துக் கொண்டிருந்தாள், வேதா.
"உன்னை நான் சந்தித்தேன்...
நீ ஆயிரத்தில் ஒருவன்."
காலை பத்து வரை அவளருகே வானொலி பாடும்.
பிறகு, தனக்குத்தானே ராகம் இழுத்தபடி இயந்திரத்தை ஓட்டுவாள். அதுவும் சுருதிப்பெட்டி போல ரீங்கரிக்கும்.
ஆண்டு எண்பதுகளில் இருந்தாலும் அவளுக்குச் சற்று பழைய பாடல்களைப் பாடத்தான் பிடிக்கும்.
படிக்கும் காலத்தில் கருத்தாய் அப்பாடல் வரிகளை மனனம் செய்ததால் இருக்கலாம். வரிகளைத் தேடித் தேடி பாடவேண்டிய அவசியமன்றி, அவைதானே சுலபமாய் பிடிபடும் சுகத்திற்காகவும், சிறுவயதின் கவலையற்ற நாட்களை மீண்டும் உணரும் அனுபவத்திற்காகவும் இருக்கலாம்!
எல்லாவற்றையும்விட அத்தனை ஆயிரம் ஆடவரிலும் அவன் தனித்துத் தோன்றிய பிரியத்தினால்.
அவன்...? ரகு.
சற்று நேரத்தில் வருவான்.
'என்ன ஆச்சா?' என்ற கேள்வியும், புன்னகையுமாய்!
அவன் தங்கையின் இரவிக்கைகள் இவளிடம்தான் தைக்க வரும். அவன்தான் தந்து, வாங்கிப் போக வருபவன். இப்போது பரிச்சயம், பிரியமாகிவிட்டது!

அப்பா இல்லாதப் பெண்கள் என்று உபகாரம் செய்வதில் ஆரம்பித்தது நேசத்தில் தொடர்கிறது.

இரவிக்கையின் கடைசி ஊக்கைப் பொருத்தியபின் நூல் பிசிறுகளைத் தட்டிவிட்டு, அழுந்த மடித்தாள். செய்தித்தாள் ஒன்றில் சுற்றியபோது சைக்கிள் மணி கேட்டது.

"முடிச்சேன், வந்துட்டாங்க."

"நேரத்துக்கு முடிச்சிடுவேன்னு தெரியும். என்னா..."

"சொல்லி முடிக்கணும்."

"அப்பத்தானே எங்கூட சாவகாசமாய் பேசலாம்!"

"அது உண்மைதான். பல ஜோடிகளைப் போல அவர்கள் கடற்கரை, சினிமா, பூங்காக்களைத் தேடிப்போவதில்லை. எல்லா சந்திப்பும் இந்தக் கரைபடிந்த நான்கு சுவர்களுக்கிடையேதான்.

வாசல் கதவு திறந்திருக்கும். இருவரிடையே கண்ணியமான இடைவெளியும்கூட.

"காப்பி போடுறேன்."

"கடையில சின்னப் பையன் மட்டுந்தான். நான் போகணும், வேதா. நீ காத்திருப்பியேன்னுதான் வந்தேன்."

"அப்ப சாவகாசமாய் பேசுறது எப்போ!" சற்றுக் கவலையுடன் கேட்டாள்.

"ஞாயிற்றுக்கிழமை கடை இல்லை... அன்னைக்கு?"

"ஊகூம், தேவி வீட்டிலே இருப்பா. ஞாயிறு முழுக்க அவகூடத்தான்."

"எங்கூட நாலு வார்த்தைப் பேசக்கூடாதா?"

இரவிக்கையைப் பெற்றுக்கொண்டு பணம் நீட்டினான்.

"வேணாங்க."

"உழைப்பு, நூல், ஊசிக்கு எதிலே குறை வச்சே? வாங்கிக்கணும்."

"ம்..."

"முகம் வாடி இருக்கு?"

"பேசணும்."

"சரி, சொல்லு?"

"நேரமில்லைன்னு பறக்கிறீங்க."

"இருக்கேன். என்ன விசயம்?"

"டாக்டரை பத்தி..."

"நினைச்சேன். நைட்டியில் உனக்கு இப்போது நல்ல பேரு. தெரு முழுக்க உங்கிட்டதான் துணி தர்றாங்க. பகல் முழுக்க

முதுகு ஒடிய தைச்சிட்டு, பிறகு அடுத்த வேலைக்கு ஓடணுமா, வேதா? தவிர, அவரைப் பற்றி நீ சொல்றதும் ரொம்பப் பாந்தமில்லை. வேர்க்கடலை உடைச்சுத் தந்து, அவரோடு பேசிட்டு வரணுங்கிற தேவையே இல்லை."

"அப்பா அனுப்புற பணம் வாடகை, மளிகைக்குத்தான் போதும். ஒரு இரவிக்கைத் தைக்கக் கூலியில் செலவு போக கொஞ்சம் நிற்கும். நாள் ஒன்றுக்கு எத்தனை தைச்சிட முடியும், ரகு? டாக்டர் முழுசாய் ஆயிரம் தர்றார்."

அவன் சிறு அங்கலாய்ப்பும் அன்புமாய் அவளையே பார்ப்பான்.

"கல்யாணம் ஆகிறதுக்கு முன்னே என்கிட்ட பணம் வாங்கிறது தப்புங்கிறே. அப்போ உடனே கல்யாணத்தை முடிச்சிடலாம். நானும் ஒரு கை தருவேன்ல?"

"நம்ம கல்யாணத்துக்கான அவசியம் வந்திருச்சுங்க. பணத்துக்காக இல்லை, பாதுகாப்பிற்காக."

"இப்போ நீதான் முழுங்கி முழுங்கிப் பேசுற."

"நேத்து இராத்திரி டாக்டர் கொஞ்சம் குடிச்சிருந்தார் போல... மழையும் அதிகம். நான் உடனே கிளம்ப முடியலை... அவரது பேச்சு நீண்டுட்டே போனது..."

"ம்..." முகம் இறுகினாலும், குறுக்கிடாமல் கேட்டான்.

'ஜன்னல் திரையை இழுத்துவிடேன், வேதா. மின்னல், கண்ணைப் பிடுங்குது.'

சொன்ன டாக்டரின் விழிகளில் சிவந்து, பழுத்துக் கிடந்தன. தங்கை தேவியைப் பற்றிய கவலை எண்ணங்களுடன் இயந்திரமாய் இயங்கினாள், மூத்தவள்.

'வேதா, எனக்குக் கல்யாணக் கனவுகள் அதிகம் இருந்ததில்லை. அதுவும் நல்லதுக்குத்தான். ஆனால், உன்னைப் பார்த்தபின் ஒரு துணை இதமான பெண்ணின் அருகாமை ரொம்ப அவசியங்கிறது புரியுது... நாள் முழுக்க நான் ஆவலாய் காத்திருப்பது இதற்காகத்தான். இந்த பதினைந்து நிமிடங்களுக்காகத்தான். உன் முகம் பார்த்து பேசும், சிரிக்கும் இந்தப் பொழுதிற்காகத்தான். இன்னைக்கு மழையின் புண்ணியத்தால் அது முக்கால் மணி நேரமாக நீண்டிருக்கிறது. இதுவே நாள் முழுக்க– என் வாழ்நாள் முழுக்க நீடிக்க முடியுமானால்...'

பார்வை கொதிப்பாய் அவளை வருடியது.

வேதாவின் நினைவுகள், அதுவரை இலக்கின்றி அலைந்தவை...



நிலைகுத்தி நின்றன.

புதிதி முழுக்க நிகழ்காலத்தில் கூர்மையானது.

கவனமாய் பேசினாள்.

வெளியே சொரிந்த மழை... ஜன்னலின் கண்ணாடியில் படர் படர் என்று அறைந்த நீர்த்துளிகள் அவள் கவனத்தைக் கலைக்கவில்லை.

'எல்லோர் வாழ்க்கைக்கும் துணை அவசியம்தான், டாக்டர். தெரிந்தவர்களிடம் உங்களுக்கு ஏற்றாற்போல ஒரு பெண் பார்க்கச் சொல்லுங்களேன். சமீபகாலமாய் செய்தித்தாளில்கூட 'மணமகன் தேவை' போன்ற விளம்பரங்கள் வருகின்றனவே.'

'சுற்றிவளைத்துப் பேசாதே, வேதா.'

'37 என்பது அதிக வயதில்லை. உங்கள் படிப்பிற்கு, அந்தஸ்திற்கு, குடும்பத்திற்கு தகுந்தாற்போல...'

'வயதிற்கும் தகுந்தாற்போல என்கிறாய் இல்லையா? என்னை விட ரொம்பச் சின்னவள் நீ என்றாலும், என் மனதிற்கு அமைதியும் மகிழ்வும் தருவது நீதான். உன் அருகாமையில்தான் எனக்கு ஆசைகள் துளிர்விடுகின்றன. அதாவது உலகில் வாழும் ஆசை.'

அவர் வேகமாய் பிதற்றினார்.

இனியும் சொல்லாதிருப்பது தப்பு என்று பட்டது.

'நான் ஒருவரை விரும்புறேன், டாக்டர். அவர் பெயர் ரகு. வெளதாய் மருந்துக்கடை வச்சிருக்கார். உங்களுக்கு மருந்து சீட்டுக்கான 'பேடு' அடித்து எடுத்து வந்தபோது ஏற்பட்ட சந்திப்பு... பிறகு பழக்கமாச்சு...'

அவர் முகம் கறுத்தது.

'மாட்டேங்கிறியா?' குரலில் உறுமல்.

'எனக்கு அதுபோன்ற எ...எண்ணமே இல்லையே டாக்டர்.'

வேகமாய் அவர் எழ, வெள்ளிக் கிண்ணம் விழுந்து உருண்டது.

'என்னைக்கும் இல்லாம இப்ப நான் ஒரு 'பெக்' போட்டேன், இல்லைன்னா உன்னே உறுத்துறதைச் சொல்ல தைரியம் வரலைன்னு... ஆனா, இப்போ உன்னைக் கொல்ற அளவு துணிவிருக்கு.'

'அது துணிவில்லை... ஆத்திரம்' அவள் நிதானமாகவே எடுத்துச்சொன்னாள்.

'உனக்கு அகங்காரம்... எனக்கு ஆத்திரம்.'

'உங்களை மதிக்கிறேன், டாக்டர். ஆனால்...'

'ஒரு அன்னக்காவடிக்கு மாலையிடப்போகிறாய், அதுதானே?



இது வீடில்லை, மாளிகை. மருத்துவம் படிச்சுட்டு கைகட்டிட்டு கம்மா இருக்கவேண்டாமேன்னுதான் வேலை பார்க்கிறேன். மற்றபடி, தினம் விருந்தும், பாட்டுமாய் கழிக்கும் அளவு பணம் இருக்கிறது. பரம்பரை வசதி– இனி எனக்குப் பிறகு பரம்பரையும் இருக்காது. ஆக, நாம அனுபவிச்சே அழிக்கலாம். கசக்கிறதா?" ஊன்றிப் பார்த்தவரின் கண்கள் சிறுத்தன.

சொல்வதறியாது நின்றாள், இவள்.

'இதெல்லாம் கொடுத்தென்ன? பிள்ளைத் தர முடியாதவன் நீ– ஏன் இல்லற சுகத்திற்கும்கூட லாயக்கற்ற பேடி... அப்படித் தானே நினைக்கிறே?'

குழந்தை போல விசும்ப ஆரம்பித்தார், விஜயரங்கம்!

இத்தனையையும் ரகுவிடம் சொல்லி முடித்த வேதாவும் விசும்பலானாள்!

## 3

வெகுவிரைவிலே வேதா– ரகு திருமணம் முடிந்தது. டாக்டரோ, அவர் வாழ்த்தோ போகவில்லை.

ஆனால், அக்குடும்பத்தின் மீது ஒரு கண் வைத்திருந்தார்.

அவள் பிள்ளைப்பேறு கண்டிருந்தபோது இவர் வயிறு எரிந்ததில்... வேதா இல்லாமல் போனாள்.

ஜன்னி என்றார்கள்– கவனியாத மஞ்சள்காமாலை என்றார்கள்.

வயிற்றுப் பிள்ளையோடு போயேவிட்டாள்.

நிலைகுலைந்த ரகு, கடையை விற்றுவிட்டு, தனது தங்கைத் திருமணத்தை முடித்தான். பிறகு, வடநாட்டுக்குப் போய்விட்டதாகத் தகவல்.

வேதாவின் தங்கை தேவி தூரத்து பாட்டி வளர்ப்பில் வாடிக்கொண்டிருந்தாள்.

வாகான நேரம் பார்த்து இவர் போய் நின்றார்.

'வேதாவின் இறப்புப் பற்றிக் கேட்டதும் சங்கடமாப்போச்சம்மா. ஒன்றரை ஆண்டு என்னிடம் வேலை பார்த்த பொண்ணு. ரொம்ப பாசம் வைச்சிருந்தேன். இப்போ அவ தங்கை...?"

'இருக்கா, எல்லாத்தையும் முழுங்கிட்டு முழுசாய் இருக்கா.



முத்தது இந்த சேதியில் அப்பனுக்கு சித்தம் கலங்கிருச்சு போல. கண்மைக்கரையில இரிவுறானாம். காசும் அனுப்புறதில்லை. என்கிட்ட என்ன அமுதகரமியா இருக்குது... என்னய்யா? இவளை வேலைக்கு எடுத்துக்க முடியுமா? குட்டிகையானவ.'

'தத்து எடுத்துக்கிறேனே... அதாவது, அவ முழு பொறுப்பையும் ஏத்துக்கிறேன்.'

மறுகணம், கிழவியின் வாயும் விழியும் விரிந்தன.

'உங்கக் குடும்பம், சம்சாரம்? அவுங்க சம்மதிக்கணுமே?'

'எனக்கு யாருமில்லை. அண்ணன் குடும்பம் மட்டும்தான். வேண்டிய சொத்து இருக்கு. கூட இருந்து பிரியங்காட்டி சுகமாய் அனுபவிக்கத்தான் ஆளில்லை.'

வெல்லமாய், வெண்ணையாய் பேசியதில் மறுவாரமே தேவி அவர் வீட்டுக்கு வந்துவிட்டாள். சில ஆயிரங்களுக்குப் பதிலாக அனுப்பிவிடப்பட்டாள்!

தூக்கியெறியப்பட்ட கனியை டாக்டர் கையேந்திப் பெற்றுக் கொண்டார். அவருக்கு அது, அபூர்வக் கனியும்கூட அல்லவா?

அக்காவின் சாயலை பிரதிபலித்த தேவி, அழகில் அவளை விஞ்சினாள்.

கொடி உடல்வாகு, தாழம்பூ நிறம்– மின்னல் வகிடின் இருபுறமும் கருஞ்சிறகாய் பொங்கி எழும் அடர்ந்த கேசத்திலிருந்து ஜோடிப் புறாவாய் தத்தி நடக்கும் வெண்பாதங்கள் வரை பழுதில்லாத அழகு!

அவளைச் சிறந்த பள்ளியில் சேர்த்தார்.

அவளும் கருத்தாய் படித்தாள்.

இசை, விளையாட்டு என்று அனைத்திலும் பிரகாசித்த முழுமையான கல்வி இடையே ஒரு ஆண்டு படிப்பு தடைபட்டதால் அவள் பள்ளி முடித்தபோது 18 வயதைப் பூர்த்தி செய்திருந்தாள்.

அழகும் பண்பும் முழுமைப்பட்டிருந்தன.

செல்வம் செழுமையைப் பூசி இருந்தாலும், தான் இதற்கெல்லாம் உரியவள் இல்லை என்ற உணர்வில் அடக்கமும் வாய்த்திருந்தது.

'நீ கல்லூரியில் சேர முழுசாய் மூணு மாசமிருக்கே, தேவி? அகாடமியிலே ஒரு படிப்பில் சேரு. சமையல், காரோட்டுதல், உபசரிப்பு, மலர் அலங்காரம், ஓவியம் என்று பலதும் கற்றுக்

கொள்ளலாம். பிற்காலத்திற்கு உபயோகம்' அறிவுறுத்தினார்.

"சரி மாமா."

அவள் அவரிடம் அதிகம் பேசுவதில்லை. பேசினால் அது ஆமோதிக்கத்தானாய் இருக்கும்.

'என்னிடம் பயமா தேவி?'

'இல்லை மாமா.'

'சிநேகிதங்க வீட்டில் பிள்ளைங்க என்னவெல்லாம் வாயாடு துங்க... கலாட்டா செய்யுறாங்கிறாங்க... நீ அது ஒன்றும்...'

'அவசியமில்லையே.'

புன்னகைத்தவளின் கன்னக் குழைவு, அச்சாய் வேதாதான். விழி நிறையப் பார்த்தார்.

அவ்விருமுறை காலத்தில் அவர் வீட்டில் பல விருந்துகள். அவற்றின் நாயகி தேவிதான்!

ஒவ்வொன்றுக்கும் புதுப்புது உடைகள் வாங்கித் தருவார். அவளும் கற்றுக்கொண்ட புதுவித சமையல் வகைகளைத் தயாரித்துப் பரிமாறினாள்.

வந்தவர்களிடம் 'அன்னாசிப்பழ கேக் சாப்பிடுங்க அங்கிள்.'

'நானே தயாரித்த இஞ்சி- எலுமிச்சை பானம்- கலந்துத் தரவா?' என்று தனக்கான பங்கினைக் கச்சிதமாய் செய்தாள்.

ஆனால், அவள் பாதை பிறழ்ந்ததும் அப்போதுதான். அதைப் பிழை என்று சொல்ல முடியாது. வயதும் மனதும் சேர்த்து ஆட்டுவிக்கும் பருவம், அது.

விரும்பிய கல்லூரியில் இடம் கிடைத்துவிட்ட மகிழ்வில் இருந்தாள், தேவி.

அன்று எதிர்பாராத மழை.

மழை செய்யும் மாயங்கள் யாவும் நிகழ்ந்தன.

காற்று சிலுசிலுப்பு பெற்றது.

மண்ணுக்கு மணம் சேர்ந்தது.

இரவு மோகனமாய் கிறக்கியது.

இனி வெளியே போகும் தேவை ஏற்படாது என்று அவள் உடை மாற்றினாள்.

வெள்ளையில் சிறு சிவப்பு பூக்களிட்ட இரவு உடை.

மெல்லியதாய், கழுத்துப் பக்கம் இறக்கமாய்...

பின்னலைப் பிரித்துப் போட்டு சில, கரும்பட்டாய் பளபளத்தது, கூந்தல்.

சாதாரணமானவர்களுக்கு மழை நேரத்திற்குத் தேநீர்



போல- விஜயரங்கத்திற்கு ரம்!

'குட்நைட்' தேவி சொல்ல, வந்தவரின் விழிகள் கனன்றன.

'குட்நைட் மாமா.'

'இரவுக்கு ஏற்ற உடை.'

முடியைக் கோதுவது போல, தன் உடம்பின் மேல் பாதியை கரங்களால், கூந்தலால் மறைக்க முயன்றாள்.

'இதேபோல ஒரு மழை நாளில்தான் நான் வேதாவிடம் என்னை மணக்கக் கேட்டேன், தெரியுமா?' டாக்டரின் பேச்சு சற்றுக் குழறியது.

'ஓ...?'

'ஏன் தேவி... இப்போ உன்னிடம் நான் அதே கோரிக்கையை வைத்தால்...!' குரல் கெஞ்சியது.

'நாம பேசி முடிவெடுத்தால் நிம்மதியாய் தூங்குவேன். முடிவைச் சொல்லு."

'என்... என்ன முடிவு?'

'என்னை நீ கல்யாணம் பண்ணிக்குவே இல்லியா?'

'நீங்க எனக்கு அப்பா போல மாமா!'

'என் வயசு 44. உனக்குப் பதினெட்டு. வயசுப்படி உறவுமுறை அப்படித்தான். ஆனா, நீ வேதா சாயலில் இருக்கியே பெண்ணே? நீ கிடைச்சா அவளே கிடைச்ச திருப்தி எனக்கு. அதனாலேதான் எங்க அண்ணன் மறுத்துச் சொல்லச் சொல்ல பிடிவாதமாய் உன்னை ஏத்துகிட்டேன்?'

விஜயரங்கத்தின் அண்ணன், அண்ணிக்கு இவள் வீடு புகுந்ததில் பிரியமில்லை. சொத்து பிரியுமே! பிரிந்தால் குறையுமே என்கிற பதைப்பு! அவர், போரில் ஆண்மை இழந்து வந்ததில்கூட அவர்களுக்குச் சின்னக் குரூர திருப்தி உண்டு. ஆனால், அவர்கள் சதா தேவியைக் குறை கூறியும் விஜயரங்கம் மசியவில்லை.

'ஆனா... எல்லாம் இதற்காகத்தானோ என்று சந்தேகப்படாதே தேவி. வேதா முகத்தை இன்னும் கொஞ்ச காலம் உன்னில் பார்க்கலாமேங்கிற ஆவல்தான் எனக்கு. இத்தனை நாள் பள்ளி விடுதியில் வளர்ந்து நீ ஒரு முழு பெண்ணாகி இங்கு வளைய வருவதில் வீடு தனி சோபை பெற்றிருக்கிறது. அது நிரந்தரமாகணும்.'

'இல்லை... இல்லை மாமா' பதறினாள்.

'ஏன், நான் ரொம்ப வயசானவனாய் இருக்கேனா?' கெஞ்சியபடி குழைந்தார்.



'அதில்லை...'

'அதான் அதேதான்! தவிர, உன் இளமைக்கு நான் தோதில்லை- உன்னைத் தாயாக்கும் தகுதி அற்றவன்- அதுதான்!'

'ஐயோ... எனக்கு இதெல்லாம் தெரியாது, மாமா. யோசித்ததில்லை, இப்படி.'

இந்த 'திடீர்' அதிர்ச்சி அவளால் தாங்கக்கூடியதாய் இல்லை.

'இப்போ யோசி. நன்றியுள்ள இதயத்தோடு யோசி. சம்மதம்ன்னு சொல்லு.'

'முடியாதே மாமா.'

'ஏன்?' சீறினார்.

அவள் முகத்தருகே சீறியவர் வாயில் ரம் வாடை.

'நான் ஒருத்தரை விரும்புறேன். அவர் பேர் ராஜு. அவரும் என்னை ரொம்ப விரும்புறார். சீக்கிரம் பெண் கேட்டு வருவார்.'

பல்லைக் கடித்த குரூரத்தில் அவர் சிறுத்தையைப் போலிருந்தார்.

'நாயே... நன்றிகெட்ட நாயே! உங்க அக்காளைப் போலவே நீயும் என் முகத்தில் கரி பூசிட்டியே' -ஓங்கி அறைந்தார், தேவியை.

## 4

**கா**ற்றின் குளிர் கூடியிருந்தது.

விழி மூடி, பஸ்ஸின் ஜன்னலில் சாய்ந்திருந்தவன் ஜன்னலின் கண்ணாடியை இழுக்க முயன்றான்.

"இருங்கம்மா, நான் மூடுறேன். குளிருதா?" பெரிய மனுசத் தோரணையுடன் கேட்ட மகனை வாஞ்சையுடன் பார்த்தாள், தேவி.

"கொஞ்சம்."

"நாம மாறி உட்கார்ந்துக்கலாம். நான் ஜன்னலோரம் போயிடுறேன்."

"ஏன்... உனக்குக் குளிராதா?"

"ஊகூம்... சமாளிச்சிடுவேன். ஏற்காட்டில் இதைவிட குளிரும்" உதடுகளை அலட்சியமாய் சுழித்தான்.

ராஜுவும் இப்படியேதான்.

உணர்ச்சிகள், கண்களைவிட உதடுகளில் அதிகம் பிரதிபலிக்



கும். அப்பாவை அப்படியே கொண்டிருக்கும் பிள்ளை.

"குற்றாலம் வந்தாச்சா? வாடைக் காத்து வீசுதே?"

"கடையம் என்ற ஊரைத் தாண்டியாச்சு. இன்னும் கொஞ்சம் தூரம்தான், வருண் செல்லம்."

பத்து வயசுப் பொடியனாய் பேச்சு இராது. உலக அனுபவங்களில் கற்றுத் தேர்ந்தது போலொரு பார்வை.

தான்தான் தாயைப் பாதுகாக்க வேண்டும் என்ற பொறுப்பு உணர்வு. இவன்- இத்தனை இதமாய் மகன் இல்லாவிட்டால் என்ன செய்திருப்பாள், தேவி?

வாழும் ஆசை முற்றிலும் அற்று, நடைப்பிணமாய் நடமாடிக் கொண்டிருப்பாள்.

"வருண், தூக்கம் வரலியா?"

"ஊருக்குப் போனபிறகு தூங்கிக்கலாம்மா."

"போடா பெரிய மனுசா. எம்மடியிலே படுத்துக்கோயேன்."

"உஷ்... என்னம்மா பஸ்ஸில் வச்சு இப்படியெல்லாம் பேசுறீங்க?" கடித்த பல் ஊடே பேசிய மகனைப் பார்த்து சிரித்தாள்.

"நீங்க சிரிக்கும்போது ரொம்ப அழகும்மா" மகன் விழிமலரப் பாராட்டினான்.

"ம்..."

இந்த அழகு தேடித்தந்த ஆபத்துகள் எத்தனை! அந்த மழை இரவில்கூட ராஜு அவளை நெருங்கியதும், கட்டுப்பாடு இழந்து தவித்ததும் இதே அழகால்தானே?

விஜயரங்கம் அலைமோதியதும் இந்த வசீகரம் கண்டுதானே?

பத்து ஆண்டுகளுக்கு முந்தைய அந்நாளை நினைத்தால் இன்றும் உடம்பு தூக்கியடித்தது.

"ரோடு மோசம்மா- பஸ்கும் பழசு."

"ம்..."

மகன் பேசியதில் பதியாமல் மனசு கடந்த நாட்களில் அலைந்தது.

முதலில் அவள் மறுத்துவுடன் அறைந்த விஜயரங்கம், பிறகு அவளைத் தூக்கி எடுத்தார்.

மது வாடையடித்த உதடுகளை, அவள் கன்னங்களில் உரசினார். உதடுகள் நெருங்க முயல- தேவி அலறினாள்.

'ஐயோ... வேணாம் மாமா... விட்டுடுங்க.'

'ஏன்? நீயும் ஓடிப்போய்- அந்த ராஜுவை அவசரக் கல்யாணம்

செய்துக்கவா? நான் ஏமாந்த நரி போல நிற்கவா?'
இளிப்புடன் பிடிவை இறுக்கினார்.
'எங்கப்பா போல, நீங்க.'
'உன்னைத் தத்தா எடுத்தேன்? ஆனா, உனக்குத் தராத உரிமை உண்டா, இந்த வீட்டிலே? நன்றி வேணும் தேவி.'
'ஆ... ஆனா கல்யாணம் வேண்டாம் மாமா' உதறி, பதறி விலகினாள்.
அடைபட்டு, ஆபத்தை எதிர்நோக்கும் பூனையின் வேகம் அவளுக்குள் வர, பிராண்டிவிட்டு அறையின் வெளியே பாய்ந்தாள். கதவைத் தாழிட்டாள்.
'பேய்... அவளைப் பிடிங்கடா... ஓடினால், அவளைப் போய் கல்யாணம் பண்ணிடுவா' உள்ளே அவரின் அலறல் கேட்டது.
ஒரு படையே தன்னைப் பிடிக்க வருவது போல பார்த்து ஓடினாள்.
வெளியே கோடை மழை சீராய் பொழிந்தது.
தொலைக்காட்சிப் பெட்டியின் மீது இருந்த கார் சாவியையும் எடுத்துக்கொண்டாள். கூடவே அப்பெட்டியை மூடும் திரைத் துணியையும் இழுத்துத் தன் மேலே போர்த்திக்கொண்டாள். கார் ஓட்டப் பழகியது கை கொடுத்தது. 'ரிவர்ஸ் கியர்' மட்டும்தான் தெரியாது. அதில் பாதகமில்லை. விரைவில் தப்பி ஓட அது அவசியமில்லையே.
பாதி தூரம்தான் காரோட்ட முடிந்தது.
பதற்றமும் மழையும் காரணங்கள். •
திரும்பிய வாகனம் ஒரு பள்ளத்திற்குள் இறங்க, இவள் இறங்கி ராஜின் வீட்டுக்குள் ஓடினாள்.
"கடவுளே... ராஜ் வீட்டில்தான் இருக்கவேணும். ஒருவேளை நூலகம், நண்பர் வீடு என்று எங்கேனும் வெளியே போயிருப்பாரோ? கூடாது... கூடாது...' உள்ளுக்குள் மருகினாள்.
வெளியே இருந்து, ஒருமுறைதான் அவனுடைய வீட்டைப் பார்த்திருக்கிறாள். சின்ன இல்லம். பக்கவாட்டில் வெளியே படிகளேறி மொட்டை மாடிக்குப் போகும். சுற்றிலும் நாலு தென்னைகள், சதா சாமரம் வீசியபடி.
'இவ்வளவு தூரம் கூட்டி வந்தபிறகு என்னை உள்ளே அழைக்க மாட்டேங்கிறீங்களே, ராஜ்?' அன்று சிணுங்கியிருந்தாள்.
'ஐய்யயோ... என்மேல ஒரு கண் வைக்கத்தான் நேசமணி அண்ணாச்சி இங்கே என்னோடு தங்கி இருக்காரு. அவர்



முன்னே உன்னைக் காட்டினால் பிறகு பல்கலைக்கழகத்திற்கும் எங்கூடவே கிளம்பிடுவார். பயலுக்குப் படிப்பு, ஆராய்ச்சியெல்லாம் போதும்னு அப்பாவைச் சொல்ல வச்சிடுவார். இத்தனைப் பேரழகியிடம் நம்பப் பையன் சிக்கினால் மீட்பே இல்லையென்று அவருக்குத் தெரியாதா? ஒரே வாரத்திலே தெற்கே கிளப்பிட்டுப் போயிடுவார்.'
'தெற்கேன்னா?'
'நான் தெக்கத்திச் சீமைக்காரன் தாயீ' மீசையை முறுக்கினான், ராஜ்.
'மீசையெல்லாம் சரிதான். தொடைதான் கொஞ்சம் அதிகமாய் நடுங்குது.'
'சேச்சே... என்ன நீ இப்படிக் காலை வாருற?'
'பின்னே, வேலைக்கார அண்ணாச்சியிடமே இத்தனை பயம்னா?'
'நான் ஒரே பையன்னு எங்கப்பா எடுத்திருக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை, இது. தவிர, இந்த அண்ணாச்சி– தாயாய் வளர்த்தவரு.'
'அப்போ... நாம இப்படி பழகிறதுகூட தப்பு ராஜ்.'
'இது பழக்கமில்லை தேவி. நேசம்– பாசம். சில காலத்தில் தம்பதிகளாகப்போறவங்க பரஸ்பரம் புரிஞ்சிக்க வாய்த்த சந்தர்ப்பம்.'
'தம்பதிகளாகும் நிலை நமக்கு வருமா?' ஏக்கமும் வெட்கமுமாய் கேட்டாள்.
'நிச்சயம்.'
உள்ளங்கையில் முத்தமிட்டு நிச்சயித்திருந்தான். அவன் அண்மை அவளுள் விநோத உணர்வுகளைக் கிளறியது. நெருங்கி இழைய வேண்டுமென்ற வேட்கை. இழைகையில் விலகவே வேண்டாமென்ற தவிப்பு.

அன்று தடுமாறி ஒரு வழியாய் வீட்டைக் கண்டுபிடித்து, அவன் கதவு தட்டியபோது உள்ளே நல்ல மின்வெளிச்சம். நிம்மதியாய் மூச்சுவிட்டாள்.
அழைப்பைக் கேட்டுத் திறந்தது ராஜ்தான்.
வியப்புடன் அவளைக் கட்டிக்கொண்டான்.
அவளே தலை துவட்டிவிட்டான்.
ரசம் சூடாக்கி, குடிக்க வைத்தான். குமுறி குமுறி



விபரங்களைச் சொன்னாள்.
'அதுக்காக இத்தனை பயப்படணுமா, தேவி? வேறு ஒரு அறைக்குள் புகுந்திருக்க வேண்டியதுதானே? ஒரு குடிகாரனின் சலசலப்புக்கெல்லாம் அஞ்சுறதா? ஒரு தட்டு தட்டினா கவுந்திடுவாங்க.'
'ஐயோ... என்னை இறுகக் கட்டியணைச்சு... முகத்திலே... ஐயோ... ரொம்ப பயந்துட்டேன், ராஜ். இத்தனை நாள் அப்பாவாய் நினைச்சவர் இப்படி... அங்க வேலைக்காரியாய் கூட யாரும் பொண்ணுங்க கிடையாது. நான் குன்னூரில் படிச்சதால் சென்னையில் தோழிகள்னு யாரும் இல்லை.'
'சரி... ஆனா, வீட்டில் இப்ப உன்னைத் தேடுவாங்களே? அரை மணி நேரம் கழிச்சு உன்னை நானே கொண்டுபோய் விடுறேன். சரியா?'
'வேண்... வேண்டாம், ராஜ்.'
'சரி, முதல்ல நீ நனைஞ்ச உடையை மாற்று.'
தொப்பலாய் நனைந்திருந்த சிறு துண்டை தோள்களைவிட்டு உருவினாள். மெல்லிய வெள்ளை உடை நனைந்து... உடலோடு ஒட்டியிருந்தது. நுணுக்கமாய் செதுக்கிய சிற்ப உடல்.
ஈரத்தில் ஊறிய மேனி வெளுத்திருந்தது– பாலாய்... பளிங்காய்! துவட்டப்பட்ட கருங்கூந்தல் சிலும்பி வெகு கவர்ச்சியாய் தோளிலும் நெற்றியிலுமாய் பரவிக் கிடந்தது. மருட்சியில் மேலும் விரிந்த கருவிழிகள் அச்சம், குளிரில் துடித்த வடிவான தேன் உதடுகள்.
விழிகளை விலக்க அவன் பெரும்பாடுபடுவது புரிந்தது.
'என் சட்டை லுங்கியை தர்றேன். மாற்றிக்கோ.'
அவன் கருநீலச் சட்டையில் அவள் மேலும் சோபித்தாள்.
'டாக்டரை குற்றம் சொல்லமாட்டேன், தேவி. நீ ரொம்ப அழகு.'
'அதனால்...'
'அதனால்தான்...' என்றபடி அவளது கைகளைப் பற்றினான்.
அவன் கரங்கள் வலுவாய்– இளம் சூடாய் இருந்தன. பரிவு, பாதுகாப்பு நாடி அவனது மார்பில் சரிந்தாள்.
அது பரவசமாய் இருந்தது.
அவன் தழுவலை, முத்தங்களை இன்று நினைத்தாலும் விழிகள் செருகின. ஆனால், மறுகணமே மனம் முழு வெறுப்பில் சுருங்கித் துப்புகிறது.
'ஏமாற்றுக்காரன்!'



## 5

பேருந்து நிலையத்தில் கூட்டம் அதிகமில்லை. குற்றாலத்தில் இறங்கி நின்றபோது முதுகும் கால்களும் வலித்தன.
சவுகரியத்திற்கு பழகிவிட்டிருந்தது உடம்பு.
போக, வர குளிரூட்டப்பட்ட கார், வசதியான வீடு, வேலையாட்கள்... இனி எதுவும் இல்லை.
விஜயரங்கம் இறப்போடு அத்தனைக்கும் முற்றுப்புள்ளி. பத்து ஆண்டுகளாய் அவரது மனைவியாய் நடித்த நாடகத்திற்கு முடிவுத் திரை.
ராஜ் சொன்னது போலவே குடித்து உளறிய மறுநாள் காலையில் விஜயரங்கம் தெளிவாகி இருந்தார்.
'நான் ஏதோ பேசினால்... என்னை வெளியே அனுப்புறதை விட்டுட்டு சின்னப் பெண் நீ ஏன் ஓடிப்போனாய், தேவி? பதறிட்டேன்டா' மருகினார்.
'நானுந்தான் மாமா.'
'மன்னிச்சிடு. இனி அதுபோல நேராது.'
இத்தனை ஆண்டுகள் ஆதரவு தந்தவர்– பிரபல பள்ளியில் படிப்பு உணவு, பகட்டு உடை, பாதுகாப்பு தந்து அரவணைத்தவர், மன்னிப்பு என்ற சொல்லை உச்சரிக்க, இவள் உருகிப்போனாள்.
'பரவாயில்லை மாமா.'
ஆனால், அது அதிர்ச்சிகளின் முடிவல்ல– ஆரம்பம்!
சில நாட்களுக்குப் பின்பே அவளால் ராஜ்ஜை தேடி போக முடிந்தது.
அவன் வீடு பூட்டிக் கிடந்தது.
மறுவாரம் போனபோதும் பூட்டுதான்.
அக்கம் பக்கமாய் விசாரித்தாள்.
'அவங்க ஊருக்குக் கிளம்பிப்போய் பத்துப் பன்னிரண்டு நாள் ஆவுதும்மா. சமையல்காரரு மட்டும் ஒருநாள் வந்து அரிசி, பருப்பெல்லாம் மூட்டைக் கட்டி ஏத்திட்டுப் போனாரு. விவரமேதும் சொல்லலை... இப்போதைக்கு வாராப்பல இருந்தா பலசரக்கு சாமானை ஏன் எடுக்கணும்? ஆமா, நீ அவுங்களை இன்ன விசயமாத் தேடுறே?' பல் குத்தியபடி சாவகாசமாய் கேட்டார், ஒருவர்.
இவளிடம் சொல்லாமல் ஏன் போனான்?

இவள் தொலைபேசி எண் உள்ளது. வீடு தெரியும். விலாசம் உண்டு. பிறகென்ன?"

ஏன் இந்த திடீர் முடிவு? அவசரப் பயணம்?

ஆரம்பக் குழப்பம், வாரா வாரம் அண்ணா நகர் வரை வந்து பார்த்துவிட்டு ஏமாந்து திரும்புகையில் மாறியது... அதிர்ச்சியாய், வெட்க வேதனையாய்!

ஆக, அவள் அழகை ஆண்டுகொண்டபின், பறவை பறந்துவிட்டது. அவர்கள் சந்திப்பும், இயல்பாகப் பேசி பழகியதும், பின் நெருக்கமானதும் தனிக் கதை.

அத்தனை நாட்களின் இன்பங்களும் இனிமைகளும் அந்த ஒரு இரவுக்காகத்தானா?

'சேச்சே...'

யோசிக்க யோசிக்க விஜயரங்கம் தேவலை போலிருந்தது. ஆக, உலகம் அவ்வளவுதான்.

நானாக ஆக நினைவுகள் வெறுத்தன. பாகற்காயை மென்று சுவைப்பது போல... ஒவ்வொரு கடிக்கும் கசப்பு கூடியது, குமட்டியது.

ஒருநாள் காலையில், குடித்த காப்பி முழுவதையும் வாந்தி யெடுத்தபோதுதான் இந்தக் கசப்பு வெறும் மன பிரமை அல்ல என்பது புரிந்தது. உடலில் சில மாற்றங்களும் தெரிந்தன.

அயர்ந்துபோனாள்.

பகிர ஆளில்லாது தவித்தாள்.

ஆலோசனைக்கு- ஆறுதலுக்கு ஆளில்லாத கொடுமை.

மறுவாரம் விஜயரங்கத்தின் முன்னே போய் நிற்பதைத் தவிர வேறு வழியில்லை.

விசயம் புரிபட்டதும் அவள் நினைத்தது போல அவர் எகிறவில்லை. இதை எதிர்பார்த்தவர் போல வெகு இயல்பாய் எடுத்துக்கொண்டார்!

இவள்தான் குன்றிக் குறுகினாள்.

'இது தப்புத்தான் மாமா. மன்னிச்சிடுங்க். எனக்கு இந்தப் பிள்ளை வேணாம்.'

'உன் உயிர் எனக்கு வேணுமேம்மா, தேவி.'

'அப்படின்னா?'

'கருவைக் கலைக்கிறது உன் உயிருக்கே ஆபத்தாய் முடியலாம்.'

'பண்ணின தப்புக்கு என் உயிர்தான் விலைன்னா பாதகமில்லை.'



'உன் உயிர் உனக்கு சர்க்கரைக் கட்டியாய் இல்லாமல் இருக்கலாம். ஆனா, எனக்கு அப்படித்தான். எனக்கு உன்ன விட்டால் வேறு யாரும்மா இருக்கா? அண்ணன் குடும்பத்தோடு எனக்குள்ள உறவில் நெருக்கமில்லை. எம்பங்கு சொத்து அவங்களைச் சேரணும்ங்கிறதைத் தவிர, வேறு பந்தமில்லை. உன்னை வாரிசாக்கி, உயில் எழுதிடுவேன் என்ற கடுப்பு, அவங்களுக்கு. இப்போ நீயும் இல்லைன்னா, அநாதைதான் நான்' தழுதழுத்தார்.

'மா...மா...'

'பெத்திடு. பெத்து, பிழைச்சிடு. பிறகு, அதை என்ன பண்ணணுங்கிறதை யோசிக்கலாம். அநாதை விடுதியில் விட்டுறலாம். இல்லை, நாமே வளர்க்கலாம். நமக்கு இன்னுமொரு உறவு!

அப்பன் யாருங்கிற கேள்வி வரும். நான்தான்னுடுறேன். ஊர் நம்பிடும். குழந்தை இங்கே இளவரசனாட்டம் வளரட்டும். நீ எப்போதும் போல ராணி... என்ன?'

அழித்துவிடும் யோசனை முதல் சில மாதங்களுக்குத்தான். பிறகு, அவளும் தன்னுள் உதைத்துப் புரண்ட பிஞ்சு உடலை, உயிரை நேசிக்க ஆரம்பித்துவிட்டாள்.

பிறந்த மகனை அள்ளி, உச்சி முகர்ந்தபோது விஜயரங்கத்தின் மீது மனம் நன்றியால் பொங்கியது.

அவர் அன்று அப்படி சொல்லியிராவிட்டால் இந்தப் பிஞ்சு இல்லையே.

அந்த மழை இரவின் ஞாபகமாய் அவனுக்குப் பெயர் சூட்டினாள், வருணன் என்று.

டாக்டரின் மனைவியாய் பத்து ஆண்டுகள்.

தனது மருத்துவ சான்றிதழ் முதற்கொண்டு காண்பித்து இவளை மணந்துவிட்டார். "உனக்குப் பெயரளவில்தான் கணவன், தேவி. ஆனால், நான் இனி இக்குழந்தைக்குத் தகப்பன்."

அவர் திட்டத்திற்கு சம்மதித்துவிட்டாள்.

முதல் ஏழு ஆண்டுகள் குறையே சொல்ல முடியாது! அப்படி தாங்கினார். "எம்மகன், மனைவி" என்று நெஞ்சு விம்ம அறிமுகம் நடக்கும். ஆனால், இயல்பாய் இல்லாத உறவுகள் எத்தனை நாள் தாங்கும்?

ஒருநாள் பள்ளியிலிருந்து திரும்பிய வருண், குறையாய்- 'ஏம்மா... நம்ப அப்பா மட்டும் வித்தியாசமா இருக்காங்க?" என்று உதடு பிதுக்கினான்.

'என்ன வித்தியாசம்?' அவளுக்கு உடம்பு கழுவி, உடைகளை







மாற்றியபடி கேட்டாள்.

'தாத்தாவாட்டம் இருக்கார். மற்ற அப்பாக்களுக்கு தலை நிறைய கறுப்பு முடிதான். ஜோரா வர்றாங்க.'

மவுனமாய் மகனுக்குத் தலை சீவிவிட்டாள்.

'மத்த பசங்க இவரை என் அப்பான்னா, நம்பமாட்டேங்கிறாங்களே... 'பொய் சொல்லாத- உங்க தாத்தாதானேங்கிறாங்க? முடி முழுக்க நரைச்சு, பெரிய தொப்பை இருக்கேங்கிறாங்க."

அதைவிட, இருவரின் ஜாடையும் நேர்மாறு!

விஜயரங்கத்திற்கு சிவப்போடு அகல முகம். சுருண்ட கேசம். சோவி சோவியாய் பற்கள்.

வருண் மாநிறமாய், வெடவெட உடல்வாகில் இருந்தான். பசசரிசி சிரிப்பும், நீள்வட்ட முகமும், பட்டுப்போன்ற கேசமுமாய் அவருக்குத் தட்டை மூக்கென்றால் இவன் மூக்கும் முழியும் மகாக் கூர்மை.

இவளின் சாயலும் வருணிடம் இல்லை. முழுக்க ராஜ். நினைப்பில் இப்போதும் கசப்பு ஊறுகிறது.

நம்பவைத்து கழுத்தறுத்த கயவன்!

அடிக்கடி மகனிடமிருந்து இத்தகு முணுமுணுப்புகள் வந்தபின், வருணை வெளியூர் பள்ளியில் சேர்த்துவிட சம்மதித்தாள்.

"அம்மா... இங்கேருந்து நாம் போகவேண்டிய இடம் ரொம்பத் தூரமா?" வருண் அவளை நிகழ்காலத்திற்கு உலுக்கினான்.

"அ...? நாலைஞ்சு மைல் இருக்கும். என்னை வேலைக்கு அழைச்சவங்க இங்கே வந்து நம்மைக் கூட்டிச்செல்வதாய்தான் தகவல். வக்கீல் பாஸ்கரன் அப்படித்தான் சொன்னார்."

"அம்மா, அவர் அந்த ஆள் நம்மையே பார்த்துட்டு நிக்கிறார். நம்மை தேடித்தான் வந்திருப்பாரோ?"

மகன் சுட்டிய திசையில் பார்த்தவளது விழிகள் வெறித்தன. கால்கள் கொடி உடலினையும் தாங்கமுடியாதது போலத் தொய்ந்து துவண்டன.

## 6

**நா**ன்கே எட்டுகளில் இவர்களை நெருங்கிவிட்டான் அவன். கண்களை அகன்ற கருப்புக் கண்ணாடி மறைத்திருந்தது.

ஆனால், சற்றே முறுக்கிய அந்த இளம் மீசை– உணர்ச்சிகளை பேசாமலே புரியவைக்கக்கூடிய உதடுகள்!

இப்போதும்கூட அவற்றில் ஒரு ஏளன சிரிப்பு...

"திருமதி விஜயரங்கம்?"

"ம்..."

"இளம்பலாமா?"

"நா... நான் திருமதி வைஜெயந்திக்காக வேலை செய்ய வந்திருக்கேன்..." இவளது பேச்சு தடுமாறியது. இத்தனை நேரம் மனம் கடித்துத் துப்பியவனை நேரில் சந்தித்த அதிர்வைத் தாங்க முடியவில்லை, தேவியால்!

அவனைத் தன் வாழ்வில் முதன்முதலில் பார்த்த கணம் ஏற்பட்ட அதே சலனம்– இதயத்தை இன்றும் அலைக்கழிப்பதை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அன்றிருந்த 23 வயது இளைஞனைவிட அவனது இன்றைய தோற்றம் அதிகக் கவர்ச்சியாய் இருப்பது போலபட்டது.

'இதென்ன வெட்கங்கெட்டதனம்' என்று மனதை அடக்க முயன்றும், அது எம்பி முன்நின்ற ஆளை எடைபோட்டது.

"பார்த்தது போதும் என்றே நினைக்கிறேன். நாம இளம்பலாமா?" அவன் குரல், அவள் பார்வையை வெட்டியது.

இவள் குறுகி சிவந்தாள்.

"நான் கேட்டதற்கான விளக்கத்தை நீங்க இன்னும் சொல்லலியே?"

"வைஜெயந்தியின் இரு குழந்தைகளைக் கவனிக்கவும் படிப்பிக்கவும்தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள். சந்தேகம் வேண்டாம்."

"அப்போ... நீங்க எப்படி இங்கே? நீங்கதான் அவங்க... கணவனா?" கேட்பதற்குள் தேவியின் உதடுகள் உலர்ந்து படபடத்தன.

"இல்லை. அவங்க ஒரு விதவையென்று தெளிவுபடுத்தி இருந்தோம்."

"ஆமாம்... ம...மன்னிக்கவும்."

வழக்கம் போலில்லாமல் குழறி, தடுமாறும் தன் தாயை விநோதமாய் பார்த்து நின்றான், வருண்.

"வாங்க சார், உங்க பேர் சொல்லலியே?"

வருணனைக் குனிந்து வினவியபோது ராஜின் உதடுகளில் மிருதுவான ஒரு சிறுநகை.

"வருணன்... வருண்."

"ம்... அழகுப் பெயர். போகலாமா?"



சிறு யோசனையுடன் மவுனமாய் சற்று நின்றவன் பெட்டிகளில் பெரியவை இரண்டைத் தூக்கிக்கொண்டு முன்னே நடந்தான். அலட்சியமாய் அவன் நீள எட்டுகளை வைத்து முன்னே நடந்ததை ஆச்சரியத்துடன் பார்த்திருந்தான், வருண்.

பள்ளியில் அவன்சந்தித்த சில தந்தைமார் இப்படித்தான் இருந்திருப்பார்களோ? இல்லை, இத்தனை கவர்ச்சியான தந்தைகள் அபூர்வம். யோசனை இவனுள் ஓடியது.

"அம்மா இந்த அங்கிளின் பேர் என்ன?" இவளை உரசியபடியே கேட்டான்.

"நீயே கேளு."

"உங்களுக்குத் தெரிஞ்சவங்க போலிருக்கு?"

"யார் சொன்னா?"

"ஒரு மாதிரி பார்த்தீங்க... பேசினீங்க..."

"நீ பேசாம வர்றியா?" மகனை அதட்ட முயன்றாள்.

"வருண் ரொம்ப சுட்டிகை இல்லையா?" பெட்டிகளை காரில் இட்டுப் பூட்டியவன், புன்னகைத்தான்.

"நன்றி சார்" ராஜுவ 'சல்யூட்' அடித்த வருணின் பற்கள் அத்தனையும் வெளித் தெரிந்தன.

"இப்போ சின்ன சார் எங்கே உட்காரப்போறீங்க? அம்மாகூடவா, இல்லை... என் பக்கத்திலா?"

"அம்மா, நான் முன்னாடி உட்கார்ந்துக்கவா?" பதிலுக்குக் காத்திராமல் காரின் முன்னிருக்கையில் பாய்ந்து ஏறினான், சிறுவன்.

பக்கம் பக்கமாய் தெரிந்த அவர்கள் இருவரின் பின்னந்தலைகளும்கூட ஒரே மாதிரியாய் இருப்பது புரிய– அவளுக்குள் பீதி படர்ந்தது. இத்தனை உருவ ஒற்றுமை யார் கண்ணிலும் படாமல் தப்புமா?

இவர்களை இங்கே வரவழைத்தது ராஜின் ஏமாற்றா? இல்லை, எதேச்சையா? யாரை மறக்க விரும்புகிறாளோ... அவனோடு இப்போது ஒரே வாகனத்தில்... இனி ஒரே இடத்தில்!

இந்த வேலையை ஏற்பாடு செய்து தந்தவர் வக்கீல் பாஸ்கரன் தான். விஜயரங்கத்தின் உயிலை எதிர்த்து கோர்ட்டில் வழக்குத் தொடுக்கலாம் என்று எத்தனையோ எடுத்துச்சொன்னார்.

"நிச்சயம் வழக்கு உன் பக்கம்தான்ம்மா ஜெயிக்கும். அவர் செய்தது பெரிய அநியாயம்."

"இல்லை சார்... சமாளிச்சுக்குவேன். நன்றிகெட்டத்தனமாய்,



என்னை ஆதரித்தவரை எதிர்த்து வழக்காட விரும்பலை நான்" என்று சொல்லிவிட்டாள்.

இறுதி மூன்று ஆண்டுகளில் விஜயரங்கத்துடன் இவள் வாழ்வு சுமுகமாய் போகவில்லை. யாருக்கோ பிறந்தவன் தன்னை 'அப்பா' என்று அழைப்பதை அவர் விரும்பவில்லை. உருவ ஒற்றுமை மட்டுமில்லாது வேறு எதிலும் அவர்கள் இடையே இணக்கமில்லை.

'வாடா வருண், செஸ்' விளையாட்டு கற்றுத்தர்றேன்' அழைப்பார்.

'போங்கப்பா... கிரிக்கெட்டுக்கு வர்றீங்களா? சேர்த்துக்கிறேன்.'

'சீட்டாவது போடலாம்டா.'

'அதுக்குப் பட்டம் விடுறது தேவலை' உதடு பிதுக்குவான் இளையவன்.

புதிதாகப் பார்க்கும் பலர் அவர்களைத் தாத்தா– பேரன் என்றே கருதினர். ஆனால், தேவியை வருணின் அக்கா என்று நினைத்தவர்கள் பலர்.

வருண் பிறந்தபின் அவள் கல்லூரி படிப்பைத் தொடர்ந்தாள். வீட்டை அக்கறையாய் பராமரித்ததுடன் சதா ஏதாவது ஒரு கலையில் ஈடுபட்ட அவள் உள்ளமும் உடலும் ஆரோக்கியம் அழகு கெடாதிருந்தன.

ஆனால், "ஏதோ நீ நல்லா இருந்தா சரிப்பா" என்று போலிப் பெருமூச்சுப் பேச்சுடன் அடிக்கடி விஜயரங்கத்தின் அண்ணன் குடும்பத்தினர் வர ஆரம்பித்தபின், சுமுகச் சூழல் கலைந்தது.

விஜயரங்கத்திற்கு அவர்களின் போலிக் கரிசனைகள் பிடித்துப் போயின. இதுவரை எட்டத்திலிருந்த உறவோடு ஒட்டி உரசினார்.

அவர்கள் காதில் ஊதியதை தாங்காமல் ஒருநாள் வெடித்தேவிட்டார்.

'அப்பா, ஷட்டில் விளையாட வர்றீங்களா?' பொழுது போகாமல் விஜயரங்கத்தை அழைத்தான், வருண்.

'நீ செஸ் விளையாட வா.'

'வெளியே போகலாமே?'

'காத்து அதிகம்.'

'அப்போ கிரிக்கெட்! வராந்தாவிலாவது ஆடலாம்.'

'எனக்குச் சரிப்படாது.'

'நீங்க ரொம்ப வித்தியாசமாய் இருக்கீங்கப்பா' சிணுங்கினான், சிறுவன்.

'ஆமாடா... என்னா, நான் உங்கப்பன் இல்லை.'



சிறுவனின் முகம் உறைந்தது.

புதிய முகத்தில் தெரிந்த காட்டமும் காழ்ப்பும்– இந்தப் பேச்சு விளையாட்டில்லை என்றது.

பயந்து நகர முயன்றவனை இழுத்து வைத்து உலுக்கினார்– "நல்லா கேட்டுக்கோ. புரிஞ்சுக்கோ. நான் உன்னைப் பெத்தவன் இல்லை. உங்கம்மா வயித்திலே உன்னை சுமந்துட்டு நின்னா. அவளது மானத்தைக் காப்பாத்த நான் செய்த மடத்தனம்தான் அவளைக் கல்யாணம் செய்துகொண்டது. எவனுக்கோ பிறந்த பயலான நீதான்டா இங்கே வித்தியாசம்– நானில்லை. போ" பிள்ளையை உதறித் தள்ளினார்.

கூச்சல் கேட்டு ஓடிவந்த தேவி– விக்கித்து நிற்க, வருணின் முகம் பாறையாய் இறுகியிருந்தது.

சில மாதங்கள் கழித்து, விஜயரங்கம் இறந்தபோது அவர்களுக்கென்று உயிலில் பைசா சொத்து விட்டுச்செல்லவில்லை, அவர். தனக்கென்று இருந்த சில நகைகள்– சில ஆயிரங்களுடன் திகைத்து நின்றாள் தேவி.

## 7

"கலகல"வென்று இணைந்து பெருகிய சிரிப்பொலி அவளை நிகழ் உலகிற்குப் பிடித்து இழுக்கியது. முன் இருக்கையில் இருந்த இருவரும் மோவாய் தூக்கி சிரித்த முறை அச்சாய் ஒரே போல... வயிறுள் மீண்டும் ஒரு சிலீர் பிசைவு.

அதற்குள் இருவரும்– அதாவது அப்பாவும் பிள்ளையும் பழகி, நெருங்கி இழைவதைக் கவனித்தபோது அவளுக்குள் துளி பொறாமைகூட தலைதூக்கியது.

மானத்தை, உயிரைப் பணயம் வைத்துப் பெற்றதும், வளர்த்ததும் அவள். ராஜைப் பார்த்தவுடன் எப்படி ஆவலாய் ஒட்டிக்கொண்டான்? இரத்த பாசம் என்பதெல்லாம் வெறும் பேச்சில்லை போலும்.

"நீங்க இந்த ஊரில் எப்படி?" இடையே புகுந்தாள்.

"நான் தெக்கத்தி சீமைக்காரன். இலஞ்சி, குற்றாலம் இங்கெல்லாம் எங்களுக்குத் தோட்டம், பண்ணைகள் உண்டு."

"ஓ... அப்போ வைஜெயந்தி அம்மா?"

"அம்மாவெல்லாம் வேண்டாம். வைஜி மனசொடிஞ்சு

போயிடுவா" -கேலியாய் புன்னகைத்தான்.
"சம்பளம் தருகிறவங்க இல்லையா? அந்த மரியாதை."
"வேலைக்கு அமர்த்தியதும், சம்பளம் தருவதும் நான்தான். ஆனால், எனக்கும்கூட மரியாதை வேண்டாம். சுமுகமாய் பழகினால் போதும்."
தோள் குலுக்கினான்.
'எத்தனைத் திமிர்' என்று கறுவிக்கொண்டாள்.
"வைஜியின் கணவரும் நானும் ஒன்றுவிட்ட அண்ணன் தம்பி. இந்தப் பழ பண்ணை எங்க குடும்பச் சொத்து. அவள் கணவர் இறந்தபிறகு மொத்தமும் நான்தான் பார்த்துக்கிறேன். இளவயதில் விதவையாகிறது ரொம்ப வேதனைதான்."
'நான் உனக்கும் சேர்த்துதான் சொல்கிறேன்' என்பது போல இவளை ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தொடர்ந்தான்.
"அதிலே வைஜி மனதொடிந்துபோனாள். தனியே நாள் முழுக்க அறையில் அடைத்துவிடப்பது. அளவில்லாமல் சாப்பிடுவதுன்னு தன் பிள்ளைகளைக்கூட கவனிக்கும் சிரத்தையில்லாமல்."
"பிள்ளைகள் ஆணும், பெண்ணும்னு கேள்விப்பட்டேன். என்ன வயசு?"
"மூத்தவனுக்கு நாலு. பெயர் குருசேகரன். எல்லோருக்கும் குரு. சின்ன குட்டிக்கு இரண்டரை வயசு. பெயர் சித்ரா. செல்லமாய், சித்து."
சிரித்தான். ஆனால், அதில் ஜீவனில்லை.
அவன் பேச்சுக்கூட வறட்சியாய்தானிருந்தது.
எதிரே வாகனங்கள் இல்லாததால் வாகனம் நல்ல வேகம் எடுத்தது. காற்று 'சில்'லென்று பாய்ந்து மோதியது.
சிலிர்ப்புடன் சேலைத் தலைப்பை தோள் மீது சுற்றி இழுக்கினாள்.
"வருண்... அம்மாவுக்குக் குளிருது போல. கண்ணாடியை ஏற்றிவிடு" உரிமையாய் உத்தரவிட்டான்.
அதில் தொனித்த அந்நியோன்யம் இவளை உலுக்கியது. தொண்டை அடைத்தது- உணர்வு பெருக்கில்.
அவள் உடுத்தியிருந்தது விலையுயர்ந்த சேலை. இழுத்துப் போர்த்தியதில் அதன் மெல்லிய இழைகள் அவளது உடலின் வளைவுகளை வடித்துக் காட்டின.
அவள் அன்றாடம் கட்டும் சேலைகள்கூட உயர்தரமானவை



தான். அப்படி உடுத்தி, உண்டு வாழ்ந்தவள் இன்று வேலை தேடி இப்படி அண்டி வரும் நிலை."
விஜயராகவ் மீது கோபம் வந்தது.
முகம் தெரியாத வைஜெயந்தியிடம் ஊழியம் செய்வது பற்றியெல்லாம் குறையில்லை. ஆனால், இவன்... இவனிடம் மாட்டிக் கிடக்கவா? சிரிப்பால் வலைவிரித்து, அதிலே சிக்க வைத்த கயவனிடம் கைகட்டி ஊழியம் செய்வதா?
காது மடல்கள் சூடேறி சிவந்தன. ஆனால், அன்றிரவு நடந்தது கயமைதானா? சூழ்ச்சிதானா? இல்லையே.
அவனைத் தேடிப்போனது இவள்தானே? தஞ்சம் என்று அறையில் மட்டுமின்றி... மார்பிலும் ஒண்டியது!
அவன் அணைத்து இறுக்கியபோது அனல் தொட்ட மெழுகாய் குழைந்தது! அவன் தந்த முத்தங்களை அவளும் உடனுக்குடன் திரும்பத் தந்தாய்தானே நினைவு...
ஞாபகங்களில் கன்னங்கள் 'குப்'பென்று சிவந்தன.
"ரம்மியமான சிந்தனைகள் போல..."
அவன் குரல் கரகரப்பாய் இருந்தாலும், குழைவாய் வருடியது.
அவன் தன் ஒவ்வொரு அசைவையும், ஓட்டுநருக்கான கண்ணாடி மூலம் கவனிக்கிறான் என்ற நினைப்பு அசவுகரியமாய் இருந்தது.
"ஊகும்..." பொதுவாய் ஒரு பதில் தந்தவள், மனதை அடக்க பார்வையை வெளியே விரட்டினாள். ஒவ்வொரு மலையின் முகட்டிலும் பூச்சூட்டினது போல மேகக்கூட்டம். பறவைகள் வில் போன்ற வியூக அமைப்பில் கூடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன.
சென்னையிலும் இவர்களிருந்தது தனி பங்களா என்றாலும் சுற்றிலும் இத்தனை மரம், செடிகள் கிடையாது. இது நந்தவனம் போலிருந்தது.
"அப்... அதுதான் உங்க வீடா அங்கிள்?"
"சரியாய் சொல்லிட்டியே."
"காரை நிறுத்தாமப் போறீங்க?"
"முதல்ல உங்க வீட்டுக்குப் போறோம். பிரயாண அலுப்புப் போனபிறகு வைஜியைப் பார்க்கப் போகலாம்."
"எங்களுக்குத் தனி வீடா?"
"ஆமாம். அங்கிருந்து ரெண்டு நிமிட நடையில் வைஜி வீடு."
தேவிக்கு ஆறுதலாய் இருந்தது.

அவளையோ வேறு எவரையுமோ சதா பார்த்து நிற்க வேண்டாம்.

'வேலை முடிந்ததா, சரி' என்று தன் கூடுக்குத் திரும்பி அடைந்துகொள்ளும் வசதி.

"மொத்தம் எத்தனை வீடு அங்கிள் இங்கே?"

"நாலுதான். ஒன்றிலே நான். இன்னொன்றில் தோட்ட நிர்வாகி. வேலையாட்கள் வெளியிலிருந்து வந்துவிட்டுப் போவார்கள்."

"இதெல்லாம் நம்ப இடம். வேலிக்கு அப்புறம்?"

வருண் 'நம்ப இடம்' என்று உரிமையாய் சொன்ன பாங்கு அவளை வியப்படையச் செய்தது. இன்றுதான் அறிமுகமான வனிடம் இப்படி பழகிக்கொண்டானே.

"அதுவும் நம்மதுதான். இது பழப் பண்ணைன்னா, அது பூந்தோட்டம். சில அபூர்வ மலர் செடிகள் உண்டு. ரோஜாவும் உண்டு. அவற்றிலிருந்து வாசனைத் திரவியம் தயாரிக்கிறோம்."

"ஓ... பழங்களிலே எது விசேசம் இங்கே?"

"மங்குஸ்தான். கருத்த கடின ஓடு கொண்ட பழம். அதை உடைத்தால் வெள்ளை வெளேர் என்று உள்ளே சுவையான சுளைகள் இருக்கும். புளிப்புடன் இனிப்பு, துவர்ப்பு எல்லாம் கலந்த சுவை. இப்போது சீசன் இல்லை."

"அப்புறம்?"

பெரிய மனித தோரணையுடன் கேட்டபடி நடந்த மகனை அதட்டினாள்.

"வருண், சாமான்களையெல்லாம் யார் இறக்குறது? [illegible] வந்து ஒரு கை பிடி."

"அதற்கு வேலைக்காரங்க உண்டு. முகம் கழுவிட்டு காபி குடியுங்க, ரெண்டு பேரும்."

இருந்தும் கைக்கொன்றாய் பைகளை அள்ளிக்கொண்டு படியேறினாள்.

"விருந்தாளியைப் போல எங்களை உபசரிக்க வேண்டாம். நான் இங்கே வந்தது வேலைக்காரியாய்."

"பிள்ளைகளுக்கு சிறிது படிப்பு, நல்ல பழக்க வழக்கங்கள் முடிந்தால் நாலு பாட்டு... இவை கற்றுத்தரத்தான் வந்திருக்கிறாய். தவிர, உன்னைப் பார்த்தால் வேலைக்காரி போல் இல்லையே." வெகு ஏளனமாய் மடிந்தன, அவன் உதடுகள். பார்வை நிதானமாய் மேலும் கீழுமாய் அவளைத் தடவியது.



"முதல்ல வைஜெயந்தியைப் பார்த்துட்டு வரலாம். பிள்ளைகளையும்தான்."

பேசினால் பதற்றம் குறையுமே என்று பேசினாள்.

"அரை மணி நேரத்தில் வர்றேன், போகலாம்."

சட்டென்று திரும்பி வெளியேறினான், ராஜ்.

## 8

வீடு சின்னதாய், சித்திரமாய் இருந்தது.

படுக்கையறையின் இரு சுவர்கள் முழுக்கப் பதித்த தேக்கு அலமாரிகள். புதிதாய் வண்ணமடிக்கப்பட்ட சுவர்கள் மினுமினுத்தன. வர்ண வாடை இன்னும் மிச்சமிருந்தது.

ஜன்னல்களை திறந்துவிட்டாள். குபீரென்று உள்ளே பாய்ந்தது காற்று. வெகுநாள் வெளியூர் போய்விட்டு திரும்பும் எஜமானனை வரவேற்கும் நாயைப் போல, நேசமாய் முகம் முழுதும் வருடியது. கேசத்தைக் கலைத்து முந்தானையைப் படபடக்கச் செய்தது.

"ஜோரான வீடு, இல்லையாம்மா?"

"ம்..."

"அந்த அங்கிளும் 'ஜோர்' இல்லையாம்மா?"

அவன் ராஜை 'அங்கிள்' என்று அழைத்தது நெருடியது. ஆனால், நல்லவேளை 'மாமா' என்றழைக்கும் பழக்கம் அவனுக்கில்லை.

"குளிக்கப் போறீங்களாம்மா?"

"நவம்பர் மாசம். வியர்வைக் கசகசப்பில்லை. ஆனா, குளிச்சா நல்லாத்தான் இருக்கும்."

"வெந்நீர் இருக்கிவிட்டுமா?"

"அதுகூட இருக்கா?"

"இருக்கே. வந்ததும் எல்லாம் பார்த்துட்டேன். சின்ன [illegible]ஜ்கூட இருக்கு. அதிலே கேக், குளிர்பானம் எல்லாமிருக்கு. எடுத்துக்கலாமா?"

"வருண், இது நம் வீடில்லை. ஏதோ மரியாதைக்கு வச்சிருக்காங்கன்னா... நாம அந்த மரியாதையைக் காப்பாத்திக்கணும்." தாய் சிடுசிடுக்க, வருணின் மலர்ச்சி மறைந்தது.

"அடபோ..... எல்லாம் உங்களுக்குத்தான் சின்ன துரை. இது [illegible] வீடுங்கம்மா. தம்பி வேண்டியது எடுத்துச் சாப்பிடட்டும்.

அதுக்குத்தானே வச்சிருக்குது. காலியானதும் நிரப்பிடுவே[ன்]
வாசலில் நின்று பேசியவரை நான்கு எட்டு முன்னே வ[ந்து] பார்த்தாள், தேவி.

"யாரது?"

"நான்தாம்மா தேசமணி. தம்பிக்கு ஒத்தாசைக்கு இருக்கே[ன்]. உங்களுக்கு டீ கொண்டுவந்தேம்மா. வச்சிட்டுப் போறே[ன்]. வேறேதும் தேவையா?"

பேசியவர், வருணின் தலையை வருடி நெற்றியில் முத்தமிட்ட[ார்].

"இல்லீங்க... இப்ப டீ வேண்டாம்."

"பிரிட்ஜில் தோசை மாவு இருக்குதும்மா. இட்லிப் பொ[டி], எண்ணெய், நெய், மளிகைச் சாமான் எல்லாம் வச்சிருக்கே[ன்]. மதியம் நீங்க வைஜிம்மா வீட்டிலே சாப்பிடலாம்."

"இவன் வருண்... இவனுக்குச் சாப்பாடு?"

"தம்பி இனி எம்பொறுப்பு. கவலைப்படாதீங்க."

"தாத்தா... தண்ணி சத்தம் கேக்குதே? அருவி பக்கத்திலே[யா] இருக்குது?"

"சிறு ஓடை இருக்குப்பா. பெரிய அய்யா காலத்தி[லே] ரெண்டு பாறைக்கு நடுவே கொஞ்சம் வடிவாய், செங்குத்[தா] வெட்டிவிட்டார். அதிலே அருவி கணக்கா தண்ணி விழு[ந்து] புரளும். குளிக்க வாகா இருக்கும். மத்தபடி குத்தாலம் போ[ல] ஐந்தருவி, புலியருவி என்ன, பெரிய அருவி, செண்பகா அரு[வி] எல்லாமுண்டு."

"இப்ப அங்கே தண்ணி விழுமா?" விழிவிரிய வினவினான் வரு[ண்].

தேவிக்கும் தண்ணீர் மீது விருப்பம் உண்டு. கடலும் அருவி[யும்] ஆறும் பார்த்த மாத்திரத்தில் அவளின் உள்ளே குதூகலத்தை பரவசெய்யும்.

"மழைக் காலந்தானேம்மா. நல்லா விழும். ஆனா, ஜூ[ன்] ஜூலை, ஆகஸ்டுதான் சீசன். அப்ப தண்ணியைவிட மழை[...] தலையங்கதான் சாஸ்தி. நீங்க டீ குடிங்கம்மா."

"நீங்க வயசில மூத்தவர். என்னை நீன்னே அழைக்கலா[மே]"

"அதெல்லாம் வராதும்மா. இப்படியே பழகிடுச்[சு]. டீ ஊத்தித் தரவா?"

"இல்லை பெரியவரே... குளிச்ச பிறகு குடிக்கிறேன்."

அவர், கதவை மூடிக்கொண்டு கிளம்பினார், அவளு[க்கு] அவரைப் பிடித்திருந்தது.

சதா சிரிப்பவைப் போன்ற கண்கள். பருத்த உதடுகளில்[லை] அமைதி. வெளுத்த முடி கற்றைகள் தலை கொள்ளாமல் மின்னின. பேச்சுகூட இதமாய்.



"தண்ணி தயாரும்மா."

வருண் குரல் கொடுக்க- சோப்பு, துண்டு, மாற்றுடைகளை எடுத்துக்கொண்டாள்.

சூடான நீர் மேனி முழுக்க வருடிச் சென்றது சுகமாயிருந்தது. சோப்பையும் கடலை மாவையும் கலந்து அழுத்தித் தேய்த்தாள். பிரயாண அலுப்பும், அழுக்கும் அகன்றன.

பூத்துவாலையால் இதமாய் நீரை ஒற்றி எடுத்தவள், உடை மாற்றினாள். எளிமையாய் தோன்றும் பட்டு ரகச் சேலை கட்டினாள். முடியைப் பின்னி கொண்டையாய் சுற்றி இறுக்கினாள். புருவ மத்தியில் மரு அளவிலான கருஞ்சாந்து.

வருண் குளிக்கும் சத்தம் கேட்டது. இடையே ஆனந்தமாய் அவன் இழுத்த ராகமும்தான்.

தேநீரைக் கோப்பையில் நிரப்பி பருக ஆரம்பித்தபோது கதவு திறந்தது.

"ஆ... உத்தியோகத்திற்குத் தகுந்த வேடம் போட்டாயிற்றா?" என்னவாய் கேட்டபடி நுழைந்தான், ராஜ்.

கவனியாதது போல "உங்களுக்கு டீ?" -விசாரித்தாள்.

"வேண்டாம். வரும்போது பூவும் தழையும் சுற்றிய வனமோகினி போலிருந்தாய். இப்போது உடல் தெரியாத கெட்டிச் சேலை. கொண்டை... ம்... நீ கெட்டிக்காரி, தேவி."

'இந்த சரசப் பேச்சையெல்லாம் தன் பெண்டாட்டியோடு இவன் நிறுத்திக்கொண்டால் நலம்' என்ற ரீதியில் மனம் ஓடியது. ஆனால், பதில் சொல்வதைத் தவிர்ப்பதற்காய் தேநீரைக் குடித்தாள்.

"இருபத்து எட்டு வயதிலும் இத்தனை அழகும் கவர்ச்சியுமாய் இருக்கும் நீ, பதினெட்டில் விஜயராங்கத்தை மணந்தது புதிர்தான். வேறு ஒரு பெண் அதைச் செய்ய துணிவாளா? தெரியவில்லை. ஆனால், உனக்குத் தெரிந்திருக்கிறது- என்ன தந்தால் என்ன பெறலாம் எனும் வித்தை. வாழ்க்கையை லாபகரமான வியாபாரமாய் செய்யும் அதிபுத்திசாலி நீ. மனதைப் பயன்படுத்தாமல் புத்தியை மட்டுமே பயன்படுத்தும் அபூர்வப் பெண்."

"போதும். சம்பளம் தருவது இதுக்குன்னா நான் இப்பவே கிளம்புறேன். பிடித்த எலியை பூனை கொடூரமாய் விளையாடி, பந்தாடிக் கொல்வது போல என்னை பேசியே அழிக்கத்தான் இங்கே வரவழைச்சீங்கன்னா எனக்கு இங்கிருக்க சம்மதமில்லை."

தேநீர் கோப்பையை நொறுக்கிவிடுவது போல அழுத்தப் பற்றி இருந்தன அவன் விரல்கள்.

"வேணாம்... வேணாம். என்ன இப்படித் தொட்டாச் சிணுங்கியாய் இருக்கே, தேவி? நான் எது சொன்னாலும் மனம் போல சிரிப்பியே? அதைப் பார்த்துதானே நான்... அதைவிடு இப்போ உன் பேச்சு, பார்வை எல்லாம் நெருப்பாய் மாறிடுச்சு!"

தொட வருவன போல நீண்டன, அவன் கரங்கள்.

"வேண்டாம்" அவள் கால்கள் பின்னடைந்தன.

"வயசான லட்சாதிபதிகளைத்தான் தொட அனுமதிப்பாயா தேவி?" கசப்புடன் இறுகின அவன் உதடுகள்.

"வெளியே போகலாம் ராஜ். நீங்க. இனி ஒரு வார்த்தைகூட வேண்டாம்.

அவள், 'போதும்' என்பது போல கை நீட்டினாள். ஆத்திர மிகுதியால் அவள் கண்களில் நீர் கோர்த்துத் ததும்பின.

குளியலறைக் கதவு திறக்க, இடுப்பில் துவாலையுடன் இருந்த வருண் குழப்பமாய் இவர்களைப் பார்த்தான்.

"என்னம்மா?"

'கடவுளே...' அழ மூச்செடுத்து சுதாரித்துக்கொண்டாள். "ஒன்றுமில்லை வருண். இங்கே பார்க்கவேண்டிய வேலையைப் பற்றிப் பேசினோம்."

"சீக்கிரம் உடை மாற்றி கிளம்பு, வருண். வைஜி ஆன்ட்டியை அவங்க வீட்டு வாண்டுகளை நீ சந்திக்கணுமே."

வெகு இயல்பாய் அழைப்பு விடுத்தான், ராஜ். தலையாட்டலுடன் உற்சாகமாய் நகர்ந்தான், வருண்.

## 9

இரண்டு சிறு குழந்தைகளின் தாய் அப்படி இருப்பாள் என்று தேவி எதிர்பார்த்திருக்கவில்லை.

இளவயதுதான். ஆனால், உடல் உப்பிக்கிடந்தது. சதை அதிகமாகிப்போனதில் முகத்தின் லட்சணம் குறைந்திருந்தது. இடுங்கிய விழிகள் அப்போதுதான் தூங்கி எழுந்தாற்போலத் தோன்றின.

"வணக்கம். நான்... தேவி..." கை குவித்தாள்.



"ம்... வாங்க."

வரவேற்பு சற்று அலட்சியமாகவே இருந்தது.

"குழந்தைகள் எங்கே?"

"டி.வி. முன்னேதான் இருக்குங்க. சதா அந்த இரைச்சல் வேணும்."

"நான் பார்க்கலாமா?"

"ம்... அதோ அந்த அறையிலே."

வீடும் அவளைப் போலவே அலங்கோலந்தான். இறுக சாத்திய ஜன்னல்களும், கனத்த திரைச்சீலைகளும் சூழலை சோகமாக்கின.

டி.வி.யில் கார்டூன் எலி பூனையைத் துரத்தி மிரட்டிக் கொண்டிருந்தது. சற்று முன்பு அவன் எலி– பூனையைப் பற்றி பேசியதற்கு நேர்மாறான சம்பவம். இடரென்று குழந்தைகள் முன் தான் காட்சி அளிப்பதைத் தவிர்க்க எண்ணி,

"குரு... சித்து..." என்று முதலில் மிருதுவான குரல் அனுப்பினாள். சோபாவில் எழுந்து நின்ற குட்டிப் பெண் முகம் சிறு பூ போல தெரிந்தது.

"யாரு?" இனிய மழலை அழகாய் விசாரித்தது குழந்தை.

"நான் தேவி... உங்களைக் கவனிக்க, துணையாய் இருக்க வந்திருக்கேன்."

"ஓ... டீச்சர் ஆன்ட்டியா?" என்று மற்றுமொரு தலை நீண்டது. இது குறுகுறுப்பான துடுக்கு முகம். "அதென்ன பெயர் வச்சிருக்கீங்க, எனக்கு புதுசா இருக்குதே!"

"அம்மா, டீச்சர்ன்னாங்க. ராஜ் பெரியப்பா, ஆன்ட்டின்னாங்க."

"சுகமா! சாப்பிட்டாச்சா?"

பேச்சு தந்தபடி அவர்களை நெருங்கி அமர்ந்தாள்.

இருவரும் அழகும் அருமையுமான குழந்தைகள்.

வளர்ப்புதான் முறையாய் இல்லை.

"விளையாடி முடிச்சாச்சா?"

"என்ன விளையாட்டு?" மூத்தவன் கேட்க, சின்னது– திரையைச் சுட்டியது.

"ஆன்ட்டி, மணமா இருக்கீங்க."

"சரி, உங்கதை என்ன?"

"அதைச் சரிபண்ணத்தான் நீ வந்திருக்கே, தேவி" என்றது ஆண் குரல்.

ராஜ் எப்போது இங்கே நுழைந்தான்?

"இங்கே வேலைக்காரங்க யாருமில்லையா?"

"உண்டு. வீட்டோடு தங்கிறதில்லை. வைஜி பிரியப்படலை. ஆனா, சமைக்க- சுத்தம் செய்ய காலையில் ரெண்டு பேர் வருவாங்க."

'வேலை வாங்கவும் தனித்திறமை அவசியம்தான்' தனக்குள் சொல்லிக்கொண்டான்.

விஜயரங்கத்தின் வீட்டைக் கண்ணாடி போலல்லவா பேணினாள், இவள். ஆனால், அலங்காரமிருந்த அந்த வீட்டில் அன்பு இல்லை என்று அடிக்கடி ஏக்கமாய் நினைத்ததுண்டு.

"குட்டிப்பிள்ளைங்க குளிச்சாச்சா?"

"ஓ... நேத்து மணி தாத்தாவோடு போய் அருவியிலே குளிச்சோம்."

"அப்ப இன்னைக்கு?"

"நாளைக்குத் தாத்தா கூட்டிப்போவாரு."

அதற்குமேல் பேசிப் பொழுதைக் கழிக்கவில்லை, அவள்.

வெந்நீரில் குழந்தைகள் இருவரையும் குளிப்பாட்டினாள். நீரில் ஊறி மிருதுவான நகங்களை சீராய் வெட்டினாள். பவுடர் பூசி, சுத்தமான உடைகளைத் தேடி எடுத்து அணிவித்தாள். தலையும் வாரிவிடப்பட்ட பிள்ளைகள் பூக்கள் போலிருந்தனர்.

"இங்கே சாப்பிட என்ன இருக்கு? ஆன்டி வீட்டிலே தோசை மாவு இருக்கிறதாய் தாத்தா சொன்னார்."

"இங்கேகூட இருக்கே!"

தோசை வார்த்தபடி, குழந்தைகள் அதுவரை என்ன படித்திருந்தார்கள், ஏது அறிந்திருக்கிறார்கள், எதில் நோக்கம் உண்டு போன்ற விசயங்களைப் பேசி ரசித்துக்கொண்டாள்.

"அடே... கேஸியோகூட இருக்கா? வாசிக்கப் பழகலாம்."

"அது கஷ்டமா?"

"இஷ்டமாக்கிக்க வேண்டியதுதான். பிறகு சுலபமாய் ராகம் இழுக்கலாமே- காலையிலே படிப்பு நடுவிலே பாட்டு, பிறகு விளையாட்டு. சரியா?"

மெத்தென்ற நெய் தோசைகளை பழ ஜாம் தொட்டு சாப்பிட்டனர் பிள்ளைகள்.

"இப்போ உங்க அறைக்குப் போவோமா?"

அங்கு- அழுக்குத் துணிகளை அள்ளி மூட்டைக் கட்டி வைத்தவள், படுக்கையைச் சீராக்கி அவர்களைப் படுக்கச் செய்தாள்.

"கதை சொல்வீங்களா?"

"முதல்ல ஒரு பாட்டு பாடிப் பழகுங்க. பிறகு, கதை. நாளை



காலை சீக்கிரம் எழுந்துக்கணும்."

"அம்மாவை எழுப்பினா கோவிச்சுப்பாங்களே?"

வைஜெயந்தியின் குரல் குறுக்கிட்டது. "என்னை எதுக்கு எழுப்பணும்? எழுந்து டீச்சர் வீட்டுக்கு ஓடிப்போயிடுங்க. பிரச்சினையேயில்லை" என்றாள், சற்று இடக்காக.

"பல் விளக்கிட்டுப் படுக்கணுமே... நினைவிருக்கில்லை?"

பிள்ளைகளின் கையில் பேஸ்ட்- பிரஷ் தந்தாள், தேவி.

"இப்ப வேணாம், காலையிலே."

"இப்பவும்தான். இப்படி கீழிருந்து மேலாய்- பிறகு மேலிருந்து கீழாய் சுத்தப்படுத்தணும். அப்பத்தான் பல் கறைபடியாம பளபளக்கும்."

"நீங்க உடம்பு முழுக்க அப்படித்தான் தேய்ப்பீங்களா, ஆன்டி?"

"ஏன்டா, போக்கிரி?"

"உங்க தோல் மினுங்குதே... அதான்."

"நாளைக்கு ரெண்டு பேருக்கும் எண்ணெய்க் குளியல். பிறகு பாரு, நீயும் மினுங்குவே."

"மிருதுவாய் சருமத்தைத் தேய்த்து- வாய் கொப்பளிக்கச் செய்தவள், அவர்களின் முகம் துடைத்தாள்.

"வந்த ரெண்டு மணி நேரத்திலே வீட்டை, பிள்ளைகளை மாத்திட்டே. இத்தனை சீக்கிரம் அதுங்க தூங்காது. ஆனால், தூங்கினாத்தானே நீ நேரத்தோடு வீடு போக முடியும்" மீண்டும் அலட்சியமாய் பேசினாள், வைஜெயந்தி.

"டக்டக்" என்ற காலடி ஓசையில் இரு பெண்களும் திரும்பினர்.

"இன்னுமா இங்கிருக்கே, தேவி? உன்னை ஆயா வேலைக்கு இங்கே வரவழைக்கலை. படிப்பு சொல்லித்தர மட்டும்தான். முதல்நாள் பிள்ளைங்க உன்னோடு பழகட்டும் என்பதற்காய் விட்டேன். இனி இது தொடர வேண்டாம்."

"அங்கிள், நீங்களும் பாட்டு கத்துக்க, கதை கேக்க வாங்க."

"ஓ... அது வேறயா? அப்புறம் ஆன்டி எப்போ வீடு திரும்புவாங்க? அவங்க சாப்பிட வேணாமா? அவங்க பையனும் அம்மாவைத் தேடுவானே!"

"ம்..." ஏமாற்றத்தில் கூம்பின இரு மலர்களின் முகங்கள்.

"பாட்டும் கதையும் உண்டு குட்டிகளா?" எனக் கொஞ்சியவள்...

"15 நிமிடத்தில் கிளம்பிவிடுவேன். நீங்கள் காத்திருக்க வேண்டாம்" என்றாள், அவனிடம்.

"உத்தரவு மேடம்" என்று கேலியாய் உதடு சுழித்தவன்,

"எனக்கு பாட்டு இல்லையா?" என்றான், மெள்ள.

'உன்னால் பட்டபாடு போதுமடா சாமி' என்று உள்ளே கறுவியவள், "இல்லை" என்று தலையசைத்தாள், அழுத்தமாய்.

அவன் காலடி ஓசை தேய்ந்து, மறைந்தபின் குழந்தைகளுக்குச் சிறு தமிழ் பாட்டு ஒன்றைப் பாடிக் காட்டியவள், முதல் இரு வரிகளை அவர்களுக்குப் பழக்கிவிட்டாள்.

பஞ்சதந்திர கதை ஒன்றும் கேட்டு முடித்த பிள்ளைகள் ஆனந்தமாய் உறங்கிப்போயினர்.

தன் வீட்டுக்கு வந்தபோது சோபாவில் வருணும் சுருண்டு கிடந்தான்.

மகன் முடியைக் கோதி, அவனையே பார்த்தவனின் நெஞ்சு அடைத்தது.

இனி இவனது வாழ்வு எப்படியெப்படி போகப்போகிறதோ? ஊரார் பிள்ளைகளை அமுதூட்டி, பாடி தூங்கச் செய்து வந்தால், தன் பிள்ளை இங்கே அநாதைப் போல கிடக்கிறான்.

"எழுந்திரு வருண். சாப்பிட்டுட்டு படுக்கையிலே படுத்துக்கோ, வா."

அரைப் புன்னகையோடு சொன்னான்–

"சாப்பிட்டாச்சும்மா. கோழி ரோஸ்டும் புலவும். மணி தாத்தா நான் சாப்பிடுறச்சே கதைகூட சொன்னார். உங்களுக்குச் சாப்பாட்டை மேசையிலே மூடிவச்சிருக்கேன்."

"சரி, வா" அவனுக்குப் போர்த்திவிட்டவன், மேசை மீதிருந்த உணவை மூடி- குளிர்பதனப்பெட்டியுள் வைத்தான். ஒ குவளை பாலை மட்டும் பருகிவிட்டு படுத்தபோது உறக்கம் வரவில்லை.

## 10

விழித்தபோது அறை முழுக்க வெளிச்சம் பரவி இருந்ததைக் கண்டவள் பதறி எழுந்தாள்.

மணி ஏழரை.

சுகமான, சுத்தமான காற்று ஆழ்ந்த உறக்கத்தைத் தந்திருக்கிறது. தவிர, நேற்றிரவு வெகு நேரம் உறக்கம் வராமல் வேறு புரண்டிருந்தாளே!

வருணின் கட்டில் காலியாக இருந்தது.

முகம் கழுவி துடைத்தபடி வெளியே வந்தவளுக்கு, சிரிப்பும்



பேச்சும் கலந்த சளசளப்பு கேட்டது.

குழந்தைகள் கூடி விளையாடும் இனிய ஒலி.

மரங்களுக்கு அப்பால் மூன்று சிறு உருவங்கள் தெரிந்தன. சிறுவர்கள் இருவரும் ஓடி சாட, 'குட்டி' சித்து தத்தக்கா, பித்தக்கா என்று குண்டு கால்களால் கூடவே திரிந்தது.

இரு குழந்தைகளும் இவளைத் தேடி வந்திருக்க வேண்டும். பின், மூவருமாய் சேர்ந்து விளையாட்டில் இறங்கி இருக்கிறார்கள்.

பிள்ளைகள் இங்கே இருக்கையில் பிரச்சினையில்லை. வைஜெயந்தி தாமதமாய்த்தான் எழுந்திருப்பாள் போலும். அனைவரும் காலை உணவை இங்கே முடித்துவிட்டு, பாடங்களை ஆரம்பித்துவிடலாம்.

கொண்டை ஊசி ஒன்று பிடரியில் இசகுபிசகாய் உறுத்தவே– கூந்தலைப் பிரித்து சீவினாள். காப்பி தயாரித்து அருந்தினாள். தான் நிம்மதியாய் குடித்தபின், மூவரையும் பால் அருந்த அழைக்கலாம்.

துளிதுளியாய் சூடான பானத்தை ரசித்துப் பருகியவள், குழந்தைகளை பார்த்தபடி நின்றாள்.

திடீரென்று மூவரும் ஆனந்தக் கூச்சலுடன் ஓட, அங்கு வருவது ராஜுதான் என்பது புரிந்தது. பூசணிக்காய் அளவில், பல வண்ண பந்து ஒன்றை உயரே தூக்கிப்போட்டு பிடித்தபடி வந்தான்.

வருணின் தலையை நீவி ஏதோ பேசியவன், தன் காலைக் கட்டிக்கொண்ட சித்துவையும் எடுத்தான். மூன்று குழந்தைகள் பாசமாய் ராஜுவை சுற்றி நின்ற அந்தக் கோலம் அவளைத் தாக்கியது.

அதன் ரம்மியம் நெஞ்சை விம்மச் செய்தது.

ஆனால், இவன் மனைவி, குழந்தைகள் எங்கே?

ஒருவேளை இவனை கைக்கழுவிட்டு ஓடிப்போனாளோ? தன்னைச் சில நாள் பழக்கத்தோடு உதறிவிட்டவனை– கர்ப்பமாக்கிவிட்டு காணாமல் போனவனை ஏன் சதா நினைத்து மாய்கிறேன்!

மனதிற்குள் கடிவாளம் இட்டபடி வீட்டுக்குள் போனாள். சந்தன நிற இரவு உடை அவள் மேனியை சுகமாய் ஒட்டி, வழுக்கி அசைந்தது.

தோள்பட்டையிலும் மார்பிலும் சிறு ரோஜா மொட்டுகள் நெய்யப்பட்டிருந்தன. காதுகளில் ஒற்றை வைரம் ஒவ்வொரு

அசைவிற்கும் ஜாலமாய் மின்னின.

பிள்ளைகள் மூவருக்கும் பால் கலந்தவள், குரல் கொடுத்தாள். "வருண்- எல்லாரும் வாங்க."

"இதோ வரோம்மா."

இருவரும் மூச்சிரைக்க ஓடிவர, வருணின் கையில் செண்டு போல சித்து.

"மூவருக்கும் காலை வணக்கம்."

"உங்களுக்கும் காலை வணக்கம்" கோரசாய் பதில் வந்தது.

"பால் குடிங்க. பிறகு, கொஞ்சம் படிப்பு."

"அ. ஆ. இ. ஈ...!"

"அதேதான். எழுதத் தெரியுமா, குரு?"

"கொஞ்சம். புனிதா ஆன்டி சொல்லித் தந்தாங்க. பேப்பர், பென்சில் எடுத்துவரவா?"

புனிதா- நிர்வாகியின் மனைவியாக இருக்க வேண்டும்.

"இல்லை. மண்ணைச் சலித்துப் பரப்பலாம். பிறகு அதிலே விரலால் எழுதிப் பழகு. அதுதான் சரியான முறை. பிஞ்சு விரல்கள் பென்சிலை அழுந்தப் பிடித்து எழுதினால் நோகும்."

"ஓ... சரி."

"எழுத்துகள் பழகின பிறகு, காகிதத்தில் எழுதிப் பழகலாம். சரியா?"

"இப்ப பந்து விளையாடுறோமே!"

"சரி, நான் உடை மாற்றிட்டு வரும்வரை."

"மெள்ளவே வாங்கம்மா" சிரித்தான், வருண்.

சின்ன சித்து, சிந்தாமல் பாலை அருந்த உதவியவள், அவளது சின்ன இதழ்களை நீர் தொட்டுத் துடைத்துவிட்டாள்.

"பொறுப்பாய் பாப்பாவைப் பார்த்துக்கிறியே, வருண்?"

"எனக்குத் தங்கை பாப்பான்னா ரொம்ப ஆசைம்மா. அதான்."

ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 825 |
| ஆறு மாதம் | ரூ. 475 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை-600 007.

அவனுக்குச் 'சுருக்' என்றது– அவளை ஒற்றைப்பிள்ளையாய் நிறுத்தியது. நிஜமான அப்பா அறியாமல் வளர்த்திருப்பது எல்லாம் தனது குற்றம்தான்.

அவளது ஓரிரவு மயக்கத்தின் விளைவு.

"பிள்ளைகளை நான் அருவிக்குக் கூட்டிப்போகலாமா?" சுவாதீனமாய் வீட்டுக்குள் நுழைந்தான், ராஜ்.

நுழையமாட்டானா பின்னே?

இது அவன் தோட்டம், துரவு, வீடு!

கதர் ஒற்றை வேட்டி ஜிப்பாவிலும்கூட அவனுடைய கம்பீரம் குறையவில்லை.

அவள் விழிகளும் அவனையே நோட்டமிட்டன.

"ம்... இரவு உடைகூட வெகு அலங்காரம்தான், தேவி. விஜயரங்கம் இருந்தவரை உன்னை ராணியாகத்தான் வைத்திருக்கிறார். ஆனால், கடைசியில் ஏன் அப்படி உதறிவிட்டார் என்பதுதான் புரியவில்லை."

இவளுக்கு எரிச்சலாய் வந்தது.

நிம்மதியாய் ஒரு காப்பி குடிப்பதற்குள் இவனது இடக்குப் பேச்சின் இடைஞ்சல்.

"காப்பி குடிக்கிறீர்களா?" கடித்தப் பற்களூடே கேட்டாள்.

"அரை தம்ளர் போதும்!"

வெகு இயல்பாய் நாற்காலியை இழுத்துப்போட்டு அமர்ந்தான்.

பற்களை மேலும் கடித்தாள்.

ஏதோ உபசாரத்திற்கு ஒரு வார்த்தை கேட்டால் சண்டியர் போல அழுந்திக்கொண்டானே!

"நான் உடை மாற்றிட்டு வர்றேன்."

"இப்பத்தானே சொன்னேன்– இதுவே, அலங்காரமாய் இருக்கிறதென்று. அதிலும், உன் முடி இப்படி விரிந்து கிடப்பது வெகு கவர்ச்சியான அமைப்பு..."

இவள் நகர்ந்த அதே வேகத்தில் அவனும் நெருங்க, இருவர் உடலும் லேசாக உரசின.

அவள்– கதரின் இதமான சொரசொரப்பையும், அவன்– இரவு உடையின் மிருது வழவழப்பையும் உணர்ந்தனர்.

அதையும் மீறி என்றோ முழுமையாய் இருவரும் அறிந்திருந்த ஸ்பரிசத்தின் சாயலையும்கூட!

அச்சிறு தீண்டலைக்கூட தாங்கமுடியாதபடி அவளுக்குள் கொந்தளிப்பு– அழுகை முட்டியது.



சரேலென்று விலகி, அறைக்குள் நுழைந்து தாளிட்டாள்.

சற்று நேர தனிமை அவசியமென்று தோன்ற, குளிர் நீரில் குளித்து, ஆடை மாற்றினாள். நேற்று மாலை கட்டிய அதே சேலையையே மீண்டும் அணிந்து, இறுக கொண்டையிட்டு வெளியே வந்தபோது ராஜ் அங்கே இல்லை.

நிம்மதியாய் பிள்ளைகளுக்கு பாடம் ஆரம்பித்தாள்.

"அம்மா..." நேசமணி, பாத்திரம் ஒன்றோடு நின்றிருந்தார்.

"வாங்க பெரியவரே... என்னது கையிலே?"

"சூடாய் பால் பொங்கல். பிள்ளைகளும் நீங்களும் சேர்ந்து சாப்பிடுங்க."

"பாலும் பழமும் சாப்பிட்டாச்சு. இனி, குளிச்சபிறகு."

"மணி ஒன்பதரை. சாப்பிடுங்க. பிறகு அருவிக்கரை போய்..."

"இல்லை... தண்ணி எப்படியோ, ஒத்துக்காது."

"இது மூலிகைத் தண்ணிம்மா. ஒண்ணுஞ்செய்யாது."

"அப்படியா?" சற்று சந்தேகத்துடனே கேட்டாள்.

"மலை, காடு வழியே ஓடிவர்ற தண்ணிதானே முகட்டிலிருந்து அருவியா விழுது!"

"ஆமாம்."

"அது வர்ற பாதை முழுக்க மருந்தும், மூலிகையுந்தானே?"

"ஆமா!"

"அதாலேம்மா இங்க விசேசம். பின்னே எப்படி வைத்தியம்கூட தெளிவிக்கிறது இந்த அருவி!"

"அதெல்லாம் நிஜந்தானா பெரியவரே?"

"பின்னே? சும்மாவா... மூலிகைத் தைலத்தை 'தபதப'ன்னு உச்சந்தலையிலே தட்டி இறக்கி, தண்ணிக்கடியிலே நிறுத்தறது. கொதிச்சப்போன நரம்பும் மூளையும் அமைதிப்படும்."

"அப்புறம்?"

"ஒரு தும்மல் வராது. சில நேரம் பன்னீர் தூவறாப்போல சதா ஒரு சாரல் அடிக்கும். பாருங்க, அந்நேரம் அதுல நனைஞ்சு, ஒவ்வொரு அருவியாய் மாறிப்போய் குளிப்பாங்க. புது ஊர்– புதுத் தண்ணி... ஆனா, ஜலதோசம் அண்டாது. இந்த ஊர் தண்ணிக்கு ஒரு தோசமும் கிடையாது. அதுக்குங்கூட ஒரு ஐதீகம் உண்டுங்கம்மா."

"என்னவாம்?"

"இந்த முதியவரிடம் பேசுவது அவளுக்குப் பிடித்திருந்தது.

"குற்றாலநாதர் அத்தனை பேரது ஜலதோஷத்தையும் தானே

வாங்கிடுறாராம். அதனால் இவம் கோவில்ல அவருக்கு முழுக்குகூட வெந்நீரில்தான்!"

"அடடே...!"

வியந்து சிரித்த அவளையே பார்த்தபடி வாசலில் நின்றான், ராஜ்.

"என்ன... இனி சனி, தும்மல் பயமில்லாமல் குளிக்கப் போகலாமில்ல?"

"இன்று எண்ணைக் குளியல். என் திருப்திக்கு வெந்நீரே இருக்கட்டும். நாளை வெறுந்தண்ணீர் ஊத்தற நாள். பின்னையும் போகட்டும்."

"உன் இஷ்டம். ஆனா, இப்படிப் பிள்ளைகள் விதம்விதமாய் குளிப்பாட்ட உன்னை இங்கே அழைக்கலை, தேவி."

"ஓகோ? அருவிக்கரையில் 'பிக்னிக்' போகத்தான் அழைச்சு வந்தீங்க போல?"

பட்டென்று பதிலடித்தாள்.

## 11

ஒரு விநாடி திகைத்தவன், மறுகணம் வாய்விட்டுச் சிரித்தான். கருமீசையின் கீழே வரிசைப் பற்களின் 'பளீர்' வெண்மை வசீகரித்தது.

"சொன்னதைச் சரியாய் புரிஞ்சுக்கலை, நீ."

"நீங்களும் முறையாச் சொல்லலை."

"சரி, இன்று மத்தியானம் உனக்கு ஓய்வுதான். காலை மூன்று மணி நேரமும், மாலை மூன்று மணி நேரமும்தான் பிள்ளைகளுக்காய் அது- பாட்டோ படிப்போ... மீதிப் பொழுது உனக்கே உனக்குதான்."

"நன்றி. இத்தனை கரிசனமாய் முதலாளிகள் எல்லாருக்கும் அமைந்துவிட்டால் பிரச்சினையே இல்லை."

"என்னை வெறும் முதலாளியாகத்தான் கருதுறியா, தேவி?"

'கைவிட்டு ஓடிய காதலனாயும், கள்வனாயும்கூட கருதலாம்' என்று மனதுக்குள் கறுவியபடி மவுனமாய் நின்றாள்!

"பழைய நினைவுகள் சலனப்படுத்துது இல்லையா?" மென்மையாய் வினவினான்.

தேவியின் மனம் கனித்தது.

"நிகழ்காலத்தில் நிற்பது நல்லது, ராஜ். கடந்தவற்றை எண்ணி



உருகுவதோ, வெறும் எதிர்கால கற்பனைகளில் மூழ்குவதோ ஆரோக்கியமில்லை."

"பத்து ஆண்டுகளில் உன் அழகைப் போலவே பேச்சுத்திறனும் கூடியிருக்கிறது" உதடுகள் இகழ்வாய் அவளைப் பாராட்டின.

"நன்றி. நான் வைஜெயந்தி வீட்டுக்குப் போறேன்." கிளம்பினாள்.

வைஜெயந்தி வீட்டில் வேலைக்குப் பஞ்சமேயில்லை. வேலையாட்கள் இருந்ததால் அறைகளை சீர்படுத்துவது துரிதமாயும் எளிதாயும் நடந்தது. இவளும் துண்டு துணி எடுத்து கண்ணாடி, மரச்சாமான்களைத் தூசு தட்டினாள்.

தரையை 'டெட்டால்' நீர் கொண்டு துடைத்தெடுக்கப் பணித்தாள். ஜன்னல் கம்பிகளும்கூட கழுவப்பட்டு மின்னின. திரைச்சீலைகள், படுக்கை விரிப்பு, உறைகள் மாற்றப்பட்ட அறை, புதியது போல வசீகரித்தது.

"வேலம்மா... கங்கு எடுத்து சாம்பிராணி புகை காட்டுங்க." காலையிலே தோட்டக்காரனிடம் சில உத்தரவுகளைத் தந்திருந்தவள், முடிந்த வேலைகளை மேற்பார்வை இட்டபடி சில பசும் இலைகளையும் பூங்கொத்துகளையும் பறித்தெடுத்தாள்.

"குரு, இந்தப் பிங்கான் குவளையைக் கழுவி, நீர் பிடிச்சு வா."

"இவ்வளவு போதுமா ஆன்டி?"

"போதும். இந்தத் தண்ணியிலே துளி சர்க்கரையும் உப்பும் போடுறேன். எதுக்குத் தெரியுமா?"

"பூக்கு களையாய் இருக்கட்டுமேன்னு" என்றான், அந்தச் சுட்டி! ரசித்துச் சிரித்தாள்.

"கூட நாலு நாள் வாடாமல் நிற்கும்– அதற்குத்தான். சித்து, நீ இந்தக் குவளையிலே பூ அடுக்குறியா?"

"ஓ..."

குழந்தை உற்சாகமாய் அடுக்குச் செம்பருத்திகளை இலையோடு குவளைக்குள் செருக, இவள் அவற்றைச் சற்று சீராக்கி, இடையே ஒரு கொத்து பவழமல்லியை வைத்தாள்.

"இப்போ இது பார்வைக்கு அழகு. மணமும் தூக்குது. இதைச் சித்து குட்டி அறையிலே வச்சுடலாமா?"

"இல்ல... அம்மாக்கு... அவங்குத்தான் பூன்னா ரொம்ப இஷ்டம்" என்ற சிறுமி 'குடுகுடு'வென்று ஓடியதைப் பார்த்து நின்றாள்.

வைஜெயந்தி பாவம்தான். நேசித்த துணையை முழுமைக்கும் இழந்து நிற்பது கொடுமைதான்.

'உன் நிலையும் அதுவேதானே' -சூள்கொட்டியது. புத்தியின் மற்றொரு பக்கம்!

ஆனால், விஜயரங்கம் என்றுமே உடலாலோ உணர்வாலோ இவளது கணவராக வாழ்ந்ததில்லை. வாழ்வின், உடலின் ஒரு பாதியையே இழந்துவிட்டதாய் எண்ணி இவளு குமுறவில்லை. 'ஐயோ... இவரது நேசமின்றி மிச்ச நாட்களை எப்படிக் கழிப்பது?' என்று மலைக்கவில்லை.

அடிக்கடி நேர்ந்த உராய்வுகள் இனி இல்லை.

அந்தக் குத்த பேச்சுகளும், போலி வாழ்வும் ஒழிந்தன என்ற நிம்மதிதான் மிஞ்சியது.

இது நன்றிகெட்டத்தனமோ?

தன் இளமையின் சிறந்த ஆண்டுகள் அவருக்குத்தானே அர்ப்பணமாயின! அவருக்குரிய காணிக்கையை ஒரு தவம் போல செலுத்தியாகிவிட்டது.

"அம்மா, மணி ஒன்றரை ஆச்சுங்களே... சாப்பிடுறீங்களா?"

"இல்லை, ஆயா. குழந்தைகளுக்கு பருப்பு சோறு தந்து ஒரு மணி நேரம் படுக்கச் செய்யுங்க. எம்மகன் காத்திட்டிருப்பான்."

குற்ற உணர்வுடன் வீட்டுக்கு ஓடினாள்.

வெறுமே சாத்தப்பட்ட கதவைத் திறந்தால்... வீடு அமைதியாய் கிடந்தது. மேசை மீது சில பாத்திரங்களும், கவிழ்த்த இரு தட்டுகளும்.

"வருண்..."

"........"

"வருண், அம்மா வந்துட்டேன்..." இம்முறை குரலை உயர்த்தினாள். பதில் இல்லை.

'தூங்கிவிட்டானோ?'

சுற்றி வந்தாள். தோட்டத்திலும் அரவமில்லை என்றானதும், மனதில் பயப்புள்ளி மெல்ல பரவியது.

நாள் முழுக்க அந்த பிள்ளையும்தான் என்ன செய்வான்? கொண்டுவந்த சில புத்தகங்களை வாசித்துக் கிடக்க முடியாது. பேச ஆளோ, நண்பர்களோ இல்லாமல்...

"வருண்..."

பேர் பெற்ற பள்ளியில் அவனைத் தொடர்ந்து படிக்கச் செய்ய அவளால் முடியாது. ஆண்டுக்கு ரூ. 50 ஆயிரம், அது போக உடைகள், விடுமுறைச் செலவுகள்.

சரி, இப்போதையக் கவலை இப்போதைக்குப் போதுமே!



'வருண்!'

பதில் வராத அமைதி அவளை அச்சுறுத்தியது.

இவ்வளவு தூரம் தனியாகவா வந்தான்? அருவியின் சலசலப்பு க்க கேட்டது.

'குளிக்கிறானோ?'

நலதோசம் பிடிப்பது என்ன விசயம்.

ஒருவேளை சுழல் ஏதுமிருந்து- அல்லது, இசகுபிசகாய் ஏதேனும் ஒரு பள்ளத்திற்குள் விழுந்து...?

"வருண்!"

இம்முறை அவளது அழைப்பு, அலறலாகவே வெளிவந்தது.

"எம்மா? பிள்ளை, ராஜு தம்பியோடு தோட்டத்துக்குப் போயிருக்கான்ம்மா. பதறிட்டியோ... முகமெல்லாம் வியர்த்திடுச்சே!"

பரிவாகச் சொன்னார், நேசமணி.

"சொல்லாமல் அப்படி அவன் போகமாட்டானே!"

"அம்மா வர்றதுக்குள்ளே வந்துடலாம்னு தம்பிதான் சொல்லி கூப்பிட்டுப்போனார்."

"ரொம்ப நல்ல பழக்கம்" சிடுசிடுத்தாள்.

"தம்பியும் தனியாவேதானேம்மா இடக்கிறார். இந்த இடமே வனாந்தரம். என்னதான் பசுமையும் குளுமையும் இருந்தாலும் ஆளண்டா இடம். இதிலே இத்தனை காலம் 'வேலை வேலை'ன்னு இயந்திரமாய் ஓட்டியாச்சு. அவருக்கு பேச்சுத் துணைக்குக்கூட நான் மட்டும்தான்."

"ஏன்? அவர் குடும்பம்?"

"சிறுவயதிலே தாயை இழந்தாச்சு. தகப்பன் இருதய நோய், பக்கவாதம் எல்லாம் வந்து ரெண்டு ஆண்டுக்கு முன்னே இறந்தாக. தம்பிதான் பெத்தவரைத் தாயாய் கவனிச்சது. ஆனா, பெத்த மனசு அதனாலெல்லாம் குளுந்திடுமா? பேரப்பிள்ளையின் காலால் உதைபட்டால்ல குளிரும்!"

"ராஜு- அவருக்குக் குழந்தைகளே பிறக்கலையா?" அவளின் உள்ளே ஒரு குரூர திருப்தி தலைநீட்டியது.

ஏமாற்றி அவளை வயிறெரிய செய்தவனுக்கு, அத்தனை சீக்கிரம் பிள்ளைப்பேறு கிடைத்துவிடுமா!

ஏங்கட்டும். கோவில், குளமென்று சுற்றி அவளுக்குச் செய்த துரோகத்தை எண்ணி கதறட்டும். பிறகு, வேண்டுமானால்... பிள்ளைப்பேறு கிடைக்க முதல்ல கல்யாணம்னு ஒண்ணு

நடக்கணுமேம்மா" நேசமணி சிறு சிரிப்புடன் சொல்ல, தேவி அதிர்ந்துபோனாள்!

"அது... அவர் திருமணமே செய்துக்கலைன்னா சொல்றீங்க!"

"பின்னே! பெரியவரைக் கண்ணில் வச்சுப் பார்த்தும், அவர் கண்கலங்கித்தான் மூடிச்சு. 'கண்ணு நிறைப்பாப்போல உனக்கொரு ஜோடி அமைஞ்சு- அவனுக்கு வளைகாப்பு, பிறகு பிள்ளைக்குப் பேர்சூட்டு, சம்பந்தி வரப் போகன்னு அம்சமாய் இருக்கவேண்டிய இடம் பாழாக் கிடக்குதேப்பா'ன்னு புலம்பிட்டேதான் போனாங்க பெரியய்யா."

"ஓ..." ஓசையின்றி குவிந்தன அவள் உதடுகள்.

"அவங்களுக்கே சொன்னை நான் கழிச்ச பிறந்தவங்களாம் நம்பத் தம்பி ஐயா. கலப்பு மணம். அம்மா கிறிஸ்தவப் பொண்ணு. அவங்ககூடவே சிறு பையனாய் வேலைக்குன்னு வந்தவங்கம்மா நானு. ஜாதி மத குறுக்கிடுல அந்தப் புண்ணிய விலை ஐயா வீடு ஏத்துக்கல. ஐயாவுடைய தம்பி மகன் மட்டும் ராஜு தம்பிகிட்ட பிரியமாய் இருப்பார். அவரு சம்சாரம்தான் வைஜிம்மா. அவரும் இறந்தபிறகு... இப்படி ஒத்தக் குருவியாட்டம்..."

"நா... நான் வீட்டுக்குப் போறேன் பெரியவரே."

"ஆகட்டுங்கம்மா. சின்னதம்பி வந்ததும் அனுப்பி வைக்கிறேன்."

# 12

வீடு நுழைந்த வருண், தாயின் பார்வையை சந்திக்க பயந்து, பம்மி நின்றான்.

"சாப்பாடு ஆச்சா?",

"ம்..."

"அப்போ போய் படு. இல்லை விளையாடு" அவள் குரலில் உணர்ச்சியே இல்லை.

"மன்னிச்சிடுங்கம்மா. சொல்லிட்டுப் போகாதது தப்புத்தான்."

"பெரிய மனுசன் ஆயாச்சு."

"இல்லைம்மா... அங்கிள் இப்ப வந்திடலாம்'னு சொன்னாங்க."

"அப்ப... அவர்கூடவே இருந்திடுறது" வார்த்தைகள் சொடுக்கின. வாசற்படியில் அசைவு தெரிந்தது.



"மன்னிக்கணும், தேவி. பதறிட்டே போல... என் தப்புதான். உடனே வந்திடலாம்னு கிளம்பினேன். நம்பகிட்டே இருந்து மரக்கன்று வாங்க முக்கியமானவங்க அந்நேரம் வந்திட நேரமாயிடுச்சு."

"உங்க வழக்கமெல்லாம் எம்பிள்ளைக்குச் சொல்லித் தந்திட வேணாம்" என்ற அவளது தொனியில் ஏகப்பட்ட குத்தல்.

"என்... என்ன சொல்றே!"

"இப்படிச் சொல்லிக்காம ஓடுறதைப் பத்திதான்."

"இப்படிச் சொல்லிக்காம ஓடுறதைப் பத்திதான்." மறுகணம்- தன் அறைக்குள் போய் கதவை அறைந்து அடைத்தாள்.

ஒரு நிமிடம் கழிந்ததும், சிறு விசயத்திற்கு தன் ஆர்ப்பாட்டம் அதிகம் என்பது புரிந்தது.

"இனி வெளியே போவதா இருந்தால் என்னிடம் சொல்ல மறக்காதே, வருண்" என்ற சொல் போதும் அவனுக்கு. பூ மனது. தவிர, புத்திசாலி. இது யார் மீதோ உள்ள ஆத்திரத்தில் எங்கேயோ உதைத்த கதை. இதில் ராஜைப் பழிவாங்கிய திருப்திகூட மிஞ்சவில்லை. அவமானமாய் உணர்ந்தாள்.

தன் உணர்வுகளைக் கட்டுக்குள் வைக்கத் தெரியாத முட்டாள் என்று!

அதுவும், பெரியவர் அத்தனை எடுத்துச்சொல்லியும் இப்படி வார்த்தைகளால் விளாசுவது கிறீர்தான்.

'கடவுளே... தினம் இப்படி ஏதாவது ஒரு தவறும் வேதனையுமாய் எத்தனை நாட்களை இங்கு கழிப்பது?'

கொம்பிவிட வேண்டியதுதான். இனி இங்கிருப்பது யாருக்கும் நல்லதில்லை.

படீரென்று கதவு விரிந்தது.

சாிந்திருந்தவள், 'விருக்'கென்று எழுந்து அமர்ந்தாள். ஒடிவந்து பூங்கொத்து போல தேவியின் மடி மீது சாிந்தது சித்து.

"என்ன குட்டி... என்ன இத்தனை சிரிப்பு?"

"இன்னைக்கு அம்மா தலை பிந்தி வித்தாங்க. நல்லாக்கா?"

தன்றாகத்தான் இருந்தது.

நேற்றிரவு பார்த்த சித்துவிற்கு இன்று பார்க்கும் சித்து வெகு வித்தியாசம். "ம்... வாசமாய் பவுடர் போட்டு... இந்த பொட்டுகூட அம்மாதான் இட்டாங்களா!"

"ம்... நல்லாக்கா?"

"ரொம்ப அழகா இருக்கு."



"அம்மாக்கு பூ கொத்தேன்ல? சிரிச்சாங்க. அப்புறம் அருவிக்குப் போலாம்னு உங்கயக் கூத்திட்டு வரச்சொன்னாங்க."

இவனது வருகை முற்றிலும் யாருக்கும் உபயோகம் அற்றதல்ல. ஒரு இளம் விதவைக்கு சற்றே ஆறுதல் தர முடிந்திருக்கிறது. வாழ்வில் பிடிப்பு ஏற்பட உதவி இருக்கிறது.

"அருவிக்கா? ஓ... போலாமே. போய் கொஞ்சம் கூழாங்கல் பொறுக்கலாம். எண்ணிக்கை பயில உபயோகப்படும்!"

"எத்தனை வரை எண்ணத் தெரியும் சித்துவிற்கு?"

குனிந்து தன் பத்து விரல்களையும் பிரித்துக் காட்டிய குட்டி, "பத்து" என்று ராகமிட்டாள்.

"சமத்து" -அதே ராகத்தில் தேவியும் இழுத்தபடி குழந்தையைச் சுற்றினாள்.

இருவரும் இணைந்து சிரித்த நேரம் வைஜெயந்தி வீட்டினுள் நுழைந்தாள்.

முகத்தில் மென்தாய் ஒரு புன்னகை ஒட்டியிருந்தது. தோற்றமும் சிரட்டியிருந்தது.

"வாங்க."

"மன்னிக்கணும். நேத்து நான் அத்தனை அழகமாய் உங்களிடம் நடந்துகொள்ளவில்லை."

"அப்படி ஒன்றுமில்லை."

"பெருந்தன்மையில சொல்றீங்க. பின்னைங்க இப்படி ஒடி சிரிச்ச நாளாச்சுது."

"ம்... சந்தோசம்ங்க."

"வைஜின்னே கூப்பிடுங்க."

"சரி. அருவிக்குப் போலாம்னு சொல்லிவிட்டீங்க போல?"

"ஆமா... அதைவிட்டா இங்கே போக்கிடம்?" சற்று சலிப்பாய் வந்தது பதில்.

"இத்தனை இயற்கை அழகு வெகு சில இடங்களில்தான் வாய்க்கும்."

"அப்படி நம் மனதைச் சமாதானம் செய்துக்க வேண்டியதுதான்."

"உங்களுக்கு இங்கே பிடிக்கலையா?"

"ம்ப்ச்... பிடிக்க என்ன இருக்கு? வந்த முதல் வாரம் மயக்குற இந்த சண்பக பூமணமும், பசுமையும் ஆகான்னுருக்கும்... போகப் போக பழகி, பிறகு அலுத்திடும்."

தேவிக்கு அதில் உடன்பாடு இல்லை என்றாலும்- மறுப்பும்



கூறவில்லை.

"கடைகண்ணி இல்லையேன்னு நினைக்கிறீங்களா, வைஜி?" இதமாய் கேட்டாள்.

"நண்பர்கள், சினிமா, இசைக் கச்சேரி எதுவுமில்லை. இருக்கிறது இந்த அருவி மட்டும்தான்."

இந்தச் சலிப்பு இடத்தினால் மட்டுமில்லை என்று தோன்றியது. வாழ்க்கைத் துணையினை இழந்த விரக்தி...

"போகலாமா?"

"படுக்கை அறையில் இருக்கீங்க! உடம்புக்கு ஏதும்!" இந்த தன்னி, "நேசமணி பெரியவர் சொல்லிட்டார். காத்துக்கு நோவே அண்டாதுன்னு" சிரிப்புடன் பேச்சை திசை திருப்ப முயன்றாள், தேவி.

"ஆனால், மரணம்... எப்போது வேறுமானாலும் அண்டும் இல்லையா?"

இலக்கில்லாதப் பார்வையுடன் பேசினாள், வைஜெயந்தி.

"மனிதராய் பிறந்த எல்லாருக்கும் மரணம் நிச்சயம்தான், வைஜி. அதை உணர்ந்துகொள்கிறவன் பேராசை, பாவம், பெருமை இவற்றிலிருந்து தப்பிவிடலாம்."

"இத்தனை சீக்கிரம் வரும்னு யார் எதிர்பார்த்தா?" அவளது மூக்கு விடைத்தது.

"உண்மைதான். ரொம்ப வருந்துகிறேன்."

"அவர் இருந்தவரையிலும் இதுதான்- இந்தத் தோட்டம்தான் அவருடைய முதல் மனைவி. அதனால்கூட எனக்கு இதன்மேல் வெறுப்பு. அவர் இருந்தபோதும் இந்த வாழ்வை நான் அதிகம் ரசித்ததில்லை. அவருக்காக சகிச்சிட்டு இருந்தேன். இனி..."

"இளம்பலமா?"

"என் சோகக் கதை அலுக்குதா, தேவி?"

"இல்லை... உங்க அந்தரங்கத்தை என்னிடம் இத்தனை சீக்கிரம் நம்பி சொல்றீங்களே... பிறகு, ஏன் சொன்னோம்னுகூட நீங்களே வருந்தலாம்."

"பேசக்கூட ஆளில்லாத சூழல். புனிதாவிற்கு கணவன், பிள்ளைகள்னு நேரம் சரியாப்போகும். நீ... நீங்களும் விதவைன்னு கேள்விப்பட்டேன்..."

தலையாட்டினாள், தேவி.

"உங்களுக்கு என் நிலை புரியும்னுதான் பேசினேன்."

"புரியுது. ஆனா, நீங்க ஏதேனும் வேலையில், பொழுதுபோக்கில்

உங்களை ஈடுபடுத்திக்கொண்டால் எளிதாய் நாட்கள் நகரும்."

"நல்லா வீணை வாசிப்பேன். குரலும் பழுதில்லை. இசை கச்சேரிகள்கூட செய்ய ஆரம்பிச்ச வேளைதான் பிரசாத்- என் கணவர் என்னை சந்திச்சார். பிரியப்பட்டார். குடும்பத்தின சம்மதத்தோடு முடிந்த திருமணம். ஆனால், இங்கே கூண்டிலே அடைபட்டதுபோல தவிப்பாயிருக்க... அதுவும், அவரில்லாமல் நெருக்க அடைக்குது. உங்களுக்கு எப்படி?"

"புரியுது வைதேகி. குற்றாலம், தென்காசியிலேருந்து பாட்டு கற்றுக்க பிள்ளைங்க வரமாட்டாங்களா...? நீங்க சொல்லித் தர ஆர்வமாய் இருக்கீங்க என்பது தெரிஞ்சால் வரக்கூடுமோ?"

"இங்கே அவரோடு குடித்தனம் செய்த இடத்திலே ஒண்டியாய் இருக்கப் பிரியமில்லை... போயிடலாம்னு பார்க்கிறேன்."

"ஓ?"

"ராஜுதான் 'வியாபாரம் நல்லா தழைச்சு வர்ற நேரம் ஏன் ஒதுங்கறே!' நீயும் பங்குதாரராய் வியாபாரத்தில் ஈடுபடுங்கிறார்."

"அதுவும் முறைதான்."

"குறைபாடுபோச்சு வாழ்வு. அவர் இறந்தது விபத்தில், தேவி. அருகிலேதான் புதுத் தோட்டம் ஒன்று வாங்குவதற்காய் போன இடத்தில் பாறை உருண்டு அவர் மேல் விழுந்ததில்... இனி இசை, பணம், தொழில், லாபம்- எதுவும் ரசிக்கலை எனக்கு."

"ம்..." அனுதாபத்துடன் வருடை... உதடுகள் வழியே வழிந்த வார்த்தைகளைக் கேட்டிருந்தாள், தேவி.

"ராஜுவோ எதையும் ரசிக்கிறாப்போல இல்லை. நீங்க இங்கே வந்தபிறகு அவர் முகம்கூட தெளிஞ்சிருக்குது. ஒருவேளை நீங்க சொன்னால்...!"

"ஆங்... என்னன்னு?"

"என்னை எம்போக்குக்கே விட்டுடச் சொல்லி..."

"இது உங்கக் குடும்ப விசயம் வைதேகி."

"உங்களை ஒரு குடும்ப நபர் போலத்தான் நடத்துகிறார், ராஜு."

"அது ஒரு மரியாதை."

"அந்த ராஜு பலருக்கு தந்து நான் பார்த்ததில்லை. தானுண்டு தன் வேலையுண்டு என்ற ரகம் அவர்."

"ம்..."

"சொன்னீங்கதானே!"

"நேரம் வாய்ச்சா சொல்றேன்."

வந்த மறுநாளே வைதேகியைப் பற்றி யோசித்தவளுக்கு

இதெல்லாம் தேவையா? சிரிப்புதான் வந்தது.

## 13

பத்து நாட்கள், ரெக்கை கட்டிக்கொண்டவைப் போல பறந்தன. ஒரே இடம், ஒரே மனிதர்கள்தான் என்றாலும் வகை வகையாய் அனுபவங்கள்.

சுவாரசியங்கள் ஒவ்வொரு நாளையும் அழகுபடுத்தின.

அவள் சமைக்க தேவையே எழாதபடி பெரியவர் எதையாவது சமைத்து எடுத்து வருவார்.

"ஏன் பெரியவரே, இத்தனை வேலையை இழுத்து போட்டுக்கிறீங்க?" கடிந்தாள்.

"இதுதானேம்மா என் வேலை. இதுக்குத்தானே எனக்குச் சம்பளம்" என்பார், பரிவுடன்.

"சம்பளம் தர்றவங்களுக்கு சமைத்தால் போதாதா? எனக்கெதுக்குன்னுதான் கேட்கிறேன். நானும் உங்களைப் போல சம்பளம் வாங்குறவதானே?"

"உங்க வேலை பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிக்கிறதும்மா. நீங்க அதுமட்டுமா பார்க்கிறீங்க? தோட்ட வேலையைக்கூட விட்டுவைக்கலை. வைஜயந்திம்மாகூட நீங்க வந்துதேறு வெளி வாசல்னு போக வர இருக்காங்களே..."

"ம்... அழகாய் பாடுவாங்களாமே?"

"சொல்லக் கேள்வி. பாடிக் கேட்டதில்லை."

"நிஜமாவா?"

"வீட்டுக்குள்ளார பாடுவாங்களா இருக்கும்."

"ம்... அப்ப இந்த ஞாயிறு அவங்க கச்சேரி."

"அடடே..., எங்கேம்மா?"

"அருவிக் கரையிலேதான்" அருவி நீர் போல சிரித்தாள், தேவி.

வைஜயந்தியிடம் விபரம் சொன்னபோது ஒரு கணம் குழப்பமாய் விழித்துவிட்டு, பின் புன்னகைத்தாள்.

"புதுமையான யோசனை..."

"இனிமையான கச்சேரி."

"அப்பப்போ அறையில் பாடுகிறதுதான் தேவி. எனக்கு இப்பப் பயிற்சி போதாது."

"எங்களுக்கு அதையெல்லாம் கணிக்க தேர்ச்சி

போதாதே... பிறகென்ன?"

"அப்பப் பாடிடலாங்கிறீங்க."

"காத்திட்டிருக்கோம். அருவிக்கு சற்று தள்ளி தட்டையாய் ஒரு பாறை இருக்குதே. அது மேடை போலில்லை? தம்பூரா இருந்தால் நான் சுருதி மீட்டுவேன். இப்போ நீங்களே வீணை மீட்டி, கலைவாணி போல் நாலு பாட்டு பாடணும்."

அந்த ஞாயிறு அனைவரும் பாறையைச் சுற்றி குழுமி விட்டார்கள். பாறை மீது முத்துப் பாயாய் பளிச்சிட்டது மாக்கோலம். அதன் ஊடே சில மலர்கள். செண்பக மணம், சிறு கம்பளம்- அதில் நளினமாய் வீணை.

பாறையின் இருமருங்கும் ததும்பிய நீர்கூட அன்று அதிகமாய் மின்னியது போலொரு பிரமை!

"இன்று இந்த இடமே புதுசு போல மாறிடுச்சே மேடம்!" பாராட்டினார் சுரேஷ்- தோட்ட நிர்வாகி.

கல்யாணி வர்ணத்துடன் ஆரம்பித்தது நிகழ்ச்சி.

"தமிழ்ப் பாடல்கள் ஏதேனும் பாடுங்களேன், வைஜி."

"பாரதி பாட்டு பிடிக்குமா?"

"பின்னே? சின்னஞ் சிறு கிளியே தெரியுமா?"

ஆரம்பித்தாள். முதலில் சற்றே தடுமாறிய குரல், பின் சீராக இழைந்தது.

'கண்ணம்மா' -அழைப்பில் விதவிதமாய் பாவம் ததும்பியது. ரசித்துக் கைதட்டினார்கள், அத்தனை பேரும்.

"இப்போ... வீணையிலே 'குயில் பாட்டு' வாசிக்கட்டுமா?"

ஸ்வரங்களில் விரல் ஓட்டினாள்.

வீணை குயிலாய் கூவியது... கொஞ்சியது.

இம்முறை கைத்தட்டல் இன்னும் உரக்கக் கிளம்பியது.

"அபாரம்! இத்தனைத் திறமையை இத்தனை நாள் ஒளிச்சு வச்சிருக்க எப்படி முடிந்தது, வைஜி?"

புனிதா கேட்க வைஜெயந்தியின் முகம் பெருமையுடன் பூரிப்புமாய் விகசித்தது. ஓரப்பார்வையால் ராஜைப் பார்த்தாள். பெரும் அரசமரத்தடியில் தனியாய் சாய்ந்து நின்றான், அவன்.

"சரி, இப்போ இடைவேளை- சிற்றுண்டியும் உண்டு."

"வயிற்றுக்கும் ஈயப்படுகிறதா, பலே!"

தேசமணி சூடாய் பலகாரங்களை எடுத்து வந்திருந்தார். வெல்ல போளி, உளுந்த வடை- சட்னி அமர்க்களமாயிருந்தன. சூடாய் தேநீரையும் பரிமாறினாள், தேவி.



"யப்பா, இஞ்சிப் போட்ட மணமான தேநீர்- டிபன் அற்புதம்."

"இதற்கு தாத்தாவிற்கு ஒரு கைத்தட்டல் தந்திட வேண்டியது தான்" என்றார், சுரேஷ்.

"அதுவும் முழுக்க எனக்கில்லைங்க. மெனு போட்டு, போனித் தட்டித் தந்தது தேவியம்மாதான். அதைவிட, இப்படியொரு கச்சேரியை திட்டமிட்டதும் அவங்கதான்!"

ஆரம்பித்த கைத்தட்டல் ஓய சற்று நேரமானது! சுற்றியிருந்த பாறைகளில் மோதிய ஒலி மேலும் பலக்கக் கேட்டது. அடுத்ததாய் வைஜெயந்தி சில பக்திப் பாடல்களைப் பாடினாள்.

அந்தி மயங்கிய அந்நேரத்திற்கு காதல் தேங்கிய பொருத்தமாய் இருந்திருக்கும். ஆனால், வைஜெயந்தி அவற்றைத் தவிர்க்க வேண்டிய நிலையில் இருந்தாள். கணவன் இருந்திருந்தால்- வாய்க்குள் உருளும் நமட்டுச் சிரிப்பும் ஓரப் பார்வையுமாய்,

'அந்தி மயங்குதடி, ஆசை பெருகுதடி
கண்ணன் வரக் காணேனே!
என்று விரகம் தீர அழைப்பு விட்டிருக்கலாம்.

இறுதியாக என்ன தோன்றியதோ தெரியவில்லை.

'சொன்னதெல்லாம் மறந்தாரோ அவர்
வேதனை தீர்க்க வருவாரோ...?
என கீர்த்தனையை எடுத்தாள்.

"சொன்னதெல்லாம்" என்ற ஒரு வார்த்தையை விதம் விதமான அழுத்தங்கள், அர்த்தங்களுடன் பாடினாள். மனதுள் எத்தனையெத்தனை ஏக்க நினைவுகள் -அலை மோதினவோ?

'வருவார் வருவார் என்று வழிமேல் விழி வைத்து
காத்திருந்தேன் தோழி...
ஒரு வாரம் ஒரு மாதம் ஒரு ஆண்டும் போச்சே' பாடுகையில் வைஜெயந்தியின் குரல் உடைந்தது.

விழிகளில் இரண்டு தேங்கிய நீர் உடைப்[illegible]த்தது. இதுவரை விழி மூடி ரசித்திருந்த தேவி, இப்[illegible]து இணைந்து பாடலானாள். அவளும் அறிந்த கீர்த்தனை[illegible] அது. இவள் குரலும் இணைய வைஜி சுதாரித்துப் பாடினாள்.

ஜோடிக் குரல்கள் 'கணீர்' என்று எழுந்தன. ஆனாலும், அனைவர் உள்ளும் சற்றே கன[illegible] கலக்கம். கச்சேரி முடிந்தபோது நன்கு இருட்டியிருந்த[illegible] ராஜ தனது வாகனத்தை அருகே கொண்டு வந்து நிறுத்[illegible] அதன் முன்

விளக்குகளைத் தட்டிவிட்டான்.

"நல்ல முன்யோசனைதான்."

"அற்புதமான கச்சேரி."

"நீயும் இனிமையாய் பாடுவாய் என்பது தெரியாதே தேவி." பலவாறு பேசி சூழ்நிலையின் இறுக்கத்தைக் குறைக்க முயன்று அனைவரும் வென்றனர்.

பிசுபிசுத்த உடலைக் கழுவிவிட்டு இரவு உடைக்கு மாறினாள் தேவி. வாசலுக்கு வந்தாள்.

காற்று சிலுசிலுத்தது.

இப்போது இடம் பரிச்சயப்பட்டுவிட்டதால் நடக்கத் தயக்கமில்லை, அவள்.

ஆனால், சற்று தூரத்தில் மங்கிய ஒளியில் தெரிந்த நிழலைக் கண்டதும் உறைந்தாள்...

## 14

"பயப்படாதே தேவி நான்தான்."

அவன் முன்னுக்கு வரவும், ஜன்னல் வழியே கசிந்த ஒளி அந்த உருவம் ராஜூதான் என்று தெளிவுபடுத்தியது.

அவளது அச்சம் அதிகரித்தது!

இத்தனை நாட்கள் அவர்கள் தனிமையில் சந்திப்பதைத் தவிர்க்க முடிந்தது. பேச்சுகூட வெகு சொற்பமாயும் பொதுவாயும்தான்.

"இன்று நிகழ்ச்சி பிரமாதம், தேவி. இதுவரை நாங்கள் யாரும் இதுபோன்ற ஒன்றை யோசிக்கவே இல்லையே..."

"கலையைப் போற்றணும்."

"வெளியின் கலையை நாங்க உணரச் செய்ததற்கு நன்றி. அந்த மேடை ரொம்ப இயற்கையாய் அமைந்திருந்தது. அங்கே நிரந்தரமாய் ரெண்டு மின் விளக்குகளும் போடலாம்னு நினைக்கிறேன்."

"ம்... போடலாம்."

"எங்கே போறீ? அருவிக்கரைக்கா?"

"சும்மா... காற்று சுகமாயிருக்குது- நடக்கலாம்னு." பேச்சு இணையாய் வந்தது.



"ஓ... நடக்கலாமே..."

"இல்லை... வருண் தூங்குறான்."

"பிறகென்ன!"

"முழிச்சாத் தேடுவான்."

"அவன் பயந்த பிள்ளையல்ல."

"அதற்காக நான் கரிசனையில்லாது இருக்க முடியுமா?"

"எதற்காக விஜயரங்கத்தை மணந்துகொண்டாய் தேவி? இதே கரிசனைக்காகவா... இல்லை, அது ஏதேனும் நன்றி பெருக்கில் செய்த தியாகமா?"

முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

"வைஜி தென்காசி போக வேண்டுமென்றாள். நாலைந்து சேலைகள் வாங்க வேண்டுமாம். உன் ஆடை அலங்காரங்கள் அவளிலும் நல்லா உடுத்தும் ஆசையைத் தூண்டி இருக்கிறது போலும். இப்போ நீ போட்டிருப்பதுகூட தனிமையான இரவு உடை... விலை ஆயிரத்திற்குக் குறையாது. இல்லையா?"

பல்லை இறுகக் கடித்தாள். வார்த்தைகளை உள்ளே நிறுத்துவதற்கான முயற்சி அது.

"உன்னைவிட முப்பது வயது மூத்தவரை மணந்தது இதற்காகவா தேவி? வசதியான, பகட்டான இந்த வாழ்க்கைக்காகவா?"

மிக நெருங்கி நின்று கேட்டான்.

குரல் தணிந்து சீறல் போலக் ஒலிப்பது.

"அன்பு, நேசம், விசுவாசம்- இந்த வார்த்தைகளுக்கு உங்க அகராதியில் இடமில்லை போல... ராஜு" என்றாள், கடைசியாய்.

அவன் உதடுகளில் ஏளனம். விழிகளில் கசப்பு.

"நான் அவரை மணந்தது அதற்காகத்தான். இல்லைன்னா... எனக்கு வருண் போன்ற பிள்ளை கிடைச்சிருப்பானா, அன்பின் பரிசாய்?" அதுவரை கூர்மையுடன் உறுத்த அவன் விழிகள் சட்டென்று பணிந்தன.

"ம்... அழகின் உச்சத்தில் இருக்கும் உன்னையும் குட்டிப் பயல் வருணையும் விட்டுவிட்டு அவர் இறந்தது பாவம்தான்."

அவளுக்கு அலறவேண்டும் போலிருந்தது. 'அதைச் சொல்ல உனக்கென்ன யோக்கியதை, ராஜு? எங்களை விட்டுவிட்டு ஓடிய பேடி நீயல்லவா!' என்று!

முகம் வெளிற நின்றவளை பார்த்தவன் மெல்ல கேட்டான்.

"நீ... நீ... அவரை நேசித்தாயா தேவி? அவர் வைத்திருந்த

பணம் அவளை இளமையாக்கியதா? அழகனாக்கியதா...?"

ஆத்திரமாக நிமிர்ந்தான். அவனது விழிகள் கட்டன. ஆனால், அவன் அயரவில்லை.

"நானும் பணக்காரன்தான் என்று அன்றே மிகத் தெளிவாய் சொல்லி இருந்தால் இந்த நிலை எனக்கு இல்லை இல்லையா?"

இனி தாங்க இயலாது என்ற உணர்வில் அவன் தனது சிறிய வீட்டை நோக்கி ஓடினான். படுக்கையில் விழுந்தவனுக்கு அழுகை வெடித்துச் சிதறியது.

எத்தனை அயோக்கியத்தனம்...!

கை கழுவி ஓடிவிட்டு. இவனது முடிவுகளைத் தருவும் ஆணவம்!

உன் பிள்ளைக்குத் தகப்பன் தான்தான் என்று ஊருக்குச் சொல்லவே, விஜயராகம் என்னை மணந்துகொண்டார். கடைசியில், அந்தப் பொய் அவருக்கே சலித்துப் போய் எங்களை உதறிவிட்டார் என்பதை எல்லாம் விலாவாரியாய் இவளிடம் விவரிக்க முடியுமா என்ன?

இல்லை... அதையெல்லாம் கேட்டு ஆனந்திக்க எண்ணுகிறானோ?

பெருமூச்செறிந்தான்.

இவன் ஏன் இன்னும் திருமணம் செய்துகொள்ளவில்லை என்று தான் ஏதும் கேள்விகளால் துருவினோமா? இல்லையே...

33 வயதுள்ள ஆரோக்கிய ஆண்- அழகன்- காசு, சொத்துக்கும் குறைவில்லாதவன்- ஒண்டியாய் நிற்கவேண்டிய அவசியமென்ன?

யோசித்து... யோசித்து... தூங்கிப்போனான்.

இப்போதெல்லாம் வைஜெயந்தியின் வீட்டில் இவன் போகும் நேரம் குழந்தைகள் குளித்துத் தயாராய் நின்றனர். வீடும் சுத்தமாயிருந்தது. டி.வியின் இரைச்சல் கேட்பதில்லை. பேச்சும் பாட்டுமாய் இனிய சலசலப்புதான்.

அன்று வைஜெயந்தியின் முகம் சிரிப்பில் விரிந்திருந்தது.

"இரட்டிப்பால் எடுத்துக்கோங்க தேவி..." அன்று வீட்டுக்குப் போனதும் நீட்டினான்.

"ம்... ஜோரா இருக்கிறே- ஏதும் விசேசமா?" விரல் நுனிகளைச் சப்பியபடி கேட்டான்.

"ஆமா... நான் சில மாதங்களாய் அழுது சாதிக்க முடியாததை



இந்த சில நாட்களில் சாதித்த உங்க சாமர்த்தியத்திற்காய்...!"

"விவரமாய் சொன்னால்தானே புரியும்!"

"ராஜ் என்னை பெங்களூர் அனுப்ப சம்மதித்தாச்சு."

"உன்னை இங்கே பிடித்து வைக்க அவர் யார்?"

"அப்படி சொல்லாதீங்க தேவி. ஒரு சகோதரனைவிடப் பரிவும் பொறுப்புமாய் என்னிடம் இருந்தார்- அதனாலதான் அவருக்கு என்னை வெளியே விட மனசாகலை. தவிர, வியாபாரம் தழைக்கும்போது நானும் குழந்தைகளும் அதை அனுபவிக்கணும்கிறது அவர் எண்ணம்... நல்லெண்ணம்!"

"இப்போ அது எப்படி மாறிச்சாம்?"

"ரெண்டு நாளுக்கு முன்னே நீங்க ஏற்பாடு செய்த கச்சேரியினால்!"

"இன்னும் புரியலை- நீயே என்னைக் கூப்பிடுன்னு பலமுறை சொல்லியாச்சு."

"சரி, சரி, உனக்கும் அதே உத்தரவுதான் சரியா!"

"இந்த காசு, வசதியை நான் இங்கேருந்து அனுபவிக்கிறதைவிட... எனக்கு சங்கீதத்திலே அதிக ஆறுதல்... மாறுதல் கிடைக்கும்கிறது அவருக்கும் புரிஞ்சுபோச்சு."

"நல்லது."

"உனக்குத்தான் அதற்காக நான் நன்றி சொல்லணும்."

"இல்லை... கடவுளுக்கு! எத்தனை சொல்லியும் புரியாத மரமண்டைகளும் உண்டு. இது கடவுளாய் பார்த்து உனக்குத் திறந்துவிட்ட கதவு."

"ம்... பெங்களூரில் உங்கம்மா வீட்டுக்குப் பக்கத்திலே உனக்கொரு இடம் பார்க்கலாம்- மாசா மாசம் வேண்டிய பணம் எடுத்துக்கோங்கிறார்... ஆனா?"

"ஆனா?"

"அது எனக்கு சரியாய்ப் படலை. ஒரு விலை போட்டு மொத்த எஸ்டேட்டையும் எடுத்துக்கோங்கிறேன். எனக்கு இந்த இடத்தின் மீது ஒருவித வெறுப்பு..."

"உங்க கணவர் இங்கே இறந்ததால்தானே...?"

"இந்த இடத்திலில்லை. ஆனா, இதே ஊரில்... 'சித்ரா ஆறு ஓடும் திருக்குற்றாலம்' என்று அவர் பெருமையாய் சொல்லும் இங்குதான்?"

"ஊர் என்ன செய்யும் வைஜி!"

"சுற்றிலும் மலைகளைப் பார்க்கையில் அந்த விபத்தை என்

மனசை மறக்கமாட்டேங்குதே..."

"ம்..."

"இதிலிருந்து வரும் வருமானம் வேண்டாம். இதை விற்றுக் வரும் பணம்கூட எனக்கு அவசியமில்லை. ஆனால், பிள்ளைகளுக்கு அது உதவும். அவங்க அப்பா ஞாபகார்த்தமாய் இருக்கும்."

"புரியுது."

"ராஜுக்கும் புரிஞ்சிட்டது."

"சந்தோசம்" நேசத்துடன் கைப்பற்றி நின்றனர், பெண்கள்.

சொன்ன பிறகுதான் தன் நிலை சூனியமாகிவிட்டது புரிந்தது, தேவிக்கு...

"ஆ.... ஆனா... அப்போ எனக்கிங்கே வேலை இருக்காதில்லையா, வைஜி? வேலை பிடித்திருந்தால் இருக்கிறேன்- இல்லை போகிறேன் என்றிருந்தேன் ஜம்பமாய்- அரை மாசத்திலேயே வேலை காலி!"

வார்த்தைகள் வேதனையுடன் வந்தன.

"இப்ப உடனே நான் கிளம்பலை. சில வாரங்கள் ஆகும். என் அப்பா- அம்மாவை இங்கே வரச்சொல்லி எழுதிட்டேன். அவங்களுக்கும் இந்த ஏற்பாடு திருப்தியாய் இருக்கும். தவிர..."

"என்ன?" தேவி கேள்வியுடன் ஏறிட்டாள்.

"இங்கே ஒரு ராஜாத்தி வரப்போறா. அவளையும் பார்க்கும் ஆவல்!"

"யார்... யாரது?"

"ராஜாத்தின்னா புரியவேணாமா? ராஜனுக்கு ஜோடின்னு அர்த்தம்!"

குமிழ் சிரிப்புடன் சொன்னாள், வைஜி.

சட்டென தேவியின் உதடுகள் உலர்ந்துபோயின.

"வரப்போற ஆளைப் பார்த்தால் அசந்திடுவே தேவி- நீயும் வருணும் வந்ததில் இந்தச் சூழல் இனிமையும் கலகலப்புமாய் மாறிடுச்சு. இப்போது கவிதாவும் வந்தால்... நாள் ஓடுறதே தெரியாது."

"யாரது கவிதா?" உலர்ந்த உதடுகள் கேட்டன.

"அதான் ராஜாத்தியுடைய பெயர்! பார்த்தவுடனே 'இவளா'ன்னு போறே பாரேன்."

"ரொம்பப் படுத்தறே வைஜி."

"பத்திரிகைகளில் அடிக்கடி வர்ற முகம்- போதுமா?"

"நடிகையா?"



"மாடல்! காப்பி, சேலை, சோப்பு விளம்பரங்களில் வரும் முகமான பெண்."

"ஓகோ."

அப்போது ராஜின் காத்திருப்பு இதற்காகத்தானா? இவளுக்காகத்தானா? இந்த 'உறுமீன்' வரும் வரைக்கும்தானா? விளம்பர உலகைக் கலக்கும் பேரழகி தன் வாழ்வில் வந்து சேரும் இந்தத் தருணத்திற்காகத்தானா!

அடிதாக்கு சுத்தது. தலையும் சுழன்றது போலிருக்க... அருகிலிருந்த இருக்கையில் சரிந்தாள்.

"என்ன தேவி உன் முகம் இப்படி வெளுத்திருக்கு? எலுமிச்சை சாறு கொண்டுவரச் சொல்லவா, தேவி?... சரியாய் ஏதும் சாப்பிடுவதில்லை நீ- வந்ததுக்கு மேலும் மெலிஞ்சுட்ட..."

பரிவுடன் வைஜெயந்தி பேசியும்கூட வெறுப்பாய் இருந்தது... இவளுக்கு.

"நா... நான் கொஞ்சம் நேரம் கழித்து வரட்டுமா, வைஜி?" என்றவள், சிரமத்துடன் எழுந்துவிட்டாள்.

## 15

காலங்கள் தன்னிச்சையாய் அருவிப்பக்கம் நகர்ந்தன. தன்னளவில் சலசலப்பு ஏற்பட்ட இதயத்திற்கு ஆறுதலாய் ஒலித்தது.

நான் ஏனிப்படி தவிக்கவேண்டும்? கள்ளன், கயவன், காமுகன் என்று தினம் தினம் நான் பழித்தவன் எப்படி போனால் என்ன? யாரை மணமுடித்தால் என்ன? இதுவரை தனித்திருந்தான் என்ற உள்ளம் மனதிற்கு திருப்தி தந்தது எதனால்? அவனுக்கு மணவாழ்வு அமையப் போவது தெரிந்து மனம் ஏனிப்படி மறுகுகிறது? உடலே சில்லிட்டுத் தவிக்கிறது!

எத்தனை அடக்கியும் அந்த இரவின் நினைவுகள் திமிறி எழுந்தன.

அவன் ஸ்பரிசமும், ஆசைக் குழறல்களும், மூச்சே நிற்கும்படி வலிய செய்த ஆலிங்கனமும், தித்தித்த முத்தங்களும்... நேச நெருக்கத்தின் உச்சத்தை உணர்ந்த நொடிகளும்...!

நெஞ்சு கிழிவது போல நீண்டது நெடுமூச்சு.

"ஏக்கம் தாள முடியாமப்போனதா, தேவி?"

திடுக்கிட்டு திரும்பினாள்.

"ப... பயந்துட்டேன்."

"அத்தனைக்கு தனி உலக சஞ்சாரம் பண்ணி இருக்கே!"

அடர்ந்த மரங்கள் காற்றில் இதமாய் அசைந்தன. அவ்வது அவை அசைந்ததால் தென்றல் தவழ்ந்தது.

தூரத்தே சேலையை உயர்த்தி கணுக்கால் அளவு நீரிலும் நின்றிருந்தாள்.

இனி இவனோடு இங்கு நிற்பது ஆபத்து என்று உள்ளுணர்வு எச்சரிக்க... அவசரமாய் திரும்பினாள், கிளம்புவதற்காய்...

ஒன்றிரண்டு கூழாங்கற்கள் இடம் மாற, பாதம் பிறழ்ந்தது- நழுங்கிச் சரிந்தாள்.

மிக லாவகமாய் அவன் கைகள் அவளைத் தாங்கின.

தாங்கின இடம் சற்று இசகு பிசகாய் இருக்க, விதிர்த்து விலகினாள்.

பதற்றத்தில் நேரே நிற்பது எளிதாயில்லை.

பிடிமானத்திற்காய் உயர்ந்த அவளது கைகளுக்குச் சிக்கியது அவன் தோள்கள்தான்...! 'யப்பா... இத்தனை இறுகிய இரும்பாய் இருக்குமா ஆண் உடல்?'

பிரமித்து நின்றாள்.

"என்ன தேவி...? குழந்தை போன்று மெத்தென்று இல்லையே இவன் உடம்பு என்ற யோசனையா?" இடப்புறம் மட்டும் சற்றே உயர்ந்த கோணல் சிரிப்புடன் கேட்டான்.

"வயதான ஆண்களுக்கு, அதுவும் சதா உட்கார்ந்தே இருப்பவர்களுக்குத்தான் மென்மையான உடம்பிருக்கும். ஆனால், உனக்கு அதுதான் பிடிக்கும் இல்லையா?"

ஆண்மையான அத்தீண்டல் அவளை நிலைகுலையச் செய்திருந்தது. உடம்பின் வேட்கை, வரம்பு மீறிவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டது.

ஆனால், அவனது கடின பேச்சு- உணர்வுகளுக்கு கடிவாளமிட உதவியது.

"உங்களோடு பேச நான் தயாரில்லை" -விலகி நடந்தாள்...

"பிறகு எப்போது பேசலாம்?"

"பேச நமக்குள் ஒன்றுமில்லாதபோது என்ன பேச?"

அவன் விழிகள் இடுங்கின. "என் பொறுமைக்கும் எல்லையுண்டு, தேவி. அதிகம் சோதிக்காதே."

இது என்ன விசித்திரம்? ஏதோ இத்தனை நாட்கள் அவளைக்



காண, பேசத் தவமிருந்தவன் போல் அல்லவா பேசுகிறான்?

இவன் நினைவுகளுடன், குழந்தையுடன் தவம் போன்ற வாழ்வு வாழ்ந்தது இவளல்லவா?

ஒரு வயோதிகனோடு பெயரளவில் மனைவியாய்... மனதிற்கும் கூட இதமோ நேசமோ இல்லாத உறவோடு பத்து ஆண்டுகள்...!

பொறுமை இழக்க வேண்டியது, இவள்.

ஆனால், அதை இழந்து பேசுவது அவன்!

'பெண்களுக்குத்தான் பொறுமை தேவை' என்று எண்ணும் ஆண் உலகம், இது. அது பெண் தெய்வமாகவே இருப்பினும் கால் கடுக்க, மனம் கடுக்க தவமிருக்க வைக்கும் உலகம்.

கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறையை சில ஆண்டுகளுக்கு முன் காண சென்றிருந்தபோது அவளைக் கவர்ந்தது அந்தப் பாதச் சுவடுதான்.

படகில் உடன் வந்த பல வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தியான மண்டபத்தில் கண்மூடி சம்மணம் இட்டுவிட்டனர். சிலர் பாறையை அறைந்து தள்ள முயற்சிக்கும் கடல் அலைகளை வேடிக்கைப் பார்த்து- அந்த சீற்றத்தைத் தங்கள் புகைப்படக் கருவிக்குள் அடக்கிக்கொள்ளும் முயற்சியில்...!

தீவுப் பாறைக்குள் நகைப்பேழை போல தியான மண்டபம். அதனுள் பிரம்மாண்டமாய், கருங்கல்லில் செதுக்கியெடுத்த விவேகானந்தரின் சிலை.

அதை விட்டு விலகி நடந்தபோதுதான் அச்சிறு அறையைப் பார்த்தாள். ஒதுங்கி கட்டப்பட்ட அதன் இரும்பு கிராதிக் கதவின் வழியே எட்டிப் பார்த்தாள்- உள்ளே எதுவுமில்லை. தரைகூடப் பாறைதான். வெளியே தொங்கிய குறிப்பைப் படித்த பின்புதான் பாறையின் தரைப்பகுதியை உற்று நோக்கினாள். சற்று புடைத்து எழும்பிய சிறுபாத வடிவம் புலப்பட்டது.

பாதச்சுவடு!

தேவி கன்னியாகுமரி தவமிருந்த இடமாம், அது! கணவனுக்காக தேவி ஒற்றைக்காலால் கடும் தவமிருந்த பாறை!

பல கால அழுத்தத்தில் பாறை தேய்ந்து, அழுங்கியிருக்க வேண்டாமோ? எப்படித் திரண்டிருக்கிறதே...? சாதாரணப் பெண்ணின் பாதமல்லவே... தேவியின் திருப்பாதம்! காத்திருந்த தவிப்பில் பாறையே பொங்கிவிட்டது போலும்!

ஆம், தேவிக்கே நிலை இதுதான்!

'மாறுபட்ட பெண்ணான தனது தவம்... முடிவுறுமா? கவிதா!' தன்னையே கேள்வி கேட்ட பின்புதான் உறைத்தது- கவிதா... என்ற நம்பிக்கை தனக்கிருக்கிறதோ என்று!

இல்லை... அவன் ஏமாற்றமும், அவனது விளைவான உருவான மகனையும், மகனுக்காக மட்டுமான தன் வாழ்வும் சகித்த அவமானங்களும்... தனிமையுமான இந்த தவத்திற்கு முடிவில்லை- முக்தி கிடையாது.

அந்த மழை இரவு அவசரப்பட்டதற்கு உரிய தண்டனை, இது.

அவன் ஒரு பேரழகியோடு சல்லாபிப்பதையும், மனம் முடிப்பதையும் காண்பதற்காகவே இவள் இங்கு அழைக்கப்பட்டிருக்கிறாள்.

அவன் தொடங்குகிற மகிழ்வுக்கு வடிகாலாக... ஒரு ஆணின் குரூர திருப்திக்காக...

அவன் அழைப்பை லட்சியமே செய்யாமல் ஓடினாள்.

மறுநாள் கண்ணாடியில் தெரிந்தது வேறு முகம். வைத்த விழிகளுடனான வீங்கிய பரிதாப முகம்.

**வ**ழக்கம் போல குளித்து தயாராகிக் கிளம்பினாள்.

வருணும் கூடவே வந்து, அங்கே தன் பாடங்களை வாசித்தபடி குழந்தைகளுக்குப் பாடங்களில் உதவுவான். விளையாட்டாகவே அவன் கணக்குகளைக்கூட கற்றுத் தந்துவிடுவதால் இவள் அதற்குத் தடை சொல்லவில்லை.

தவிர, அவனை வீட்டில் விட்டுச் சென்றால், முன்னங்கிலேய முகர்ந்து பின்னேயே ஓடும் முயல்குட்டிபோல சதா நேரமும் ராஜு வீட்டில் அல்லவா போய் நிற்கிறான்.

'அங்கிள் இப்படிச் சொன்னாங்க.'

'மணி தாத்தாவோடு அப்படிப் பேசினாங்க.'

'இன்னின்ன விளையாடினோம்' என்று ஓயாத 'ராஜு புராணம்தான்.'

திருகு வலி, அது.

ஆக, அவன் "வைஜெயந்தி ஆன்டி வீட்டுக்கு உங்களோடு வரட்டுமாம்மா?" என்று கெஞ்சியபோது, சந்தோசமாய் சம்மதித்துவிட்டாள்.

வருண் இவளின் முன்னால் குதித்தோட.... தளர்வாய்



...ர்ந்தாள். வைஜியின் வீட்டுப் படியேறியபோது 'கலீர்' என ...வளைக் குலுங்கலாய் தெறித்தது சிரிப்பு!

## 16

"**வா** தேவி... இவதான் கவிதா... பிரபல விளம்பர மாடல்."

பார்த்த விழி பார்த்தபடி உறைந்தது.

படங்களில் பார்ப்பதைவிட, நேரில் அதிக வசீகரம். புருவமும், கூர் மோவாயும்கூட அபார நேர்த்தியில் இருந்தன. விழிகள் பேசின... துள்ளின.

வளைந்த உதடுகளும் அதன் பின்னே மின்னலாய் தெரிந்த முத்துப் பற்களும் மோகனம்! மூக்கும், காதுகள்கூட வடிவாய். வேண்டிய உயரமும், வளைவுகளுமாக இருந்தது உடம்பு. இளங் கோதுமை நிறம். மாசு மறுவற்ற மேனி.

"ஓ... வாங்க... வணக்கம்" குழைந்தாள்.

பதிலுக்குக் குவித்த விரல்கள், தாமரை மொட்டுதான்!

'இன்று பார்த்துதானா தூங்காது உப்பிய முகமும் விழிகளுமாய் தான் இருக்க வேண்டும்' -மறுகியது தேவியின் பெண் மனம்!

"உங்கள் முகம் பரிச்சயமானது" -என்றாள் பணிவுடன்.

"பரிச்சயமானது உங்களுடைய பெயர்!?" - துள்ளலாய் வந்தது பதில்.

"எ... எப்படி?"

"வைஜியும், ராஜுவும் உங்களைப் பற்றி அதற்குள் நூறு முறை மாறி மாறிப் பேசியாயிற்று. தேசமணி, ஆயிரம் முறை பேசினார் என்று நினைக்கிறேன்!" கண் சிமிட்டினாள்.

"ஓகோ! வைஜி, நான் குழந்தைகளை பின் அறைக்குக் கூட்டிப் போறேன்..." என்ற தேவியின் பேச்சு இடை வெட்டப்பட்டது.

"ஊச்... இன்றைக்குப் பாடம் வேண்டாம் என்று முடிவெடுத்தாயிற்று. நாம் எல்லோரும் 'பிக்னிக்' போறோம்." கெஞ்சினாள்.

"நா... நான் வரலை. தயவு செய்து..."

"எல்லோருமென்னா... எல்லோரும்தான். 'பிகு' வேண்டாம். நாம் ரெண்டு பேரும் சேர்ந்து பாட, கவிதா நடனம் ஆடுவாள்!"

"ஐய்யோ- என்னை வம்புக்கு இழுக்காதீங்க."

"நீ ஆடினால் வம்பாய் இருக்குமா, கவி?" சிணுங்கலுடன்

உள்ளே நுழைந்தான், ராஜ்.

"ம்... வந்தாச்சா? இனி பேச்சுக்கு பேச்சு என்னை வம்பிழுப்பீங்களே..." செல்லமாய் சிணுங்கினாள், கவிதா.

"நான் வம்பு இழுக்கணும்னுதானே இங்கே ஆசையாய் வந்தே?"

"நான் வியாபாரத்தில் உங்க 'பார்ட்னர்.' அந்த முறையிலே வந்தேன்."

"பங்குதாரர் நீயில்லை... உங்கப்பா."

"அப்பாவுக்கு நான் ஒரே பொண்ணு."

"அதுக்காக உன் மூளையை வச்சிகிட்டு வியாபாரமா? ரொம்ப அபாயகரமான விசயமிது!"

"ஐயோ" - செல்லமாய் அவன் மார்பில் குத்தினாள், கவிதா. இயல்பாய் அவள் கைகளைப் பிடித்துத் தடுத்தவன்-

"கிளம்புவோம்" என்றான்.

நழுவிய தேவியை அவன் குரல் தடுத்தது.

"உனக்கும் வருணுக்கும் மாற்றுடை எடுத்துக்க வருணிடமே சொல்லி அனுப்பிட்டேன், தேவி. இப்ப வந்திடுவான். இந்தருவிக்கு மேலே ஏறப்போறோம்- அங்கே அரசாங்க பழப்பண்ணை ஒன்றுண்டு. தனிமையான அருவி. யார் தொல்லையும் இல்லாமல் குளித்து..."

"நான் வரலை" என்றாள், பட்டென்று.

"நீ வைஜியின் கச்சேரிக்கு அழைத்தபோது நாங்க எல்லாரும் வரலை?"

"இல்லை... வந்து..."

வருண், ஆனந்தம் மிக ஓடி வந்தான்.

"பிக்னிக்கிற்கு எல்லாம் தயார். எனக்கு உடை எடுத்தாச்சு. உங்களுக்குத்தான் எதுன்னு தெரியலை- இதோ இந்தச் சேலை... சரியா?"

அவனுக்கு மட்டுமே கேட்கும்படி ராஜ் குனிந்து பேசினான்.

"ஆங்... பூவும் இலையுமாய்- வனமோகினி சேலை... பேஷ்" என்று!

மறுக்க முயன்ற அவளும் வாகனத்திற்குள் திணிக்கப்பட்டாள்!

குற்றாலம் போய், பின் பாதை பிரிந்து தனித்து மேலேறியது. விண்ணை முட்டும் மரங்கள்- தரையே தெரியாதபடி செடி கொடிகள். செண்பக மலர்களின் மணம்... மரங்களிலிருந்து மந்திகள் முறைத்தன. புருவங்களைத் தூக்கி விநோதமான

ஜாடைகள் காட்டின. கைக்கு கிடைத்த கனிகளைப் பறித்து தங்களுக்குள் பந்து விளையாடின.

இவளுக்கு, பள்ளியில் படித்த 'குற்றால குறவஞ்சி' நினைவிற்கு வந்தது.

"செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்."

மழைக்காலம் என்பதால் அருவிகள் பொங்கி வழிந்தன. தரைதொட்டு மீண்டும் எம்பித் தெறித்தன.

"தேனருவித் திரையெழும்பி வானின்வழியொழுகும் செங்கதிரோன் தேர்க்காலும் பரிக்காலும் வழுகும்."

ஆனால், இந்த வரிகள் நினைவுக்கு வர, ஏனோ வைஜெயந்தியின் கணவனின் அகால மரணமும் நினைவுக்கு வந்தது.

அரசு அலுவலகத்தில் அனுமதி பெற்று தொடர்ந்து மேலேற... ஐந்தருவிக்கு மேலே எட்டிவிட்டனர்.

செழித்த கருத்த மண். இடையிடையே பெரும் பாறைகள்.

அருவியின் இரைச்சல் பெரிதாய் இருந்தாலும் பழைய அருவி போல மா உயரத்திலிருந்து விழவில்லை. 'பொமரியன்' நாய்க்குட்டி போல அடக்கமாய் விளையாடியது தண்ணீர்.

"இதானா இத்தனை தூரம் ஏறி வந்தோம்!" கேட்டேவிட்டாள்.

"இந்தத் தனிமை, அமைதி வேறெங்கு கிடைக்கும்?" என்று பதில் வந்தது.

கவிதா அதற்குள் உடை மாற்றிவிட்டாள். ரோஜா நிற இரவு உடையில் ரோஜா போலவே இருந்தாள்.

"எங்கே உடை மாற்றலாம்!" வைஜெயிடம் கிசுகிசுத்தாள், தேவி.

"சின்னப்பெண் சட்டென்று மாற்றியாயிற்று. கல்யாணமாகி பிள்ளையும் பெற்ற நாம நாணி கோணலாமா?" என்ற வைஜெயந்தி, ஒரு மரத்தின் மறைவில் ஒதுங்கினாள்.

"சும்மா சொல்லக்கூடாது. பிள்ளைங்க 'டீச்சர்' எனவும், நானும் ஒரு நாற்பது, ஐம்பது வயது கண்ணாடி கொண்டை ஆளை எதிர்பார்த்தேன். ஆனால், சோழியன் குடுமி சும்மா ஆடுமா? ராஜு தேடி, அலசிதான் உங்களை எடுத்திருந்தார்– ஆசாமியோட கண்ணே தனி..." கோணலாய் சிரித்தாள், கவிதா– அவளது இடப்பக்க கன்னத்தில் அழகாய் சிறு குழி விழுந்தது. இன்னும் உடை மாற்ற தேவி தயங்கி நிற்க,

"சீக்கிரம் குளிக்கலாம். நேசமணி சித்திரான்னம் தயாரித்து எடுத்து வந்திருக்கார். ஒரு மணி நேரம் உச்சந்தலையில் தண்ணி



அடிச்சா இறங்குச்சுன்னால் பசியிலே வயிறு 'கபகப'ன்னு காந்தும்."

"ம்."

"நீங்க மச்சரம்மா மாதிரியும் இல்லை. பத்து வயசுப் பையனுக்கு அம்மா போலவும் தெரியலை. கச்சிதமாய் உடம்பை வச்சிருக்கீங்க. வருணையும்கூட... எங்கோ பார்த்த மாதிரி ஒரு நெருடல், எனக்கு! ஏதும் விளம்பரத்தில் நடிச்சிருக்கானா?"

"இல்... இல்லை" தேவிக்கு நெஞ்சடைத்தது.

"நல்லாத் தெரிஞ்ச ஜாடை." யோசனையாய் கவிதா நிற்க– இவள் மறைவிடம் தேடுவதுபோல நழுவினாள்.

ஜாடை... ராஜிவுடையதுதான் என்று கண்டுகொள்ள இன்னும் எத்தனை நேரமாகும்...! குழம்பிப் போனாள்.

தண்ணீருக்குள் தலை நீட்டிய முதல் நிமிடம் குளிர் ஊசிபோல குத்தியது. மறு நிமிடம் உடம்பு பழகி, குளுமையை அனுபவிக்க ஆரம்பித்தது.

சுத்தமாய் கோதிக் கழுவி, உடம்பு தேய்த்து நின்றபோது வெகு சுகமாயிருந்தது. பிறகு, சிலை போல அப்படியே நிற்க, நீர்– அவளைத் தாயின் வாஞ்சையுடன் குளிர்வித்தது.

எதேச்சையாய் திரும்பிய தேவி திடுக்கிட்டாள்.

கவிதாவின் ரோஜா வண்ண உடை அவளது உடம்போடு ஒட்டிவிட... அவள் உள்ளாடை ஏதும் அணிந்திருக்கவில்லை என்பது அப்பட்டமாய் தெரிந்தது.

நல்லவேளை– ஆண்கள் எட்டத்திலே நின்றனர்.

இவர்கள் 'நீராடும் படலம்' முடிந்த பிறகுதான் அவர்கள் நீருக்குள் வருவார்கள் போலும்... நல்லதுக்குத்தான்.

ஆனாலும்... தாங்காமல் சொல்லிவிட்டாள்.

"ஒரு துவாலையைப் போர்த்திக்கோ கவிதா– இப்படி குளிப்பது நாகரீகமாயில்லை..."

"ஏது?" புரியாதது போன்ற கேள்வி.

"இப்படி அரைகுறை உடையில், பொது இடத்தில் குளிப்பது..."

"வேற்றாள் யாரும் இங்கு இல்லையே!"

"ஆண்கள் உண்டு."

"எங்கப்பா, தாத்தா, அப்புறம் ராஜு... அவர் இளைஞர் என்றாலும் நாளை என்னைக் கட்டிக்கப் போறவர்."

அத்தனைக் குளுமையும் மறைந்து, தலையில் தணலைக் கொட்டினாற்போல தகித்தது.

"அதனால்?"

"பாதகமில்லை, என்கிறேன். எந்தக் காலத்தில் இருக்கிறீர்கள் தேவி? பார்க்க உங்க வயசு தெரியவில்லை என்றாலும் அது உங்களது பேச்சில் தெரிகிறது- ராஜும் நானும் ரொம்ப 'அந்நியோன்யம்- இதெல்லாம் சகஜம்..." வெட்கத்துடன் கவிதா சிரிக்க- இவளுக்கு எரிந்தது.

வெம்பிவிட்டாள். காலை ஒட்டித் தடுக்கிய சேலையைப் பிரித்து உயர்த்திக்கொண்டு, கூந்தலையும் துடைத்து உதறினாள். கண்கள் கலங்கிச் சொரிந்தன!

அழுவது அவசியமில்லை என்பது புரிந்தாலும், விழிகளை அடைக்க முடியவில்லையே!

துவாலையால் பரபரவென்று தலையைத் துவட்டினாள்.

"அதற்குள் ஆச்சா? எங்களுக்கு இடம் விடவா?"

ராஜின் கேள்வி தன் காதில் விழாதது போல நின்றாள்.

"உனக்கு சிலை போன்ற உடம்புவாகு, தேவி. விஜயரங்கம் உன்னை ரொம்பப் பதமாய்த்தான் கையாண்டிருக்கிறார், இல்லையா?"

"ராஜ்... தயவு செய்து கண்டபடி பேசவேண்டாம்."

"எனக்குத் தெரியணும், தேவி. என்னைவிட அந்தக் கிழவர் உசத்தியானவு தெரியணும். என் அன்பைவிட அவரது காதல் உனக்குத் திருப்தி தந்ததா என்பது தெரியணும்."

ஆவேசம் கண்டவன் போல அவளை உலுக்கினான். ஆடை மாற்றவேண்டி அவள் ஒரு மரத்தின் பின்னிருந்ததால், அவர்கள் பிறர் கண்களில்பட வாய்ப்பில்லை.

ஆனால்... இவள் உடம்பு ஒடுங்கி நடுங்கியது.

"அந்த மழை நாளன்று நீ இப்படித்தானே வந்து என் முன்னே நின்றாய், தேவி? இதே போல ஒட்டின ஆடை... வெடவெடத்த உடம்பு... கலந்து சிலுப்பிய கூந்தல்..."

சட்டென்று அவளை இழுத்து அணைத்தான்.

அவளுக்கு அந்த கதகதப்பு வேண்டியிருந்தது. பரிதவித்த மனதிற்கு அவனுடைய நெருக்கம் ஆறுதலாக இருந்தது.

முன்னொரு நாளின் நினைவு, அலைகளைப்போல அவளுள் மோதிச் சிதறின. கொதித்த விழிகளை மூடிக்கொண்டாள். முனங்கினாள்...

"ராஜ்..."

"பேஷ்! உத்தமப் பெண் வேடம் கட்டிவிட்டு, இங்கே ஓடிவந்தது இதற்காகத்தானா?" ஊசியால் குத்தியது, கவிதாவின் குரல்!



# 17

உண்ட மகிழ்ச்சியின் தூக்கம்.

"அம்மா!"

கேட்ட அலறல் கனவா, நிஜமா?

திடுக்கிட்டு விழித்தாள், தேவி.

"வருண்!"

மகன் மட்டுமல்ல- யாருமே அருகே இருப்பதாய் தோன்றவில்லை. இவளை மறந்துவிட்டு, வீடு திரும்பி விட்டார்களா?

பதறி எழுந்தாள். வாகனங்களை நிறுத்தியிருந்த மேடான இடத்திற்கு ஓடினாள். ஜீப்பும் காரும் நின்றிருப்பதைக் கண்டு நிம்மதியுடன் திரும்பியவளுக்கு- தனிமை நெருடியது.

"எல்லாரும் எங்கே போயிருப்பார்கள்?"

இங்கே பொங்கும் சரியும் நீர்தான் ஐந்தருவியாய் கீழே குதிக்கிறது. அதைக் காண மலையின் விளிம்பு வரை போயிருப்பார்களோ!

வருணின் அழைப்பு..." மெய்யா... பிரமையா?

இவளைத் தனியே விட்டுச்செல்ல மனமில்லாமல் இங்கேயே தங்கிவிட்ட மகனுக்கு ஏதேனும் ஆபத்தோ!

அசந்தர்ப்பமாக வைஜெயந்தி கணவனின் நினைவு வந்தது.

கல்லில் கால் பிறழ்ந்து, தவறி உருண்டு...

தன் தலையைக் குலுக்கிக்கொண்டாள்.

"வருண்... வருண்..." குரலை உயர்த்தினாள்.

சுற்றிலும் நடந்தபடி குரல் கொடுத்தாள்.

எதுவோ அசைந்த அரவம்... சன்னமாய் கேட்டது.

எங்கிருந்து?

இந்தப் பாறைகளுக்கு இடையேவா?

எக்கிப் பார்த்தாள்.

நடுவே தெரிந்தது ஒரு இருண்ட குழி... அதில்தான் ஏதோ அசைவு.

"வருண்!"

பதிலுக்கு மூச்சு இழையும் ஒலி போன்று ஏதோ கேட்டது.

மறுநொடி அவளுக்குள் அச்சம் ஊற்றெடுத்தது.

தெளிந்த நீரில் விழுந்த மைத்துளிகள் சரசரவென்று பரவி கலப்பது போல பயம், குருதியோடு உடல் எங்கும் பாய்ந்தது.

"வருண்..."

அலறலுடன் பாறைகளின் நடுவே முடிந்தவரைக் குனிந்து கையை விட்டாள்... நடுங்கும் விரல்கள் துழாவின. கைக்கு... வழவழப்பாய் ஏதோ தட்டுப்பட 'விருக்'கென கரத்தை வெளியிழுத்தாள்.

'உள்ளே அதென்ன பாம்பா?'

மலைப் பிரதேசம்... உள்ளே இருப்பது மலைப்பாம்பா?

ஒருவேளை வருணை இறுகப் பிணைத்து விழுங்கிக் கொண்டு போய்விட்டதோ! அவன் இறுதியாய் அருசி அலறியதுதான் அந்த அழைப்பா?

இவளும் அலறினாள்- கம்பு ஒன்றை எடுத்து குழிக்குள் விட்டு குத்தினாள்... கதறினாள்-

"ஐயோ... யாராவது வந்து எம்பிள்ளையைக் காப்பாத்துங்களேன்..."

"தேவி, என்னாச்சு?" கேட்டபடி மலைச்சரிவில் 'மளமள' என்று ஓடிவந்த ராஜின் பின்னே, மான்குட்டி போல துள்ளி வருவது... யார்?

வருண், வருணேதான்.

தேவியின் கைகள்... கால்கள்... உடம்பு முழுக்கத் தொய்ந்தன. நிலை நீங்கிய களைப்பில் மயங்கிச் சரிந்தாள்.

அறை மங்கலாய் இருந்தது.

"தேவி? யப்பா... முழிச்சாச்சா?" என்றது வைஜெயந்தியின் குரல்.

"ஆங்...?"

தேவியின் நெற்றிப் பொட்டுகள் தெறிக்க, முகம் சுளித்தாள்.

"இத்தனை பயப்படலாமா? உன் அலறல் கேட்டு நாங்க பதறிட்டோம்."

"வருண்?"

"இத்தனை நேரம் உன் பக்கத்திலேயேதான் இருந்தான். ஏதாவது சாப்பிடலாம், வா'ன்னு இப்பத்தான் ராஜ் கூட்டிப் போனார்."

"ம்..." யோசித்துப் பார்க்க, தேவிக்கு வெட்கமாய் போனது. எதனால் தனக்கு அப்படியொரு அச்சம்?

வைஜெயந்தி, மலைகள் ஆபத்தை- மரணத்தைக் கொண்டு வரும் என்றிருந்ததாலா?

வருணை விட்டால் தனக்கு உலகில் வேறு யாரும் இல்லை



என்பதாலா?

"உனக்கென்ன சாப்பிட எடுத்துவரலாம், தேவி? சூடாய் ரசம் சோறு?"

"பசிக்கலை, வைஜி..."

"சாப்பாடு இறங்கினாத்தானே தெம்பு வரும்?"

"தலை வலிக்குது."

"கூடவே சுக்கு காபியும் மாத்திரையும் எடுத்து வர்றேன்- சரியாயிடும்."

"இல்லை... தைலம் போதும்."

"அதுவும் அனுப்புறேன். தேய்ச்சுக்கிறதுக்குள் சாப்பிடு- என்ன!"

விரைந்தாள், வைஜெயந்தி.

வெளியே பேச்சுக்குரல்கள்- அதைத் தொடர்ந்து நுழைந்தவன், ராஜ்.

படுத்தபடி பார்க்கையில் அவன் உயரம் மிக அதிகமாய் தோன்றியது. முடி கலைந்திருந்தது. விழிகளில் கலக்கம்.

"எப்படி இருக்கிறாய் தேவி?"

"ம்..."

"உன் நிலை பார்த்து அவனும் பயந்துட்டான்."

"எங்கே அவன்?"

"பத்திரமாய் இருக்கான்."

"பார்க்கணும்" -அவளது உதடுகள் துடித்தன. கண்கள் கெஞ்சின.

"உன்கூட தனியே ரெண்டு நிமிடம் பேசலாம்னு வருணை மணி அண்ணன்கிட்டே விட்டுட்டு வந்தேன்..."

"பேச எதுவுமில்லை- எனக்கு முதல்ல வருணைப் பார்க்கணும்." அவளது குரல் உயர்ந்தது.

"ஐந்து நிமிடங்கூட அவனை அவன் அப்பாவை நம்பி விடக்கூடாதா, தேவி?"

ராஜ் வெகு இயல்பாய் கேட்ட கேள்வி... அவளை உலுக்கி, நிமிர்ந்து உட்கார வைத்தது.

"என்ன... உளறுறீங்க!"

"நிஜம்தானே? வருண் எம்பிள்ளைதானே?"

"எம்மகன்" -என்றாள், பதற்றத்துடன்.

"சரி, நம்ப பிள்ளை- ஏன் மறைத்தாய், தேவி? இத்தனை காலம் அவனை நான் பார்க்காதிருக்க செய்துவிட்டாயே.

அவள் நடக்கப் பழகியது, மழலைப் பேச்சு எதையும் நான் அனுபவிக்கவிடாமல்... இனியாவது இந்த இன்பங்கள் எனக்குக் கிடைக்காமல்லவா! அம்மாவின் அரவணைப்பு மட்டுமில்லாது அப்பாவின் அன்பும், வழிநடத்துதலும் தேவைப்படும் பருவம் அவனுக்கு... இனி என் கண்முன்னே வளரட்டும் அவன்."

அவள் முகம் சுத்தமாய் வெளுத்தது. சற்றுமுன் உணர்ந்த அதே நிலை மீண்டுமாய் உணர்ந்தாள்.

'இந்த உண்மை ராஜுக்கு எப்படி தெரிந்தது?'

அவளது சந்தேகம் உணர்ந்ததுபோல ராஜ் பேசினான்-

"பார்த்த கணமே வருணின் சாயல், பேச்சு எல்லாம் 'சரி' என்றது தேவி. ஆனால், சந்தேகம்தான். மணி அண்ணாச்சிக்கு அந்த சந்தேகம்கூட இல்லை... அவன் பிறந்ததான் எப்போதுன்னு கேட்டேன்- சந்தேகம் மேலும் நிவர்த்தியாயிற்று. வக்கீல் பாஸ்கரனுடன் பேச நேர்ந்தது. உனக்குப் பிள்ளை பிறந்த பிறகுதான் திருமணம் நடந்ததாய் சொன்னார்."

ஆக, அவள் தன் மகனை இழக்கப் போவது நிச்சயம். கனலாய் கொதித்த விழிகளை மூடிக்கொண்டாள்.

## 18

"வருண், சதா இப்படிப் பேசக்கூடாது. அம்மாக்குத் தலை வலியாமே. ஆன்டி தைலம் தேச்சுவிட்டுப் போறேன், தலைவலி அடங்கினப்புறம் நீ பேசலியாம், சரியா?" பெரியவளின் பேச்சுக்கு அடங்கினான், பிள்ளை.

"சரி ஆன்ட்டி."

துடுக்குத்தனமெல்லாம் கரைந்து, கூடாக நின்றான், வருண்.

தளிர் விரல்களில் துளி தைலத்தை எடுத்துக்கொண்டு கட்டிலின் தலைமாட்டில் அமர்ந்தாள், கவிதா.

நெற்றிப் பொட்டில் தடவி, பின் இதமாக நீவினாள்.

"நன்றி... என்னால் எல்லோருக்கும் சிரமம்."

"சிரமம் என்ன? இன்னும் ஒரு வாரம் தங்கப்போறீங்க. பிறகு, சுகமாய் வீடு போய்ச் சேரவேண்டாமா?"

இருதயத்துள் ஊசி நுழைந்தாற்போன்று வலித்தது.

"வைஜெயந்தி இன்னும் சில வாரங்கள் இங்கே இருப்பாங்களே?"



"அது அவள் திட்டம். நான் சொல்வது இன்னும் ரெண்டு ...களில் நீ குற்றாலத்தைவிட்டுக் கிளம்பினால் நல்லாயிருக்கும் ...பதுதான்."

தடவின விரல்கள், விலகின. பூமுகம் இறுகியது.

"நீ சொல்றது எனக்குப் புரியலை, கவிதா."

"எனக்குப் புரிஞ்சிடுச்சு. மரத்தடியில் நீங்க ரெண்டு பேரும்- ...ம் ராஜும் கூடி இழைவதைப் பார்த்த பிறகுதான் என் ...னக்கண் திறந்தது..."

"அவர் ஏதோ தவறாய் ஒரு தடுமாற்றத்தில்..."

"எங்களின் நிச்சயதார்த்தம் வெகு விரைவில் இங்கோ... நெல்லையிலோ நடக்கும். அதற்கு உறவிலே நிறைய பேர் வருவாங்க. அவங்க வருணைப் பார்த்துட்டு- என்னைப் போலவே மூளையைக் கசக்குவாங்க. வருண், ராஜின் மகன் என்பது புரிய அப்பாவி எனக்கு சற்று நேரமானது. எல்லாரும் அப்படிப்பட்ட அசடுகள் இல்லையே? நாலு பேர் மூளையைக் குடையும்படி வைக்க வேண்டாமென்றுதான் உன்னைக் கிளப்புறேன்."

"நீ என்ன சொல்றே கவிதா?"

மூக்கை தைல நெடி தாக்கினாலும், தலை நோவு அதிகரித்து இருந்தது. ஆளானுக்குத் தந்த அதிர்ச்சியில் தெறித்தது!

"எல்லாம் ராஜ் சொன்னார். அவர் பாவம்... பிள்ளைக்காக மருகுகிறார். விரைவில்... இரு மாதங்களில் எங்களது திருமணம். அதுவரை வேறுமானா அவர் ஆசை தீர வருணைக் கொஞ்சிக்கட்டும். பிறகு கொஞ்ச- இனி மாதிரி நாளில்லையா? ஓரிரு ஆண்டுக்குள் சிறு குஞ்சு இனியும்கூட எங்க கூட்டுக்குள் வந்துவிடும். அப்புறம், அவருக்குக் குறையேதுமில்லை. இந்த நிலைமை அவர் அடைய நீ தடங்கலாய் இருக்க வேண்டாமென்று சொல்கிறேன்."

"சரி" -ஆயாசத்துடன் விழிகள் மூடின. கவிதா சொல்வதன்படி சில வாரங்கள் வருண் இங்கே தங்கவேண்டும்- ராஜ் விளையாட ஒரு கைப்பாவையாய்- கொஞ்சித் தீர்க்க ஒரு பொம்மையாய் பயன்படவேண்டும். பிறகு, தாயும் மகனுமாய் எங்கேனும் போய், கசந்த எண்ணங்களுடன் வாழ்வைத் தொடரவேணும்- சூனியத்தை நோக்கி ஒரு முடிவில்லாத தவம்!

"அம்மா."

"வா வருண்..." சிறுவன் நுழைந்ததும் கவிதா கிளம்பினாள்.

"சீக்கிரம் புரிஞ்சுகிட்டே தேவி. பெட்டியில் அடுக்க எ... உதவி வேண்டுமானால் சொல்லி விடு- வர்றேன்."

முதலில் பார்த்து வியந்த கவிதாவின் பேரழகு, இப்போது குரூரமாய் தோன்றியது.

தன்னலம் மட்டுமே கொண்ட குரூரம். வடிவான முகம்தான்- ஆனால், அதில் அன்பில்லை... பரிவில்லை... ஓட்டைத் தங்கத் தட்டுபோல... பளபளப்புதான்... அதனால் பயன் என்ன?

"அம்மா... தலை தடவிவிடுறேன்" -பிஞ்சு விரல்கள் அவள் தலையை இதமாகப் பிடித்துவிட்டன.

"நல்லவேளை, குழிக்குள்ளே இருந்த பாம்போ, உடும்போ உங்களை ஏதும் செய்யலை- ஏம்மா பயந்தீங்க?"

'மளமள'வென்று கண்ணீர் அவள் காதோரமாய் வடிந்தது.

"ரொம்ப வலிக்குதாம்மா?" இளம் நெஞ்சு, நொறுங்கியது போன்ற வேதனை.

"ம்..." -முனங்கினாள்.

"ராஜ் அங்கிளை கூப்பிடவா?"

"உ... உனக்கு அவரை ரொம்பப் பிடிக்குதா, வருண்?"

ஒரு நொடி தயங்கினான்.

"ம்... ஆனா, உங்களுக்கு அப்புறம்தான்."

இழுத்து மகனை அணைத்தவள், கேவினாள்.

"உஷ்...! சோறை குழையவிட்டு, எடுத்து வர்றதுக்குள்ளே... இத்தனை அல்லோகலமா? எழுந்திரி வருண்... அம்மா சாப்பிடட்டும்- நீ ஏதும் சாப்பிட்டியா?"

மிருதுவாக அவனை விலக்கினாள், வைஜெயந்தி.

"ம்."

ஈரத்துணியால் தேவியின் முகத்தைத் துடைத்து, நொறுங்கக் குழைந்த சோறை ரசம் விட்டுத் தந்தாள்.

"வேணாமே..."

"காலி வயிறு ஓலமிட்டால் இராத்தூக்கம் வராது."

நெஞ்சம் ஓலமிடும்போது நிம்மதி ஏது? நித்திரை ஏது?

சுக்கு காபியோடு மாத்திரையை விழுங்கினாள்.

வருணை படுக்கச் செய்துவிட்டு, வாசலைச் சாத்தினாள் வைஜெயந்தி.

"நீ இங்கேயா தங்கப் போறே வைஜி? சித்து, குரு எங்கே?"

"பெரியவர் பொறுப்பிலே விட்டுட்டேன். நமக்கு இன்றிரவு



...சதான். ரொம்ப பயந்துட்டே நீ. யாராவது துணைக்கு ...க்கணும்."

"ஒன்றுமில்லை."

"சரி. ஒன்றுமில்லை" புத்தகம் ஒன்றுடன் மேசை விளக்கை ...டும் தட்டி உயிர்ப்பித்துக்கொண்டு, படிப்பதில் மூழ்கிப் போனாள், வைஜெயந்தி.

தேவியை தூக்கமும், விழிப்பும் மாறி மாறி பந்தாடின. உடம்பு தணலாய் உருக்கியெடுத்தது. உதறியது.

பாறை இடுக்கிலிருந்து வருணின் முகம் 'காப்பாத்துங் ...மேன்' என்று ஓலமிடுவது போன்ற கொடுங்கனவுகள். [illegible] ...ம்பினாள், வைஜெயந்தி.

அதற்கென்றே காத்திருந்தாற்போல தன் உடைகள், உடைமைகளை 'பரபர'வென்று பெட்டிக்குள் திணித்தாள், தேவி.

இன்னும் முழுக்க விடியவில்லை. நடந்து பண்ணையைக் கடந்து சாலையை அடைவது கடினம்- அதுவும் இந்தப் பெரிய பெட்டியுடன்!

ஒரு விளக்கக் கடிதம் எழுதி வைக்கவேண்டும்.

வருணைக்கூட ஒருமுறை கண்நிறைய கண்டு முத்தமிடணும். தொட்டால் விழித்துக்கொள்வானோ? அவனைப் பிரிந்திருப்பது சில வாரங்கள் என்றாலும்... அது சாத்தியமா? பின்னை, பள்ளி விடுதியில் இருப்பதாய் நினைத்துக்கொண்டால்- சாத்தியம்.

எழுத உட்கார்ந்தாள்.

'எப்படி எழுத?'

'ஐயா, உங்கள் பிள்ளையை, என் ஒரே சொத்தை உங்களிடம் சில வாரங்கள் விட்டுச்செல்கிறேன். அன்பை வேண்டிய மட்டும் அனுபவித்துவிட்டு மீண்டும் என்னிடம் பத்திரமாய் ஒப்படைத்து விடுங்கள்.

உங்களுக்கு தோப்பு, துரவு, உறவுகள், அழகும் அந்தஸ்துமான ஒரு துணை எல்லாம் வாய்த்திருக்க... எனக்கிருக்கும் ஒரே ஆறுதல், பற்று... இவன்தான். அது நினைவிருக்கட்டும்' என்று எழுதி, வைத்துவிட்டு செல்வது.

நான்கு வாரங்கள் கழித்து இவளே வந்து மகனைக் கூட்டிச் சென்றுவிடலாம்.

ஏனெனில், இவள்தான் விஸ்வாசம் அற்ற நாடோடி ஆயிற்றே.

எழுத முனைய, விரல்கள் நடுங்கின. நெஞ்சு அடைத்தது.

எழுத, எழுத கண்ணீர்தான் பொங்கி வழிந்தது. உயிரையே பிரிந்திருக்கும்.

அது வருணுக்காக மட்டுமல்ல... ராஜ் நிமித்தமும்தான். ஆனால், வார்த்தைகளால் அவளைப் பலவாறு குத்திக் கிழித்தவன் அவன்.

'எப்படி பேசுகிறீர்கள்... அறியாத பருவத்தில் என் வாழ்க்கையை அழித்தது போதாதா?' என்று கேட்டவளிடம்,

'உனக்கு முற்றும் அறிந்த பருவம்தான் வேண்டியிருந்ததோ, தேவி?' என்று விடாமல் பழித்தவன்.

உப்பு நீர், தாளை நனைத்துவிட்டது.

வேறொரு தாளை எடுக்க நீண்ட அவள் கைகள் அப்படியே துணியாய் துவண்டன.

## 19

தன்னைச் சுற்றி பல குரல்கள் கேட்டன.

ஆனால், கண்களைத்தான் திறக்க முடியவில்லை. விரல் ஒன்று நெற்றியைத் தொட்டிருந்தது.

"அளவான காய்ச்சல்" என்றது இளஞ்சூடாய் ஏதோ பானமும், சப்பு மருந்தும் அவள் வாயில் ஊற்றப்பட்டன.

"ஐயோ... வேண்டாமே- வருண்..." வாய், மருந்துடன் பிதற்றியது.

"வருண் பத்திரமாய் இருக்கிறான், தேவி- இப்படி ஒரு கடிதம் ஏன் எழுதினாய்? அவனை உன்னிடமிருந்து பிரிக்க... சேச்சே நான் எண்ணுவேனா?"

"நீங்கதான், அவன் அப்பா" -அரை மயக்கத்தில் உண்மை தயக்கமின்றி, வெட்கமின்றி வெளிவந்தது...

"தெரியும் செல்லம்மா... ஆனால், ஏன் அந்தக் கிழட்டு ராஸ்கலை கல்யாணம் செய்துகொண்டாய் என்பதுதான் புதிராய் இருக்கிறது..." அவன் அதிலேயே நின்றான்!

"வருண்... வருணுக்காய்."

"அவனுக்காக என்றால் என்னைவிட்டு ஏன் விலகினாய்... வெறுத்தாய்?"

"நீங்க வெறுத்துட்டீங்க- ஊரைவிட்டே ஓடிட்டீங்களே." அரைப் பிரக்ஞையிலும் உதடு பிதுங்கி, அழுகை வந்தது.

"ஊருக்குப் போக நேர்ந்தது உண்மைதான். ஆனால்,



உனக்குக் கடிதங்கள் எழுதினேன்? போனிலும் உன்னிடம் பேச முடியவில்லை. எந்தக் கல்லூரியில் சேர்ந்தாய் என்பதும் தெரியாமல்... சந்திக்கத் தவித்து..." ஒரு நிமிடம் மவுனித்தான்.

"அத்தனையும் விஜயராகவத்தின் சதிதான். யோசிக்க இப்போது தெளிவாகிறது. அந்தக் கிழட்டு நரியின் சூழ்ச்சியை அறியாமல் இத்தனை நாட்கள் நாம்... நான்தான் மட்டி... மடையன்."

காய்ச்சலின்றியே பிதற்றினான், ராஜ்!

"என்ன இது? மருத்துவரோ 'இது அதிர்ச்சியால் ஏற்பட்ட நிலை' என்கிறார். அவளுக்குச் சற்று அமைதி தராமல் இப்படி ஆர்ப்பாட்டம் செய்தால் எப்படி?"

அதட்டியபடி நுழைந்தாள், வைஜெயந்தி.

"இல்லை வைஜி. அவள் என்னைவிட்டு ஓடியவள் என்று பழிகூற, அவள் பணத்துக்காக ஒரு கிழவனை மணந்தவள் என்று நான் குற்றம் சாட்டிக்கொண்டே... இத்தனை நாட்களை ஓட்டி இருக்கிறோம். அவள் அவனை மணந்தது என்... என் பிள்ளைக்காக..."

"என்னது!"

"வருண் என் மகன்."

"தே... தேவியை உங்களுக்கு முன்பே தெரியும் என்றீர்கள்? அவளை மரியாதையுடன் நடத்தவேண்டும் என்று நிபந்தனையும் இட்டதால் உங்கள் உறவோ என்று நினைத்தேன்- அதனால்தான் உங்க சாயல்கூட குட்டி வருணிடம் இருக்குதா..."

"ம்... சென்னையில் படிக்கும்போது ஏற்பட்ட பழக்கம்- உறவு."

"ஆகா! அதனால்தான் இத்தனை நாள் பிரமச்சாரிக் கோலமா? அவளைத் தேடிக் கண்டுபிடித்து... யப்பா... நல்ல நாடகம்தான்."

"ஆனால், அதற்கான விலை அதிகம், வைஜி. எங்கள் இளமையில் 10 ஆண்டுகள் போயாயிற்று. ஒருவர் மீது ஒருவர் களங்க நினைவுகள். முக்கியமாய் வருணை, ஒரு அயோக்கியனின் தயவில் வளர்க்க அவளும், மகனின் மழலைப் பருவத்தைத் தவறவிட்ட நானுமாய் கொடுமை."

"நீங்கள் தவமாய் அவளுக்காய் காத்திருந்தது வீணில்லை, ராஜ். அதேபோல அவளது கடும் தவம்தான். அதுதான் உங்கள் இருவரையும் சேர்த்து வைத்துவிட்டது. தவிர, இனியொரு குழந்தை பிறக்கும்போது இருவரும் சேர்ந்து அதைக் கொண்டாடி

வளர்த்தால் போயிற்று" ஆறுதலாய் பேசினான், வைஜி.

"அப்படியொரு வாழ்வு அமையுமா? தேவி என்னை நம்புவாளா?"

"என் தவறுக்கும்வரை நம்புவாள்" அபயகரம் காட்டினான், வைஜி!

ஆனால், மூன்றாம் நாள் தேவி உடல் தேறி எழுந்துவிட்ட பின்தான் அவளை நம்பச் செய்வது அத்தனை சுலபமில்லை என்பது புரிந்தது!

"தயவுசெய்து இதுபற்றி ஏதும் பேசவேண்டாம், வைஜி" என்று தீர்மானமாய் கைகூப்பிவிட்டாள் தேவி.

இந்த சில நாட்களில் மெலிந்திருந்தாள். கண்களின் ஒளி மங்கியிருந்தது.

வருண் அன்று மாலை தனக்குப் பிடித்த சார்லி சாப்ளின் திரைப்படம் சின்னத்திரையில் காட்டுவதால் வைஜி வீட்டிலே தங்கிவிட்டான்.

நாற்காலியிலே கண்ணயர்ந்துவிட்டவளை இடிச்சத்தம் தட்டி எழுப்பியது. வெளியே சீராய் மழை ஒலி. இருட்டி விட்டிருந்தது. குளிருக்குக் குறைவில்லை.

மெல்லிய சேலையை இழுத்துப் போர்த்தியவள், ஜன்னல் வழியே வெள்ளிக் கம்பிகளாய் சொரிந்த மழையை இலக்கின்றி பார்த்தபடி நின்றாள்.

நேற்று ஊருக்குக் கிளம்பிய கவிதா சொன்னவை மட்டும் மீண்டும் மீண்டும் மனதுள் ரீங்கரிக்காவிட்டால் இது ரம்மியமான பொழுதுதான்.

இத்தனை ஆண்டுகள் மனதை அழுத்திய பாரம் இன்றில்லை.

ராஜிற்கு வருண் தன் மகன் என்பது தெரிந்தாயிற்று. தாய்-மகனைப் பிரிக்கும் உத்தேசமில்லை என்பதும் தெளிவாயிற்று. வைஜி பெங்களூர் செல்வதால் தான் வேலையை இங்குத் தொடரவேண்டிய இக்கட்டும் இல்லை.

இந்த நிம்மதியே போதும் என்று மனம் தெளிந்த வேளையில் தான் கவிதா அதில் கல்லை எறிந்துவிட்டாள்.

"நீ மாயக்காரிதான், தேவி. நினைத்த மாத்திரத்தில் காய்ச்சல், மயக்கம் எல்லாம் வரவழைத்துக்கொள்கிறாயே? அன்று அருவிக் கரையில் 'வருண்' என்று அலறி விழ, ராஜ் உன்னைப் பூமாலை போல அள்ளிச் சுமந்தார். நீ காய்ச்சல் என்று படுத்தால் அவர் முகம் கூம்பிவிடுகிறது. முதல் காதலி என்பதால்



...த பாசமோ? அல்லது, அவர் பிள்ளையின் தாய் நீ என்பதால் ...வரை மடக்கிவிடப் பார்க்காதே. என் அப்பா, பல லட்சங்களை ...ஜை நம்பித்தான் முதலீடு செய்திருக்கிறார். தவிர, தொழிலில் ...வைத்தில் இருக்கும் என் சித்தப்பாவின் ஆதரவும் அதிகம். ...னை மணந்துகொண்டால் இவருக்குப் பல அனுகூலங்கள், ...னும் 'மாமன்' என்று முன்னேறிவிடுவார். சர்வ சகஜமாய், ...பல்நாடுகளுக்குப் பறந்து கோடிகளுடன் புரளும் வாய்ப்பு- ...எல்லாம் கைகூடும் தூரத்தில்! இதையெல்லாம் ராஜ் ...னக்காக விட்டுத்தருவது சரியில்லை. அவரை நான் விட்டுத்தரப் போவதுமில்லை, புரிந்ததா?"

"நான் அன்றிரவே கிளம்பத்தான் முயன்றேன், கவிதா."

"ஆனால், தலைச்சுற்று வந்துவிட்டதல்லவா? எப்படித்தான் தேடும் நேரம் நோவு நொடி உன்னைத் தேடி வருகிறதோ? ராஜ் உருகிப்போய்விட்டார். ஆனால், இப்போது அவருக்குத் தெளிவு வந்திருக்கிறது. நெல்லைவரை என்னுடன் வந்து, அப்படியே எங்கள் நிச்சயதார்த்த மோதிரங்களையும் அவர் தேர்வு செய்வதாய் திட்டம். சென்னையில் நல்ல நகை நிறுவனங்கள் கிடைக்கும். ஆனாலும், ஆயுள்வரை என் விரலில் கிடக்கப்போவதை அவர்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது என் ஆசை!"

"ம்..."

"இந்நேரம் உன் மகனைக் காட்டி, அவரைச் சலனமடையச் செய்யாதே, தேவி. அவனுக்காய் உன்னை மணக்க வேண்டும் என்ற குற்ற உணர்ச்சி அவருக்கு அவசியமில்லை."

"போதும் கவிதா... இனியும் விஸ்தரிக்க வேண்டாம்" -இப்போது நினைக்கையிலும் அந்த பேச்சு துன்பம் தந்தது.

கதவு தட்டப்பட்டது. மணி எட்டுகூட ஆகவில்லையே? அதற்குள்ளாகவா' திரைப்படம் முடிந்துவிட்டது? மழையில் நனைந்தபடி யார் இந்தப் பொடியனை வீடு திரும்பச் சொன்னது? அவசரமாய் கதவு திறந்தாள். அங்கு பாதி நனைந்து நின்றது. ராஜ்!

## 20

மனம் எம்பித் துடித்தாலும், இயல்பாக ஒரு துவாலையைக் கொண்டுவந்து நீட்டினாள். துடைத்தவனின் பார்வை

அவளைவிட்டு விலகவில்லை.

"என்ன... என்ன விசயம்?"

"இதேபோலொரு இரவுதான் அது இல்லையா, தேவி!"

"எது?" பாவனைக் கேள்விதான்!

"பத்து ஆண்டுக்கு முன்பு... மறக்கமுடியாத மழை இரவு..." அவனது குரல் அவளை மயக்கியது.

"இல்லை... எனக்கு மறந்தாயிற்று." "பொய். வருண் உருவான நாள் உனக்கு மறக்காது, மறக்கக்கூடாது என்றுதானே அவனுக்கு 'வருண்' என்று பெயரிட்டாய்?"

'வாழ்க்கையை எதிர்காலத்தை நோக்கி வாழவேண்டும்; கடந்த காலத்தை நோக்கிப் புரிந்துகொள்ள வேண்டும்' என்பது அவளுக்குப் பிடித்த, உதவிய பொன்மொழி.

அதை அவனிடம் சொன்னவள், "எதிர்காலத்தை மட்டும் பாருங்கள், ராஜ்" என்றாள், மென்மை.

"எதற்காய் இப்படியொரு முடிவு?"

"யாருக்காக என்று வேணுமானால் கேளுங்கள்."

"குழப்புகிறாய், தேவி."

"கவிதா என்னிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாள்."

"அவள் எதற்கு நம் விசயத்தில் தலையிடணும்?"

"வருண் உங்கள் மகன் என்பதைக்கூட நீங்கள் அவளிடம் சொல்லி இருக்கிறீர்களே... அந்த உரிமையில்."

"பொய் கவிதா. அவள் ஒட்டுக் கேட்டிருக்கக்கூடும்."

"எப்படியோ... நேற்று நீங்கள் அவளுடன் சேர்ந்து நிச்சயதார்த்த மோதிரம் வரை வாங்கிவிட்டு, பழைய நினைவுகளை என்னுடன் கிளறுவதில் அர்த்தமில்லை."

"என்ன சொன்னாள், அந்த அழகு முட்டாள்?"

"கூடிய விரைவில் உங்கள் இருவருக்கும் கல்யாணமாம். வருணை எண்ணி நீங்கள் மருகுவது தப்பு ராஜ். நானும் அவனும் வரும் வாரம் இங்கிருந்து கிளம்பிவிடுகிறோம்."

"நீ இப்படி மிரட்டுவது முறையில்லை. சதா போய்விடுவேன் என்றால்..."

"சொல்லிக்கொள்ளாமல் ஓடியவர் நீங்கள்!" திருப்பியடித்தாள்.

"நான் கோழையில்லை. நம்மை சந்திக்கவிடாத டாக்டர் விஜயராங்கம்தான் கோழை."

"அவரைப் பற்றி பேச வேண்டாம், ராஜ். 'உனக்குப் பிறக்கப்



...கும் குழந்தைக்கு தகப்பனாய் இருக்க நான் தயார்' என்று ...ர் கூறியிராவிட்டால் இன்று வருண் இல்லை. அழிந்திருப் ...ன். போரில் ஆண்மையிழந்தவர் என்றாலும் அவரின் ...செய்கை ஆண்மையுள்ளது."

"என்... என்ன சொல்கிறாய்? டாக்டர், ஆண்மையற்றவரா?"

அவன் குழம்பிய முகத்தில் கொள்ளை ஆறுதல்! "இல்லை ...யில் அவரை மணமுடிக்க சம்மதித்திருக்க மாட்டேனே?"

"அது... அது எனக்கெப்படி தெரியும்? அவரும் நீயும் ...லாபித்து மகிழ்ந்திருப்பதை என் கற்பனையில் கண்டு ...த்தனை நாட்கள் தவித்துப் புழுங்கி இருக்கிறேன்..." தலை ...யை இரு கைகளாலும் அழுந்த தேய்த்தான்.

"ஓடினவர் என்னை முழுதும் மறந்துவிட வேண்டியதுதானே?"

"ஓடினாய் என்று கோடி முறை சொல்லிவிட்டாய், தேவி. ...ன் மீது நம்பிக்கை அவ்வளவுதானா? என்ன ஆயிற்று, எதற்காய் ...போனான்? சரி... அவன் வரும்வரை காத்திருப்போம் என்று..."

"எவ்வளவு ஆண்டுகள் அந்தக் காத்திருப்புப் படலம்?" ...க்கதாளமாய் வினவினான்.

"ஓரிரு வாரங்கள்."

"நான் இருந்தது அதே வீடு. என்னை அங்கு தேடிவருவது அத்தனை சிரமமா?"

"வந்தேன். வந்தவன் நாயைப் போல விரட்டப்பட்டேன். பத்து நாட்களுக்குப் பிறகு உன் வீட்டுக்கு வந்தேன். விஜயராங்கத்திடம் 'நான்தான் ராஜ்- தேவியைப் பார்க்க' என்று ஆரம்பித்த உடனே 'காவாலிப் பயல்கள் இங்கு வருவதை நானோ, அவளோ விரும்பவில்லை' என்று கூர்க்காவிற்கு ஜாடை காட்டினார். அவன், என்னை விரட்ட... அவமானத்திற்கு அஞ்சி, பிறகு கடிதம் எழுதினேன். அவை உன் கைக்கு கிடைக்கவே இல்லை என்பது தெளிவு. இல்லையென்றால், இத்தனை குழப்பங்கள் ஏன்?"

"வந்திங்களா?" என்னமாயிருந்தது. அவளது தொனி.

"உன்னைச் சொல்லியும் குற்றமில்லை. பத்து ஆண்டு காத்திருந்த களப்பு உன்னை இப்படி மாற்றிவிட்டது."

"இப்போது பழையவற்றைக் கிளறி ஆகப்போவது என்ன?"

"நம் எதிர்காலம், தேவி. தேசமணி மீது உனக்கு பிரியம், நம்பிக்கை உண்டுதானே?"

"ஆக?"

"அவரைப் பேசவிட்டு, விவரங்களைக் கேள்."

"ஏன் ராஜ்? எனக்கிருக்கும் கடுகளவு கவுரவத்தையும் நசுக்கிவிடவா?"

"காதலில் கவுரவம் பார்ப்பது அநாவசியம்."

"அது சரிதான். ஆனால், நமக்கிடையே காதல் எங்கே இருக்கிறது?"

"நம்மிடையே... நமக்குள் இல்லையென்றால்... நம் பிள்ளையைக் கண்ணின் மணியைப் போல நீ வளர்ப்பாயேன் என நான் உனக்காகக் காத்திருப்பானேன்? அதுவும், மரணப் படுக்கையில் என் அப்பாவின் கண்ணீரைப் பார்த்தபிறகும் மசியாமல் ஒண்டியாய் நின்றேன். ஓரிரு ஆண்டு அல்ல- பத்து ஆண்டுகளாய் நீ எனக்குக் கிடைப்பாய் என்றுகூட கருதவில்லை, தேவி. வேறு யாரையும் மணக்க எனக்கு மனமில்லை... அவ்வளவுதான்."

பெருமூச்செறிந்தவனைப் பார்க்க பாவமாய் இருந்தது. அவன் தலையை நெஞ்சோடு அணைத்து கோதிவிடலாம் போன்ற பரிதவிப்பு... ஆனால், அந்நேரம் சந்தேகப் பாம்பு புற்றைவிட்டு தலை நீட்டியது.

"அதெல்லாம் சமீபகாலம் வரை நீங்க பேரழகி கவிதாவைப் பார்க்கும் வரை. அவள் தந்தை, உறவு என்று பலர் உங்களைப் பெரும் கோடீஸ்வரனாக்கும் முயற்சியில் இருக்கிறார்களே..."

"நான் பேடியில்லை, தேவி. காசுக்காக ஒருத்தியைக் கல்யாணம் செய்யும் பேடி ரகமில்லை" அவன் முகம் இறுகியது.

"சரி, கவிதா மீது காதல் தோன்றினால்?"

"உனக்குக் கற்பனை அதிகம்."

"கவிதாவே சொன்னாள்– நீங்கள் அவளுக்கான நிச்சயதார்த்த மோதிரத்தைத் தேர்வு செய்யவே அவள்கூடப் போனதாய்..."

"நான் நெல்லை போனது வைஜெயந்தியின் நிலத்தை என்னைவிட... அதிகம் காசு தந்து யாராவது வாங்குவார்களா என்பதைக் கண்டறிய. நானே வாங்கிக்கொள்வது உசிதம் என்ற முடிவிற்கு வர, அங்கே போய் வந்தது உதவியது– அவ்வளவுதான்."

கதவு தட்டப்பட்டது.

"யார்... யாரது?"

"நாந்தாம்மா... சூப் போட்டேன். மிளகு, சீரகம் போட்டது. குளிருக்கு இதமாயிருக்கும். உங்க உடம்பும் தேறும்."

இரண்டு கோப்பைகளை எடுத்து ஆவிபறக்கும் சூப்பை நேசமணி நீட்ட... அதை வாங்கவும் தெம்பின்றி அமர்ந்து இருந்தாள், தேவி.



## 21

"நேசமணி அண்ணாச்சியின் கதைகளைக் கேட்டு ரொம்ப நாளாச்சு. ஒன்றை அவுத்து விடுங்களேன். சூப் குடிச்சபடி கதை கேட்பது தனி சுகம்."

"என்ன கதை தம்பி?" வெட்கமாய் சிரித்தவர், கதவோரம் சாய்ந்துகொண்டார்.

"போலீசிலே மாட்டின அந்தக் கதை... தலைப்பு 'லாக்கப்பில் ஓரிரவு!'"

"சுவாரசியமாய் இருக்கும் போலே பெரியவரே... சும்மாச் சொல்லுங்க" தேவி அவரை ஊக்கினாள்.

"கச்சடாப் பொண்ணைப் பத்தியதும்மா– சொல்லக் கூச சமாசாரம்."

"சொல்லுங்க... காரணமாத்தான் அந்தக் கதையைக் கேட்கிறேன்."

"ம்... சொல்றேன்" நேசமணியின் கனைப்போடு கதை ஆரம்பமானது.

"அது ஜூன் இருவதுங்கம்மா. சனிக்கிழமை. சனிதோறும் தம்பி எனக்கு ஓய்வு தந்திடுவாரு. அன்னைக்கு நூலகம், பேராசிரியருங்க வீடுன்னு அவர் அலைஞ்சிட்டு வந்து, நான் செய்து வைச்சிருப்பதைச் சாப்பிட்டுட்டு... அந்த வாரம் முழுக்க படிச்ச, சேகரிச்ச செய்திகளையெல்லாம் தொகுத்து எழுத உக்காந்திடுவாரு. நான் ஏதாவது கலந்த சோறு, காப்பி, வடகம்னு எளிமையாய் செய்து வச்சிட்டுக் கிளம்பிடுவேன்."

"சென்னையிலே உங்க உறவுக்காரங்க யாரும் உண்டா?"

"ஒருத்தருமில்லைம்மா. சினிமா தியேட்டருதான் புகலிடம். மதியம் ஒண்ணு, சாயந்தரம் ஒண்ணுன்னு படம் பார்ப்பேன். இல்லை... கடற்கரையில் சுண்டல் கொறிச்சுட்டு காலார நடப்பேன்!

"அண்ணாச்சிக்கு ஒருநாள் தன் சமையல்லேருந்து விடுதலை. வாய்க்கு ருசியா இட்லி, பாயா, பிரியாணின்னு வெளியே வெட்டிடுவார்."

ராஜ் புன்னகைத்தான்.

"அண்ணா நகருலே நம்ப வீடு கொஞ்சம் எட்டதான்மா. பத்து ஆண்டுக்கு முந்தி அதிக வீடுங்க கிடையாது.

முன்னேயில்லையா? நான் ஒரு கத்து வருவேன். எங்கேவு, பசிக்குதோ அங்கே சாப்பாடு. பத்தரை போல வீடு திரும்புவேன். பஸ் நிறுத்தத்திலேருந்து நம்ம வீடு, பதினைஞ்சு நிமிட நடை— அன்னைக்கும் அப்படித்தான். ஆனா, அதிக விளக்கில்லாத மசமசப்பு."

"ம்... இப்போது சோடிய வெளிச்சத்திலே ரோடும் வீடும் தங்கமாய் மினுக்குது."

உள்ளே ஏக இறுக்கம் இருந்தாலும் இலகுவாய் பேச முயன்றாள், தேவி.

கொஞ்ச தூரம் நடக்கிறதுக்குள்ளே ஏதோ பொம்பளைக் குரலு அலறுது... 'காப்பாத்துங்க... யாராச்சும் காப்பாத்துங்க'ன்னு. எங்க இருந்துடான்னு நோட்டமிட்டா ஒரு ஆட்டோவிலிருந்தும்மா.

"பாவமே... ஏதாச்சும் உதவணுமேன்னு எனக்குள்ள துடிப்பு. ஆட்டோவும் குடிச்சவன் போல மெதுவாய் ஊஞ்சலாட்டமா ஆடி வருது."

"ம்..."

"டேய் நிறுத்துடா'ன்னு ஓடிப்போய் வாகனத்தை மறிச்சேன். உள்ளேயிருந்து ஒருத்தன் இறங்கி, என்னை இடிச்சுத் தள்ளிப்புட்டு ஓடினான். கையில கத்தி மின்னுவதைப் பார்த்தேன். உள்ளே ஒண்டிக் கிடந்தது ஒரு பொண்ணு. 'கத்தியைக் காட்டி காசைப் பறிக்கானுங்கண்ணே... நல்ல நேரத்துல எம்மானத்தைக் காப்பாத்துனே'ன்னு கைகூப்பினா.

டிரைவரும் 'காலங்கெட்டுப்போச்சு நைனா. இன்னா மாதிரி மிரட்டுறான் தெரியுமா? 'நகையைக் கொடு... சேலையையும்கூட நல்லாக்கிதே– உருவிடுங்கிறான்! நீ வராங்காட்டி படா பேஜாராகிப்போயிருக்கும்'ன்னான்."

அவர் பேசிக் காட்டிய சென்னைத் தமிழ் கேட்டு சிரித்தாள், தேவி.

"அப்போ கதாநாயகன் போல அந்தப் பெண்ணைக் காப்பாத்திட்டீங்க."

"அதென்னம்மா விசேசம்! காப்பாத்தினது நாயகியை இல்லை, வில்லியை!"

"ஐய்யோ..."

"ஆட்டோவில ஏறுங்கண்ணே... உங்களை இறக்கி விட்டுடுறேன். எனக்குத் துணைன்னா சரிடாப்பான்னு ஏறின



என்னிய ஒரு மாதிரி பார்த்தா... சிரிச்சா மறுநிமிடம் மேல கையைப் போட்டுட்டாம்மா. அரண்டு 'விடும்மா'ன்னு திமிறினா, "சரி, அப்ப உங்கையில இருக்கிற பணத்தைக் கொடுப்பியாங்கிறா!"

"அப்பமே இந்த மாதிரி அடாவடிக் கொள்ளை எல்லாம் இருந்ததா?"

"அதென்னங்கம்மா அப்பமே இப்பமேன்னு? எப்பவும் மனுசன் ஒரே மாதிரிதான். கெட்டதும் நல்லதும் எப்போதும் உண்டு."

"உண்மைதான்."

"அதுவும் மணி அண்ணாச்சி வெளியே கிளம்பும்போது அசத்தலாய் உடுத்திக்குவார். நயமான பருத்தியில வேட்டி, ஜிப்பா, கடிகாரம், விரலுக்கு மோதிரம்ன்னு பார்க்க சீமான்தான்."

"அவ ஏதோ ஆயிரக்கணக்கிலே எங்கிட்டே பணம் பெயருமுன்னு நினைச்சுட்டா போல! மிரட்டினா. கொஞ்சினா. நான் மசியலை. என் ஜெமிம்மாவை நினைச்ச மனசிலே, அணைச்ச கையிலே வேறு ஒருத்தியா– அவ எம்பொண்டாட்டி இறந்து அப்பவே பல ஆண்டு ஆயிடாச்சும்மா... ஆனா, எம்மனசிலே சபலமேயில்லை. எங்க அன்பு அத்தனை உசத்தி!" தங்கள் நேசத்தை நினைவுகூர்ந்த கர்வம் அவர் முகத்தில் மின்னியது.

இவர்கள் இருவரும் தயக்கமாய் ஒருவரையொருவர் பார்த்திருந்தனர்.

"டிரைவரும் அவ கட்சிதாங்கம்மா. ஆட்டோ பல்லி கணக்காய் ஊர்ந்தது. மொத்தமும் ஒரு நாடகம் அதுபோல... அந்த நேரமாய் ஒரு ரோந்து போலீசு எதுக்க வந்து, வாக்குவாதத்தைக் கேட்டுபிட்டு, 'என்னடா'ன்னு அதட்ட, நாடகம் வேற காட்சிக்கு மாறிடுச்சு.

"ஐயா, காப்பாத்துங்க– இந்த ஜிப்பாக்காரன் எங்கிட்ட முறை தவறி நடக்கானுட்டா அந்தப்பாவி." "அடடே! மூளையைப் பாரு!"

"கள்ள புத்திம்மா! ஏற்கெனவே அந்தப் பகுதி வம்பு தும்பானது தான். 'ஆ... சிக்குச்சுடா ஒரு கேசு'ன்னு என்னை போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துட்டுப் போயிட்டாங்க. சாட்சிக்கு அந்த ஆட்டோக்காரன் மடிந்தான். பொண்ணை விட்டுட்டாங்க. ஆட்டோக்காரன் என்னவோ சினிமா கணக்கா வசனத்தோடு 'சீன்' விடுறான்.

"வசமாய் மாட்டிகிட்டீங்க."

"விடுவிக்கத்தான் ஆளில்லை. தம்பிக்கு அப்போ 23 வயசிருக்க

கும். 'அண்ணாச்சி ஏதோ சபலத்தில் தப்புத்தண்டா பண்ணிட்டாரு'ன்னு இப்பவும் நையாண்டி பண்ணுவாரு."

"அப்போ என்னதான் செய்தீங்க?"

"அதான் தலைப்பு சொன்னேனே– 'வாக்கப்பில் ஓரிரவு'. அதான்.

"மறுநாள் எப்படியோ ஒரு போலீஸ்காரரை சரிகட்டி, அப்பாவுக்கு தகவல் தெரிவிச்சுட்டார் அண்ணாச்சி. அப்பா அடிச்சுப் பறந்து வந்தபிறகுதான் எனக்கு விவரம் தெரியும். அதுவரை நான் பாதி சென்னையைச் சுற்றிப் பார்த்து– அரசாங்க மருத்துவ மனையின் பிண அறையைக்கூட போய்ப் பார்த்து வந்துட்டேன். ரொம்பக் கலவரமான நாள்!"

'அதாவது, அந்த மழை இரவின் மறுநாள் அது பாவம்தான் ராஜ்' மனதிற்குள் அனுதாபப்பட்டாள், இவள்.

"காவல் துறையில் ஓரிரு பெரும் அதிகாரிகள் அப்பாவுக்குப் பரிச்சயம். ஒருத்தர் அம்மா வகையில் எங்களுக்கு உறவும்கூட. ஆக, பெரியவரை வெளியே கொண்டுவந்தாச்சு."

"........."

"ஆனா அப்பா விடுறதாயில்லை. போலீஸ் அதிகாரி, அந்த ஆட்டோ ஓட்டுநரை 'தட்டி' விசாரித்ததில் அவன் ஒரு பெரிய ரவுடி கும்பலின் சிறு அங்கம்தான் என்பது தெரியவந்தது."

"ம்..." இவளுக்குள் இனமறியாத படபடப்புக் கூடியது. முகம் வெளுத்துப்போனது.

"ஆனா, அந்தக் கும்பல் அபாயகரமானது. அதிகாரிக்கும், அவரைத் தூண்டிவிட்ட அப்பாவுக்குமாய் பல மிரட்டல்கள். அப்பாவுக்குத் தன்னுயிர் வெல்லமல்ல. ஆனா,

'உம் மகன் ராஜ் உயிரோடு இருக்கணும்னா புகாரை வாபஸ் வாங்கு."

எதை முதல்ல வெட்ட? உம்பையன் கையையா? காலையா?" என்று வெற்று மிரட்டல்களில் அரண்டுட்டார்.

"உன் ஆராய்ச்சி கட்டுரையெல்லாம் பிறகு பார்த்துக்கலாம். முதல்ல ஊருக்குக் கிளம்புன்னுட்டார், பெரியய்யா– தம்பியைக் கூட்டிட்டு... இழுத்திட்டுக் கிளம்பினோம். தம்பிக்குப் பரீட்சை போல ஏதோ இருந்த நேரம், நாங்க நாலு முரட்டு பண்ணையாட்களோடு வந்து அவரு கூடவே தங்கினோம். அவரை பொதையலாட்டம் காவலு காத்தோம்."

ராஜ் இவளிடம் குனிந்து கிசுகிசுத்தான்.

"அந்நேரம் அவங்களை ஏய்ச்சிட்டு நான் உன்னைப் பார்க்க

வந்தேன், தேவி. முடியலை..."

"ஆத்தாலம் வந்தபிறகு... தம்பி தாடி வளர்த்துகிட்டு திரிஞ்சாரு. ஆனா, பெரியவர் 'நீ வெளியே காலெடுத்து வச்சா... எம்மூச்சு நின்னுடும்டா'ன்னு அதட்டிட்டார். ஆனா, பெரியப்பா பயத்திலேயும் அர்த்தமுண்டும்மா... ரொம்பக் கெட்ட கூட்டமது. வேண்டாதவங்க கை, காலை, உயிரை எதையும் போக்குற கூட்டம். பிறவு, ஒரு மூணு மாசமாச்சு, இயா பயம் கொஞ்சம் தெளிய..." பெருமூச்செறிந்தார், நேசமணி.

"மனுஷயும் ஒஞ்சிருக்கு அண்ணாச்சி. நீங்க கிளம்புங்க" என்றான், ராஜ்.

அவர் பாத்திரங்களுடன் கிளம்பினார்.

இத்திமிடங்கள் மவுனத்தில் கரைந்தன... மணமான மவுனம்.

"மூணு மாதங்கள் கழித்து நான் வந்தபோது விஜயரங்கத்தின் வீட்டில் நீயில்லை, தேவி. கல்யாணத்திற்கான சேலைகளை எடுக்க நீ காஞ்சிபுரம் போயிருப்பதாய் சொன்னார்! 'யாருக்குத் திருமணம்?' என்று நான் குழம்ப, 'தனக்கும் உனக்கும் தான்' என்றார். நம்பமுடியாமல் அங்கிருந்த வேலைக்காரரிடம் ரகசியமாய் விசாரித்தபோதும் நீ காஞ்சிபுரம் போயிருப்பதாய்தான் அவர்களும் சொன்னார்கள். அதிகம் பேசாமல் மறுப்பினார்கள். அதில், பிழிந்த சக்கை போலானேன்!"

"எனக்கு அப்போ மசக்கை, தலைதூக்கமுடியாதளவு. தண்ணி குடித்தாலும் வாந்திதான். இனி இங்கிருக்க வேண்டாம் என்று தான் விஜயரங்கம், காஞ்சிபுரத்திலுள்ள தன் அண்ணன் வீட்டுக்கு என்னை அனுப்பினார். வருண் பிறந்த பிறகு எளிமையா வீட்டிலே தாலி முடிந்து... பிறகுதான், நான் சென்னை வந்தேன். ஆனால், முதல் சில மாதங்கள் உங்களைக் காணவில்லை என்றதும்..."

"இப்போது நீ என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய், தேவி?"

"தெரியவில்லை" என்றாள், அவள் நெடுமூச்சுடன்! •

## 22

இருவரை ஒருவர் மவுனமாய் பார்த்திருந்தனர். இருவர் முகமும் வெளுத்துச் சோர்ந்திருந்தன.

அவன் விழிகளில் சற்றே ஆத்திர சிவப்பு.



"நீ இன்னும் என்னை நம்பவில்லை? ம்... நேசமணி அண்ணாச்சி சொன்னதெல்லாம் கற்பனை. நான் கல்யாணமின்றி தவித்திருப்பது, வக்கீல் பாஸ்கரன் மூலம் உன்னைப் பற்றி அறிந்து இங்கு அழைத்துவந்த அக்கறை எல்லாம் எதேச்சை! வருண் என் மீது காட்டு பாசம், நமக்கிடையே இன்னுமிருக்கும் நேசம் எல்லாம் ஒன்றுமேயில்லை... இல்லையா? நீ விஜயரங்கத்தை மணந்துகொண்டது சரி. கவிதா, என்னைப் பற்றி கூறும் அத்தனையும் உண்மை. துன்பங்கள் உனக்கு மட்டும்தான்- எனக்கில்லை. அப்படித்தானே?" கோபத்தில் அவன் உதடுகள் துடித்தன.

"ஊகூம்..." மென்ன தலையசைத்தாள்.

"பின்னே!"

"ஏன் இப்படியெல்லாம் தப்பர்த்தம் செய்துகொண்டோம் என்பதுதான் புரியவில்லை, ராஜ்!" குரல் கூழ பேசினாள்.

அவனையே பார்த்திருந்தவன்- மென்ன புன்னகைத்தான்.

அவனது விரிந்த கரங்களுக்குள் திருப்தியுடன் ஒன்டினாள்.

இணைந்த உடல்கள் நடுங்கின.

'இனி பிரிவேயில்லை' என்பது போல ஒட்டிக்கொண்டனர். அத்தழுவலில் மோகத்தைவிட மோனமிருந்தது. ஆனந்தத்தை விட, அழுகை வரத்தது.

"யார் தப்பு ராஜ் இது! விதியிறது இதுதானா? நீங்க இத்தனைக் காலம் எனக்காய் காத்திருந்ததை என்னால் நம்பமுடியவில்லை. கல்யாணத்திற்குப் பிறகும்கூட பிற பெண்கள் பின்னால் ஓடும் ஆண்களைப் பார்த்த எனக்கு- இத்தனை உத்தமமான நீங்கள் எனக்கென்று... இது என் பாக்கியந்தான்" அவள் கைகளைப் பற்றி முத்தமிட்டாள்.

"பாக்கியம் செய்தவை என் கைகள்தான்!"

புரியாமல் விழித்தான்.

"அவற்றிற்குத்தானே முத்தம் கிடைத்தது!"

"ச்சீ... இதென்ன சிறு பையன் போன்ற பிதற்றல்?"

"இப்போதுதான் என் காதல் கைக்கு வந்திருக்கிறாள். எனக்கு சிறு பையனாட்டம் உற்சாகம் பொங்காமல் இருக்குமா!"

"அப்ப கவிதா!"

"பேராச்சடா... இன்னுமா சந்தேகம்!"

"சந்தேகமில்லை- அனுதாபம்! அவள் நிலை..."

"ஏதோ சிறுபிள்ளைத்தனமான மோகம் என் மீது. விரைவில்

ஏதேனும் ஒரு இளிச்சவாயன் அவளுக்கென்று சிக்குவான்."

"உங்களிடம் நான் சிக்கினதைப் போலவா?"

"ஏ... ஏய்... வாருறே பார்த்தியா?" மூக்கோடு மூக்கை உரசினான். அந்தளை நெருக்கம் இருவருக்கும். தாங்கக்கூடாத அவதியைத் தர, அவசரமாய் முத்தமிட்டனர்.

"நாம் சேர்ந்திருந்தது போன யுகம் போலில்லையா?" கண்கள் மூடி இளம் குரலில் முனங்கினாள்.

"ம்... நீண்ட தவத்திற்குப் பிறகு எனக்குக் கிடைச்சிட்டீங்க."

"ம்... இது தவத்திற்குப் பிறகான முக்தி!"

இறுகத் தழுவிய இருவருக்கும் இவ்வுலகம் அந்நியமானது. வெளியே மழை வலுத்து... உற்சாகமாய் பொழிந்தது.

"எழுந்திருக்கவே மனசாகலை, தேவி" கட்டிலில் சாய்ந்திருந்த ராஜ் சிறு பையனாய் சலித்தான்.

"இப்ப வருண் வந்திடுவான்."

அவசரமாய் எழுந்தவள், உடைகளைச் சீராக்கி, கூந்தலைச் சீவி முடித்தாள்.

"அவன் மெள்ள வருவான். இப்ப கிட்டே வாயேன் நீ..." குறும்பாய் அவன் புன்னகைத்த நேரம்– கதவு தட்டப்பட்டது.

"ம்மா..."

"இதோ வரேன்" ஓடிப்போய் கதவைத் திறந்தாள்.

"நனைஞ்சிட்டியா?"

"இல்லை. மணி தாத்தா குடை பிடிச்சுட்டு வந்து விட்டார்."

"சாப்பிட்டாச்சா?"

"ம்... பீன்சூம்பு" நிமிர்ந்த சிறுவனின் விழிகள் விரிந்தன.

"அங்கிள், இங்கேயா இருக்கீங்க?"

"ஆமா. இனிமே நாமெல்லாரும் எப்பவும் ஒண்ணாத்தான் இருப்போம். ஆனா, நான் உனக்கு அங்கிள் இல்லை."

"பின்னே?"

"அம்மாகிட்ட கேள்?"

எதிட்ட மகனின் ஆர்வ விழிகளைப் பார்த்து அழுத்த உச்சரித்தாள்– "அப்பா!" என்று.

"அப்போ நீங்க எங்க அம்மாவைக் கல்யாணம் செய்துக்கப் போறீங்களா?"

"கல்யாணமும் உண்டு. ஆனா, இனி செய்யப்போற கல்யாணத்தினால் இல்லை. எப்பவுமே நீ எம்பிள்ளைதான்டா வருண்!"

பிள்ளையை தோள் பற்றி ஆர்வமாய் பார்த்தான், ராஜ்.



"அப்போ டாக்டர் விஜயரங்கந்தான் எனக்கு அங்கிள் இல்லையா? அவர் 'நீ எம்பிள்ளை இல்லை'ன்னுட்டாரே... அப்போ நீங்கதான் என் அப்பாவா?"

தயங்கி கேட்டவனை இழுத்து அணைத்து முத்தமிட்டான், ராஜ்.

"ஆமாம்."

"அப்போ இத்தனை நாள்... ஏன்?"

"அந்தக் கதையெல்லாம் பிறகு சொல்றேன். உனக்குக் கொஞ்சம் விபரம் புரியட்டும்."

"ஆமா, விபரம் புரிஞ்சதும் சொல்லவேண்டிய விசயமா இதெல்லாம்?" சீண்டினாள், தேவி.

"அப்போ இப்பவே சொல்லிடலாம். பத்து ஆண்டுகளுக்கு முன்னமே நானும் உங்கம்மாவும் பிரியமாய் பழகினோம், வருண். ஆனால், கல்யாணம் செய்துக்கிறதுக்குள் பல தடைகள். வில்லன், வில்லிகள்! அதையெல்லாம் தேவி தவத்தாலே கடந்து இப்போது ஒன்னாயிட்டோம்."

"முழுசாப் புரியலைப்பா... ஆனா, முழு சந்தோசமா இருக்குது."

மூவருக்கும் பால் கலக்கி எடுத்து வந்தாள், தேவி. பாதி இரவு வரை பேச்சும், கொஞ்சலும், சிரிப்புமாய் நீண்டது.

"சரி. இனி படுக்க கிளம்பு, வருண்."

"தூக்கம் வரலியேப்பா."

அவன் பேச்சுக்கு ஆறு முறை 'அப்பா' என்றழைத்த பரவசத்தில் மகனைக் கட்டி முத்தமிட்ட ராஜ், "எங்களுக்கு வருதேடா" என்று பொய்யாய் கொட்டாவிவிட்டு, தேவியைப் பார்த்து கண்சிமிட்டினான்!

**(முடிந்தது)**

ராணி சின்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: அ.மா. சாமி, 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. அச்சிட்டவர்: பி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.